
# 30 ஆண்டுகளுக்கு முன்பே எச்சரித்தேன்! பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர்-தலைவர்கள் கண்டுகொள்ளவில்லை!



நாங்கள் மா.பெ.பொ.க.வினர் 8.8.1976-இல் புதிய அமைப்பை உண்டாக்கினோம். அப்போதே தந்தை பெரியார் வாழ்க்கையில், முதன்மையானதான வகுப்புவாரி விகிதாசார உரிமையை வென்றெடுப்பது என முடிவு செய்தோம்.

பெரியார் வரலாற்றில், இந்திய அரசு அமைப்புச் சட்டத்தை முதல் தடவையாகத் திருத்தம் செய்தது பிற்படுத்தப்பட்டோர் கல்வி உரிமையைக் காப்பாற்றுவதற்காகத்தான். அதன் விளைவாகத்தான் 15(4) என்கிற விதி அரசமைப்புச் சட்டத்தில் 1951-இல் சேர்க்கப்பட்டது.

எதற்காக அந்த விதி செய்யப்பட்டது? தொழிற் கல்வி பெறுவதற்கு-உயர் கல்வி பெறுவதற்கு ஓமந்தூரார் வழி செய்தார். அது செல்லாது என்று உயர்நீதி மன்றமும் உச்சநீதிமன்றமும் சொன்னதனால்தான் அதைப் புறங்காண வழி கிடைத்தது.

அதேபோல், மய்ய அரசில் கல்வியிலும் வேலையிலும் சமூகத்திலும் பின்தங்கிய இந்துக்கள், இசுலாமியர், கிறித்தவர், பவுத்தர், சமணர், சீக்கியர் ஆகியோர் - மற்ற அரசுக் கல்வியிலும் மய்ய அரசு வேலையிலும் விகிதாசார இடஒதுக்கீடு பெற வேண்டும் என்பதற்காக நாங்கள் 1978 முதல் இன்றும் முயற்சிக்கிறோம்.

முதலாவது பிற்படுத்தப்பட்ட வகுப்புகளின் குழுவை 1953-இல் காகா கலேல்கர் தலைமையில் நேரு அமைத்தார். காகா கலேல்கர் பார்ப்பனர்; நேர்மையானவர். பிற்படுத்தப்பட்டோர் லீக் மாநாட்டை 1944-இல் கான்பூரில் நடத்திய சிவ்தயாள் சிங் கவுராசியா என்கிற பிற்படுத்தப்பட்டத் தலைவரும் அப்போதே பெரியாரை அந்த மாநட்டுக்கு அழைத்தார். சிவ் தயாள் சிங் சவுராசியாவும் காகா கலேல்கர் குழுவில் உறுப்பினராக இருந்தார்.

1955-இல் பிரதமர் பண்டித நேருவிடம் காகா கலேல்கர் அறிக்கையை அளிப்பதற்காக, நேருவின் இல்லத்திற்கு காகா கலோல்கர், சிவ்தயாள் சிங் சவுராசியா இருவரும் சென்றனர்; குழுவின் அறிக்கையை நேருவிடம் கொடுத்தனர். நேரு அதைப் புரட்டிப் பார்த்துக் கொண்டே, "ஏழைப் பார்ப்பனர் வகுப்பு சேர்க்கப்பட வழி செய்திருக்கிறீர்களா?" என்று நேரு கேட்டார். "இல்லை. அவர்கள் இந்த இலக்கணத்துக்கு ஒத்துவரமாட்டார்கள்" என்று கலேல்கர் நேருவிடம் சொன்னார். "நீங்கள் முழுவதும் பாழ்படுத்திவிட்டீர்கள்" என்று கூறிக்கொண்டு, அந்த அறிக்கையைச் சினத்தோடு தரையில் வீசினார்.

அத்துடன் பிரதமர் நேரு அவர்கள், சில ஆண்டுகள் கழித்து, 1961இல், மத்திய அமைச்சரவையைக் கூட்டி, "பிற்படுத்தப்பட்டோருக்கு மய்ய அரசுக் கல்வியிலும் வேலையிலும் இடஒதுக்கீடு அளிப்பது இல்லை" என்று முடிவு செய்தார்.

அடுத்து, மாகாண முதலமைச்சர்களுக்கு (Demi Offical Letter) கமுக்கம் மடல்போக்கி பிற்படுத்தப்பட்டவர்களுக்குக் கல்வியிலோ இடஒதுக்கீடு அளிக்கக்


சுவடி : 44
ஏடு : 11
செப்டம்பர்-அக்டோபர் 2020
*
ஆசிரியர்
வே.ஆனைமுத்து
*
ஆசிரியர் குழு
க. முகிலன்
இரா.பச்சமலை
வாலாசா வல்லவன்
வையவன்
சி. பெரியசாமி
கோவிராமலிங்கம்
சி. நடராசன்
மங்கலம் அரசன்
தி.துரைசித்தார்த்தன்
ஆ. முத்தமிழ்ச்செல்வன்
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
'சிந்தனையாளன்'
பெரியார்-நாகம்மை அறக்கட்டளை வளாகம்
மனை எண்.277/2
சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை,
பெரியார்-நாகம்மை நூலகம்
அம்பத்தூர், சென்னை - 600 050.
தொடர்புக்கு :
94448 04980
86681 09047
95975 26990
மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
சன் நகலகம், சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
www.keetru.com
*

கூடாது. படிக்கப் பண உதவி செய்யலாம்'' என்று எழுதினார். பண்டித நேரு, பச்சை எதிரி-பிற்படுத்தப் பட்டோருக்கு

7.5.1978-இல் முதல் முதலாக நானும் சீர்காழி மா. முத்துச்சாமியும் தோழர் இராம் அவதேஷ் சிங் அவர்களுடன் முசாபர் நகரில் நடைபெற்ற உத்தரப்பிரதேச பிற்படுத்தப்பட்டோர் மாநாட்டுக்கு அழைத்துச் செல்லப் பட்டோம். அந்த மாநாட்டுக்குச் சிவ்தயாள் சிங் சவுராசியா தலைமை தாங்கினார். அவர்தான் நேருவின் இந்த நடப்பை மாநாடு முடிந்தவுடன் அங்கே மேற்கண்ட விவரங்களை என்னிடம் கூறினார்.

நாங்கள், வாழப்பாடி கூ. இராமமூர்த்தி (நாடாளுமன்ற உறுப்பினர்), வே. ஆனைமுத்து, ம. இராசு, சீர்காழி மா.முத்துச்சாமி நால்வரும் அன்றைய குடியரசுத் தலைவர் நீலம் சஞ்சீவ ரெட்டியை 8.5.1978-இல் குடியரசுத் தலைவர் மாளிகையில் நேரில் சந்தித்தோம். அவர் பொறுமையாக எங்கள் வேண்டுகோளைக் கேட்டுவிட்டு, உடனே, ''நான் பழைய தில்லியில் ஆங்கிலத்தில் பேசினேன். எல்லா மக்களும் 'இந்தியில் பேசு! இந்தியில் பேசு' எனக் கூச்சலிட்டனர். 'நீங்கள் தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்பு மாநாடு நடத்துங்கள். நான் வந்து தொடக்கி வைக்கிறேன்' என்று கூறித் திசைதிருப்பினார்.'' ஏனெனில், அவர் ரெட்டி - மேல்சாதிக்காரர்.

24.6.1978-இல் சென்னையில் முதலாவது இட ஒதுக்கீடு மாநாட்டை நடத்தினோம். அதில் எல்லா மாநிலங்களில் இருந்தும் பிற்படுத்தப்பட்ட வகுப்புத் தலைவர்கள் பங்குபெற்றார்கள். அதன் விளைவாக நானும் பிற்படுத்தப்பட்ட வகுப்புத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தோழர் இராம் அவதேஷ் சிங் அவர்களும் கேரளா, கர்நாடகா முதலான அண்டை மாநிலங்களுக்குச் சென்றோம்.

அதனையடுத்து தமிழ்நாட்டிலிருந்து வே. ஆனைமுத்து தலைமையில் நால்வர் ஒரு குழுவாகப் பீகாருக்குப் பயணம் சென்றோம். தந்தை பெரியார் நூற்றாண்டை ஒட்டி, 17.9.1978 முதல் 18.10.1978 முடிய 32 நாள்கள் பீகார் மாநிலத்தில் வே. ஆனைமுத்து, சீர்காழி மா. முத்துச்சாமி, திருச்சி து.மா.பெரியசாமி, வேலூர் நா.ப.செந்தமிழ்க்கோ, நால்வரும் இராம் அவதேஷ் சிங்கு டன் இடஒதுக்கீடு பற்றிப் பரப்புரை செய்தோம். 1978 அக்டோபர் 25, 26-இல் எங்களுக்கு எதிராகப் பரப்புரை செய்யப் பிரதமர் மொரார்ஜி தேசாய் பீகாருக்குப் பயணம் வந்தார். கல்லையும் செருப்பையும் மக்கள் அவரை நோக்கி வீசினர். அவர் எங்குமே பேசமுடியாமல் தில்லிக்குத் திரும்பிப் போனார். அதில் கற்ற பாடம்தான், 20.12.1978-இல் நாடாளுமன்றத்தில், ''இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் குழு அமைப்போம்'' என்ற அறிவிப்பதில் முடிந்தது.

பீகாரில் நடைபெற்ற போராட்டத்தில் மக்கள் பத்தாயிரம் பேர் சிறைபுகுந்தனர். 01.01.1979-இல் பிந்தேசுவரிபிரசாத் யாதவ் தலைமையில் இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் குழு அமைக்கப்பட்டது. மண்டல் அவர்கள் நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, பிற்படுத்தப்பட்டவர்களின் வாழ்நிலையை ஆய்வு செய்து அப்போதைய பிரதமர் இந்திரா காந்தியிடம் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை 31.12.1980இல் அளித்தார்.

இந்திரா காந்தி காலத்தில், ''26.1.1982-இல் குடியரசு நாள்; அதற்குள் மண்டல் குழு அறிக்கையை நடைமுறைக்குக் கொண்டுவரவில்லை என்றால், மா.பெ.பொ.க.வினர் 26.1.1982-இல் துக்க நாளாக அனுசரித்து, அவரவர் வீட்டில் கருப்புக் கொடி ஏற்றுவோம்'' என்று நான் கட்சிச் சார்பில் பிரதமர் இந்திரா காந்திக்குக் கடிதம் எழுதினேன். அவர் தந்திரமாக, ''இடஒதுக்கீடு செய்தி உள்துறை அமைச்சர் கியானி ஜெயில்சிங் கவனிக்கிறார். அவருக்கு நேரே எழுதுங்கள்'' என்று எனக்கு மடல் எழுதினார்.

**நான் உள்துறை அமைச்சர் அவர்களுக்கு நேரே எழுதினேன். அவர், ''25.1.1982 மாலை தில்லியில் என்னை அலுவலகத்தில் சந்தியுங்கள்'' என்று பொறுப்போடு எழுதினார். நான் 25.01.1982 காலையில் தில்லிக்குப் போனேன்.**

நான், ஜெய்ப்பால் சிங் கஷ்யாப், எம்.பி., தில்லி மா.பெ.பொ.க. செயலாளர் ச.தமிழரசு, சாலை இளந்திரையன் ஆகியோர் சரியான நேரத்தில் உள்துறை அமைச்சகத்திற்குப் போனோம். ஜெயில் சிங் அவர்கள் எங்களுடன் மனம் விட்டுப் பேசினார். ''விதி 16(4)இல் வரும் Backward Class of Clitizens என்பதற்கு என்ன பொருள் என்பதை நான் இன்றைக்குத்தான் புரிந்துகொண்டேன்'' என்று என்னிடம் வெளிப்படையாகச் சொன்னார். அது எனக்கு வயிற்றில் பால்வார்த்தது போல் ஆனது.

தில்லியில், நாங்கள் 2016 வரை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தை நடத்தினோம். 3.3.1982இல் இரண்டாவது கூட்டத்திற்குக், காங்கிரசு நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாருமே வரவில்லை. அதுபற்றி, ஜெயில்சிங் அவர்களிடம் 4.3.1982-இல் முறையிட்டேன். அவர் ''என்ன வேண்டும்? சொல்லுங்கள்''

என்று கேட்டார். நான் ''இப்போதே, இன்றைக்கே நாடாளுமன்றத்தில் மண்டல் குழு அறிக்கையை வெளியிட்டு அதன் பரிந்துரைப்படி பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்படும் என அறிவியுங்கள்'' என்று சொன்னேன். அதன்படி அவர், 4.3.1982 அன்று மாலை 4.30 மணிக்கு மக்களவையில் ''அரசு மண்டல் பரிந்துரையை சாதி அடிப்படையில் நடைமுறைப்படுத்தும்'' என்று அறிவித்தார்.

இதை அறிந்த பிரதமர் இந்திரா காந்தி, 4.3.1982 அன்றே மேலவையில் ''அரசு மண்டல் பரிந்துரையை அமுல் செய்யும்; ஆனால் பொருளாதார அடிப்படையில் ஒன்றிய அரசில் இடஒதுக்கீடு வழங்கப்படும்'' என அறிவித்தார்.

ஆனால் நாங்கள் இடைவிடாமல் முயற்சித்ததனால் வி.பி. சிங் அவர்களால் சாதி அடிப்படையில் இடஒதுக்கீடு 13.8.1990 அன்று அமுலுக்கு வந்தது. அவர் வேலையில் மட்டும் இடஒதுக்கீடு அளித்தார்; கல்வியில் இடஒதுக்கீடு அளிக்கவில்லை. அர்ஜுன் சிங் கல்வி அமைச்சராக இருந்த போது 2005-இல் கல்வியில் இடஒதுக்கீடு அளித்து சட்டம் இயற்றப்பட்டது. நான் 2017 முதல் தில்லிக்குச் செல்வதை நிறுத்திக் கொண்டேன். இனி, தில்லிக்குப் போக வாய்ப்பு இல்லை.

**கட்சி பாராமல், உள்சாதி பாராமல், தலைமை யார் என்று பாராமல் - வகுப்புவாரியாக விகிதாசார இடஒதுக்கீடு வேண்டும் என்று கோரிக்கை வைத்து அனைத்திந்திய அளவில் போராட வேண்டும். ஏன்?**

மண்டல் அறிக்கை தெளிவானது.

இந்துக்களில் கல்வியிலும் சமூகத்திலும் பிற்படுத்தப்பட்டோர் 52 விழுக்காடு.

இந்துக்கள் அல்லாதவர்களில் கல்வியிலும் சமூகத்திலும் பிற்படுத்தப்பட்டோர் 52 விழுக்காடு.

மொத்தத்தில் இந்து, மற்ற மதத்துக்காரர்கள் எல்லாம் சேர்த்து 3740 வகுப்புகள். வாஜ்பாயி காலத்தில் புதிதாகச் சேர்க்கப்பட்ட வகுப்புகளின் எண்ணிக்கை 600. ஆக மொத்தம் 4340 வகுப்புகள். இது மொத்த மக்கள் தொகையில் 57 விழுக்காடு.

பட்டியல் வகுப்பினருக்கு 1970 முதல் 15 விழுக்காடு அளிக்கப்பட்டது. பட்டியல் பழங்குடியினருக்கு 1970-இல் 7.5 விழுக்காடு அளிக்கப்பட்டது. பட்டியல் வகுப்பினர், 2011-இல் கணக்குப்படி 16.6 விழுக்காடாக உள்ளனர். பட்டியல் பழங்குடியினர் 2011 கணக்குப்படி 8.6 விழுக்காடாக உள்ளனர்.

**இடஒதுக்கீட்டிற்குள் வராத மேல் சாதியினரில் பொருளாதாரத்தில் நலிந்தவருக்கு இந்திய அளவில் இடஒதுக்கீடு 10 விழுக்காடு. இது எந்தக் கணக்கிலும் எடுக்கப்படவில்லை.**

**அப்படியானால் வகுப்புவாரி விகிதாசாரம் என்பது பின்வருமாறு வழங்கப்பட வேண்டும். அதற்கேற்ப விதிகள் 15(4), 16(4), 29(2), 338(10) ஆகிய விதிகள் திருத்தப்பட்டு பின்வருமாறு வழங்கப்பட வேண்டும் எனக் கோரி எல்லோரும் போராட வேண்டும்.**

**பின்கண்டதே விகிதாசாரம் ஆகும்.**

| | |
|---|---|
| **கல்வியிலும் சமூகத்திலும் பிற்படுத்தப்பட்டோர்** | 57% |
| **பட்டியல் வகுப்பினர்** | 17% |
| **பட்டியல் பழங்குடியினர்** | 9% |
| **மேல் சாதியினர்** | 17% |
| | ------ |
| | 100% |
| | ------ |

இருக்கின்ற மொத்த இடங்களில் கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் இந்திய அளவிலும் மாநில அளவிலும் அந்தந்த வகுப்புக்கு எண்ணிக்கைக்கு ஏற்ப அடைந்து தீருவதே நம் வாழ்நாள் குறிக்கோள் என்பதாக இருக்க வேண்டும். இது என் அவா; எங்கள் அவா. எல்லோரும் இதைக் குறிக்கோளாக ஏற்றுக்கொள்ளும்படி பணிவன்புடன் வேண்டுகிறேன்.

நான் 1990-இல் எச்சரித்தேன்.

''ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்குப் போதிய விழிப்புணர்வு ஊட்ட இதுவரை நாம் தவறிவிட்டோம். இனியும் நாம் தவறினால், நாடாளுமன்ற உறுப்பினர்களின் அறியாமையையும், ஒடுக்கப்பட்ட வகுப்புத் தலைவர்களின் அடிமைப் புத்தியையும் பயன்படுத்திக் கொண்டு, மொத்த இடஒதுக்கீடு அளவைப் பற்றிக் குறிப்பிடாமலே, முற்பட்ட வகுப்புகளிலுள்ள ஏழைகளுக்கு இடஒதுக்கீடு செய்யலாம் என்று பாரதிய சனதா அரசோ, காங்கிரசு அரசோ அரசமைப்புச் சட்டத்தின் விதிகளைத் திருத்தி விட முடியும். எச்சரிக்கை! எச்சரிக்கை! அது நடந்து விட்டது.''

(வே. ஆனைமுத்துவின் கருத்துக் கருவூலம் - விகிதாசார வகுப்புவாரி இடப்பங்கீடு நூல், பக்கம் 216, 217).

**01-10-2020** **வே. ஆனைமுத்து**

# பெரியாரை நன்கு புரிந்தேன்; போற்றினேன்!
# பெரியார் என்னைப் புரிந்தார்; பாராட்டினார்!

**வே. ஆனைமுத்து,** சென்னை

**என்** 18-ஆவது அகவை 1943-இல் முடிந்தது. அதுவரை நான் படித்தவை - ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், விவேகசிந்தாமணி, மூதுரை, திருவருட்பா முதலான நூல்களாகும். அவை கடவுள் ஒருவர் உண்டு; மனிதனை மனிதன் நேசிக்க வேண்டும்; மது அருந்துவது தீது; பிறன்மனையை விரும்புவது தவறு; சூதாடுவது கேடு என்ற உணர்வுகளை எனக்கு ஊட்டின. அப்போதே குடிஅரசு, விடுதலை, தமிழ்ப்பொழில் ஏடு களையும், திருக்குறளையும் ஆசிரியர் ந. கணபதி மூலம் பெற்றுப் படித்தேன். மனிதனை மனிதன் நேசிக்க முடியாத செயற்கைத் தடைகள் உண்டாக்கப்பட்டிருப் பதை இவற்றின் மூலம் உணர்ந்தேன். இவற்றை உண்டாக்கியவர்களும் காப்பாற்றியவர்களும் பார்ப்ப னர்கள் என்பதை உணர்ந்தேன்.

28.10.1944 அன்றுதான் முதன்முதலாகத் தந்தை பெரியார் அவர்களைப் பார்த்தேன். அன்றே இரண்டு இடங்களில் அவருடைய உரையைக் கேட்டேன். அன்றே ‘‘கடவுள் ஒருவர் இருக்க வேண்டிய தேவையில்லை’’ என்பதை ஒருவாறு உணர்ந்தேன். திருக்குறளையும், குடிஅரசுப் பதிப்பக வெளியீடுகளையும், தேவநேயப் பாவாணரின் ‘ஒப்பியல் மொழி நூலை’யும் 1946-க்குள் ஆழ்ந்து படித்தேன். உழைக்கும் மக்கள் கூட் டத்தை அடக்கி ஒடுக்கிச் சுரண்டுவதற்குத் திட்டமிட்டே வருணசாதி அமைப்பு - நால்வருண சாதி அமைப்பு கற்பனையாகவும் செயற்கையாகவும் பார்ப்பனர்களால் உருவாக்கப்பட்டிருப்பதையும் அவற்றின் விளைவாகப் பெரிய எண்ணிக்கைக் கொண்ட திராவிட இனத்தமிழர் கள் கீழ்ச்சாதியாகவும் இழிசாதியாகவும் ஆக்கப்பட்டி ருப்பதையும் நன்கு புரிந்தேன்.

1946-1949-ஆம் ஆண்டுகளில் ஒரே மூச்சில் தொல்காப்பியம், திருக்குறள் இவற்றின் பல உரை களையும் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அத்துடன் மாக்ஸ்முல்லரின் ஆங்கில மொழிபெயர்ப்பில் மனு நெறி அல்லது மனு தரும சாஸ்திரம் (Code of Manu), சுக்கிர நீதி, இவற்றை அண்ணாமலைப் பல்கலைக் கழக நூலகத்தில் ஆய்வுப் பகுதியில் அமர்ந்து படிக்க வும் குறிப்பெடுக்கவும் செய்தேன்.

பெரியார் புகட்டிய வருண சாதி பற்றிய விளக்கங் களும், அவையே சமுதாய வாழ்க்கை, வீட்டு வாழ்க்கை - சமய வாழ்க்கை இவற்றில் படிந்து விட்டதையும், இவற்றை இந்த வடிவில் காப்பாற்றி நிலைக்க வைத் திட அரசர்களும் பேரரசர்களும் அடிப்படையாக விளங் கியதையும் தெளிவுபட உணர்ந்தேன்.

எதிர்பாராத தன்மையில், 1947 மே திங்களில் மறைமலையடிகளாரை நேரில் பல்லாவரம் இல்லத்தில் கண்டு உரையாடும் வாய்ப்பைப் பெற்றேன். அதற்கு முன்னரே அன்னாரின் நூல்களைப் படித்திருந்தேன். அதே மூச்சில் பா.வே. மாணிக்க நாயக்கரின் ஆய்வு நூல்கள் அனைத்தையும், பாரதிதாசன் கவிதைகளையும், ‘அக்டோபர் புரட்சி’ என்னும் லெனினின் பொதுவுடை மைப் புரட்சிப் பற்றிய குறு நூலையும் வாங்கிப் படித் தேன். எந்த நூலைப் படித்தாலும் முதன்மையான வற்றைக் குறிப்பு எடுக்கும் பழக்கம் எனக்கு உண்டு. அதனால் 1950-இல் என் ‘குறள் மலர்’ ஏட்டில் சில கட்டுரைகளை இவற்றை விளக்கி எழுதினேன். அவற் றைப் பார்க்கவும் படிக்கவும் பெரியாருக்கு வாய்ப்பு இருந்தது.

15.1.1952 முதல் இந்திய அரசமைப்புச் சட்டத்தை முறையாகப் படிக்கத் தொடங்கினேன். இந்தி மொழி இந்தியாவின் ஆட்சி மொழியாக ஆக்கப்பட்டிருப்பது; பழைய வழக்கச் சட்டங்கள் - 1950-இல் அரசமைப்புச் சட்டம் வந்த பிறகும் செல்லுபடியாகும் என்கிற கெட்டி யான ஏற்பாடு; உடைமை வைத்திருப்போருக்கு உள்ள உறுதியான பாதுகாப்பு. இவை இச்சட்டத்தின் உயிரான கூறுகளாக இருப்பதை நன்கு உணர்ந்தேன். இவற்றைப் பற்றி விரிவாக, 13.4.1954-இல் பெரம்பலூரில் பெரியார் முன்னிலையில் பேசிடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அன்றே அவருடைய நெஞ்சில் எனக்கு நல்லதொரு இடம் கிடைத்துவிட்டது.

1956 மே முதல் முழுநேரப் பணியாளனாக நான் ஆனேன். 1957-இல் திருச்சியிலிருந்து நான் சொந்த மாக வெளியிட்ட ‘குறள் முரசு’ வார ஏட்டில் ‘‘இன்றைய அரசமைப்புச் சட்டப்படி ஆட்சி நடத்தும் எவராலும் சமுதாய, பொருளாதார விடுதலையை ஒருபோதும் பெற்றுத்தர முடியாது’’ என்பதை விளக்கிப் பல கட்டு ரைகளை எழுதினேன். அவற்றைப் பாராட்டும் தன்மை யில், அப்படியே அக்கட்டுரைகளை ‘விடுதலை’யில் பெரியார் வெளியிட்டார்.

அன்னாரின் கட்டளையை ஏற்று, வருணாசிரம அமைப்புக்கு அரசமைப்புச் சட்டத்திலுள்ள பாதுகாப்புத் தரும் பகுதிகளை அச்சிட்டுக் கொளுத்தும் போராட்டத் தில் 10,000 திராவிடர் கழகத் தொண்டர்கள் ஈடுபட்டுக்

கைதானோம். 3,000 பேர் தண்டிக்கப்பட்டுச் சிறை வைக்கப்பட்டோம்.

எனக்கு 18 மாதம் கடுங்காவல். கழிவுக்குரிய நாள்கள் போக 360 நாள்கள் நான் சிறையிலிருந்தேன். என் ஓரளவு படிப்பும், நல்ல கையெழுத்தும் நான் சிறை அறையிலேயே அமர்ந்து எழுதவும் படிக்கவும் ஏற்ற வாய்ப்பை அளித்தன. அந்த அரிய வாய்ப்பை முழு மையாகப் பயன்படுத்தினேன். மனுநீதியின் நல்ல தமிழாக்கம், பகவத் கீதையின் விரிவான தமிழாக்கம், திருக்குறள் பரிமேலழகர் உரை, தென்னிந்தியச் சாதி களும் குலங்களும் பற்றிய ஆங்கில நூல் தொகுதிகள், இந்துச் சட்டம் இவற்றைச் சிறையில் அமைதியுடன் ஆழ்ந்து படிக்கவும், ஒப்பிட்டுப் பார்க்கவும், குறிப்புகள் எழுதவும் 1330 குறட்பாக்களையும் கொண்டு கூட்டி எழுதவும் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டேன்.

1922 முதல் புதியதோர் சிந்தனைக்கு ஆட்பட்ட ஈ.வெ.ரா., இந்திய-தென்னக-தமிழகச் சமுதாயத்தை எவ்வளவு கூர்மையாக நோக்கி, தெளிவாகப் புரிந்து கொண்டு 26.12.1926-இல் சுயமரியாதை இயக்கத் தைத் தோற்றுவித்து, விடாப்பிடியாகத் தம் சாதி ஒழிப்புக் கொள்கையை, கடவுள் மறுப்புக் கொள்கையைக் கூறியும் எழுதியும் வருகிறார் என்பதைத் துல்லியமாக சிறை வாழ்க்கையின் போதுதான் நான் புரிந்து கொண்டேன்.

**ஓர் இயக்கத்தின் நிறுவனராகவும், ஒரு கொள்கையின் தோற்றுநராகவும், விளக்கவுரை யாளராகவும், பரப்புநராகவும் விளங்குகிற அப் பெருமகனாரைப் போற்றுவது என்பது - அவரு டைய கூற்று ஒவ்வொன்றையும் தக்க இலக்கிய, வரலாற்று, அரசமைப்புச் சட்ட - இந்துச் சட்டச் சான்றுகளுடன் கூடிய ஆழ்ந்த அகன்ற ஆய்வை நாம் மேற்கொள்ளுவதும், அதன்வழி பெரியாரை நிலைநாட்டுவதும்தான் என நான் முடிவெடுத் தேன். அதற்கான தரவுகளை நாள்தோறும் துழா வினேன்; தேடிக் கண்டேன்; சலித்தேன்; தெளிவான வற்றையும் உறுதியானவற்றையும் பதிவு செய்தேன்.**

**முதலாவதாக, 'சாதி பற்றிக் கரிசனம் கொள் ளாத பொதுவுடைமைக்காரரும், பொதுவுடைமை பற்றிப் பேசுவதை ஒத்திவைத்துவிட்ட திராவிடர் கழகத்தினரும் கைகோத்துச் செயற்பட வேண் டும்' என 1962-இல் பெரியாரிடம் கோரினேன். அவர் 1964-இல் கச்சனம் மாநாட்டில் தொடங்கி, அதை வரவேற்றுச் செயற்படுத்தினார். இது இயக்கத்தில் என்னால் ஏற்பட்ட தாக்கம்.**

இரண்டாவதாக, விகிதாச்சார வகுப்புவாரிப் பிரதி நிதித்துவம் பற்றிய அவருடைய கோட்பாட்டைப் புரிந்து கொண்ட என் கருத்தை, அவரே ஒரு குறு நூலாக 1965-இல் வெளி யிட்டார். அதுவே முதன்முதலாக அச்சில் வந்த என் நூல் ஆகும்.

1969-இல், 'அனைத்துச் சாதியினரும் அருச்சகர் ஆகலாம்' என்பதை விளக்கி எழுதும்படி என்னைப் பணித்தார். காசநோயோடு திருச்சி மருத்துவமனை யில் போராடிக் கொண்டிருந்த நான், அன்றுவரையில் புரிந்திருந்த என் சட்ட அறிவைக் கொண்டு, ஒரு தெளிவான கருத்தை உருவாக்கித் தந்தேன்.

'அரசு நிருவாகத்திற்குட்பட்டவை இந்து சமயக் கோவில்கள். அவற்றில் அருச்சகராக அமர்த்தப்படு வோர் அரசுப் பொதுப் பணியாளராகக் கருதப்பட வேண்டும். அரசுப் பணிக்கு (Public Office) தேர்வு செய்யப்பட ஒரு கல்வியும் தேர்வும் நடத்தப்பட வேண் டும். அதில் தேறியோரெல்லாம் அருச்சகர் ஆக்கப்பட வேண்டும்' என்று எழுதினேன். அது பெரியாரைக் கவர்ந்தது. அப்போதே என்னைப் பாராட்டினார்; அதை ஏற்று 'தடையும் விடையும்' என்ற தலைப்பில் 1969 நவம்பரில் 'விடுதலை' ஏட்டில் வெளிவரச் செய்தார். அதைப் படித்துப் புரிந்தோரெல்லாம் பாராட்டினர். இன்று அது, அதே வடிவத்தில், கலைஞர் கருணாநிதி அவர்களின் ஆட்சியில் செயற்பாட்டுக்கு வந்துவிட்டது மகிழத்தக்கது.

ஆனாலும், அதற்குப் பிறகும் இந்தியாவில் நான்கு வருணங்கள் உண்டு. தென்னகத்தில் இரண்டு வரு ணங்கள்-பிராமணன், சூத்திரன் உண்டு என்பதற் கான கெட்டியான பாதுகாப்பு அரசமைப்பு விதிகள் 13, 25(2)அ, 372 இவற்றில் உள்ளன. இவற்றை அடி யோடு நீக்கினாலன்றி, நம் பேரில் சுமத்தப்பட்ட 'சூத்திரப்பட்டம்' போகாது. இதைச் செய்திட 1947-இலேயே மேதை அம்பேத்கர் முயன்றார்; பார்ப்பன அரசு அவருடைய இதுபற்றிய இந்துச்சட்டத் திருத்த வரைவை 1951-இல் தள்ளுபடி செய்தது.

**பெரியார், 3.11.1957-இல் முடிவு செய்து, 26.11.1957 அன்று இவ்விதிகளை அச்சிட்டு எரித் தார். அதன்பிறகு 51 ஆண்டுகள் கழித்தும் இவ் விதிகள் இன்றும் கல்லுப்போன்று கெட்டியாக அரசமைப்பில் உள்ளன. இது உண்மை.**

இதற்கிடையில், தந்தை பெரியார் அவர்கள், ''இந்து மதத்தை விட்டு வெளியேறுங்கள்!'' என 1973-இல் பாடாலூரில் ஓர் அறைகூவல் விடுத்தார். அவர் கருதுகிறபடி, எந்தச் சூத்திரனும் வெளியேற முடியாது என்பது என் திடமான கருத்து.

இக்கருத்துக்குத் தொடர்புடைய எல்லாச் சட்டச் சான்றுகளையும் எழுதிக்கொண்டு போய்ப் பெரியாரிடம் தந்தேன்; விளக்கிச் சொன்னேன். என் விளக்கத்துக்கு மறுமொழி உரைத்தார். அவை எப்படிப் பொருந்தா

தவை என்பதைப் பணிவோடும் கண்டிப்போடும் திருச்சி பெரியார் மாளிகையில் 1973 ஆகஸ்டில் அவரிடம் முன்வைத்தேன்.

"தப்பாச் சொல்லிட்டேன்யா, யாரையும் கேட்காம சொல்லிட்டேன்யா" என்று கூறி, உடனே தம் கை களைப் பிசைந்துகொண்டு, குனிந்த தலை நிமிராமல் சிந்திக்கத் தொடங்கினார். என் உடல் நாணிக் குறுகியது. உடனே அடுத்த கட்டடத்துக்குப் போய்விட்டேன்.

பின்னும் ஒரு மணிநேரம் கழித்து அவரிடம் சொல்லிக் கொண்டு போக வேண்டி, பகல் 12 மணிக்கு நானும் நோபிள் கு. கோவிந்தராசுலுவும் அவருடைய இருக்கையை அணுகினோம். அவரோ குனிந்த தலை நிமிராமல் வேகவேகமாக எழுதிக் கொண்டிருந்தார்.

என்ன எழுதினார்?

**"நான் முதலில், 'நான் இந்து அல்ல' என்று சொல்லிவிட்டால் இழிவு நீங்கிவிடும் என்றுதான் கருதினேன். பிறகு சட்டங்களைப் பார்க்க ஆரம் பித்த பிறகு கிறித்தவர்கள், முசுலிம்கள் தவிர்த்த, இந்தியாவில் உள்ள மக்கள் அனைவரும் இந்துக் கள் - இந்துக்கள் என்றால் சூத்திரர்கள்; வேசி மக்கள் என்று பல இடங்களில் காணப்படு கின்றன. ஆதலாலேயே தீவிர முயற்சி எடுக்க வேண்டும் என்று தோன்றுகிறது." ('விடுதலை' பெரியார் 95ஆவது பிறந்த நாள் விழா மலர் 17.9.1973); (பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் - பக்கம் 1981).**

நான் சொன்ன சட்ட விளக்கத்தை உள்வாங்கிய உடனேயே தந்தை பெரியார் வேகவேகமாக எழுதியது இதுதான். நிற்க.

இதன் முடிவு அத்துடன் நிற்கவில்லை. 1973 செப் டம்பர் இறுதியில் என் கருதுகோள்களை சென்னை யிலுள்ள வழக்கறிஞர்கள் பலர் ஏற்கவில்லை எனக் கூறினார். நான் அடுத்த வாரமே இந்துச்சட்ட மூலங்கள் அல்லது பண்டிதர்களின் கருத்துரைகள் (Elements of Hindu Law or Ordination of Pandits) மற்றும் அறிஞர் கள் மெய்னி (Maine), டி.எஃப். முல்லா (D.F. Mulla) முதலானோரின் இந்துச் சட்டங்கள், அரசமைப்பு விதிகள் இவற்றைத் திரட்டித் தமிழில் மொழிபெயர்த்து, அவரு டைய பார்வைக்கு வைத்தேன்.

அவற்றையெல்லாம் படித்தார்; அவற்றை ஏற்றுக் கொண்டார் என்பதற்கு அறிகுறியாக, "இவ்வளவை யும், இனிமேலே நான் படிச்சிக்கிட்டுப் பேசமுடியுமா? நான் சுற்றுப்பயணம் போறேன். நீயே என்கூட வந்து எல்லா ஊரிலேயும் இதைப் பேசிவிடு" என்று மனந் திறந்து கூறிப் பணித்தார்.

சட்ட விளக்கங்களை நான் சொன்னேன் என்பதை, 4.11.1973 அன்று திருச்சி சிந்தனையாளர் கழக விருந்தளிப்பு விழாவில் பெரியார் குறிப்பிட்டார். அது பின்வருமாறு :

"உள்ளபடி ஒரு அளவிலே நான் திருப்தியாக இருந்தது - 'நாம் அதிலே இல்லை; மற்றவர்களுக்குச் சொல்லலாம் என்று நினைத்தேன். பகுத்தறிவாளர் கள், நாத்திகர்கள், மதமற்றவர்கள் - இந்துக்கள் அல்ல என்று சொல்லிக் கொள்பவர்கள் இருக்கலாம். இந்த இழிவிலே சம்பந்தமில்லை' என்று அப்படி நினைத் தேன் நான். ஆனால் சட்டம் நண்பர் ஆனைமுத்து படித்துக் காண்பித்தார் - இந்தியாவிலே இருக்கிற கிறித்தவன் தவிர, முசுலிம் தவிர மற்றவன் எல்லாம் இந்து; அவன் யாராயிருந்தாலும் என்று. (பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் - பக்கம் 2043)."

இதை ஊரெல்லாம் சொல்லும்படிப் பணித்தார் அல்லவா? அப்பயணம் தொடங்கியது. 18.11.1973 முதல் 28.11.1973 வரையிலான, பெரியாரின் 11 நாள் இறுதிக்கட்டப் பரப்புரைப் பயணத்தில் - 10 நாள்கள் நான் பங்கேற்றேன். கடலூர் கூடடத்தன்று வயிற்றுப் போக்குடன் துன்புற்றுக் கடலூர் வழக்குரைஞர் சனார்த் தனம் இல்லத்தில் இருந்தார், பெரியார். கூட்டத்தில் அவர் பங்கேற்காததால், நானே பேசி முடித்தேன்.

அடுத்த நாள் காலையில் நேரில் அவரைப் பார்த் தேன்; கண்கள் உள்ளே போய்ச் சோர்வாக இருந்தார். "தண்ணீர்க் குழாய் பீச்சிட்டு அடிக்குமே அப்படி பத்துத் தடவை வயித்தாலே போச்சி. அதான் நான் வரலே" என்று தம் இயலாமையைக் கூறினார்.

ஏற்கெனவே, 1973 செப்டம்பரில் ஒரு 16 பக்கம்; அக்டோபரில் பரமத்தி பாண்டமங்கலம் கூட்டத்தில் ஒரு 200 பக்கம் - "பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்" நூலின் அச்சிட்ட படியை அவர் பார்த்துவிட்டார். கடலூ ரில் 400 பக்கங்களை அன்று தந்தேன். 10 மணித் துளிகள் புரட்டிப் பார்த்துவிட்டு, "நல்லா இருக்கு. இனிமே எனக்குக் காட்ட வேண்டாம்; செய்" என மன நிறை வோடு கூறினார்.

அந்த நிலையில் அவர் பயணித்த அம்பாசிடர் ஊர்தியிலேயே என்னையும் ஏற்றிக்கொண்டார். கொடு மையிலும் கொடுமை அது! உடல் அனத்தல், வயிற்று உளைச்சல் இவற்றுடன் பயணித்தார். நேரே தருமபுரி அடைந்தோம்.

அடுத்த நாள் சேலம் கோட்டை மைதானத்தில் பொதுக்கூட்டம்; அ. சித்தய்யன், கி. பச்சமுத்து, ஆர். நடேசன், சின்னத்தம்பி ஆகியோரின் ஏற்பாடு அது. பொத்தனூர் க. சண்முகம் தலைமை. பெரியாருக்கு முன்னதாக நான் பேசினேன். 1½ மணி நேரத்துக்கு

மேல் நீரோட்டமான நடை, அடுக்கடுக்கான சட்ட ஆதாரங்கள், பெரியாரின் கருத்துச் செழுமைகள் இவற்றை விளக்கிப் பேசினேன்.

வைத்த கண் வாங்காமல் என்னைப் பார்த்துக் கொண்டே இருந்தார் பெரியார். அவரைப் பேச அழைத்தவுடன், யாரையுமே விளிக்காமலே, "**பேரறிஞர் ஆனைமுத்து அவர்களே!**" என விளித்து விட்டுக் கடல்மடை திறந் தாற்போலப் பேசினார். கூட்டம் ஆர்ப்பரித்தது. என்னைக் கட்டிப்பிடித்து மேடையிலிருந்து இறக்கி, உச்சி மோந்தனர் சித்தய்யனும் பச்சமுத்துவும்.

பெரியாரின் அந்தப் பாராட்டு மொழி காற்றோடு போய்விடவில்லை.

சேலத்தில் பெரியார் அவர்கள் என்னைப் பற்றிக் கூறியதை அப்படியே அச்சுப்போட்டு, சேலம் ஆத்தூர் தோழர் எஸ்.ஜி.எஸ். சாகிப்ஜி (இன்று 2008, 70 வயது) என்பவர், சென்னையில் 8, 9.12.1973 நாள் களில் நடந்த இழிவு ஒழிப்பு மாநாட்டில் ஆயிரக்கணக் கானோருக்கு வழங்கிவிட்டார்.

பெரியாரை நான் நன்கு பயின்றேன்; நன்கு புரிந்தேன். அவரை நிலைக்கவைத்திட ஏற்ற அசைக்க முடியாத சான்றுகளை அவருடைய காலத்திலேயே திரட்டி அவரிடம் வெளிப்படுத்தினேன். அதன்வழி அவரைப் போற்றினேன்.


**தந்தை பெரியார் 13.4.1954 அன்று தொடங்கி, 28.11.1973 வரையிலான 20 ஆண்டுகளில் என்னை நன்றாகப் புரிந்து கொண்டார். தக்க வண்ணம் பயன்படுத்தினார்; மனந்திறந்து என்னைப் பாராட்டி னார்.**

"பேரறிஞர் ஆனைமுத்து" என்பது எனக்குப் பெரியார் அளித்த விலை மதிக்க முடியாத கொள்கைச் சொத்து. அதனைக் கட்டிக் காத்திட, பெரியார் தமிழ்ப் பேரவை சார்பில் தோழர் சங்கமித்ரா, தூத்துக்குடி வணிகரும் சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான ந. தனசேகரன், சாத்தநத்தம் முனைவர் அ. ஆறுமுகம், அரக்கோணம் கவிஞர் தமிழேந்தி, வடக்கலூர் ந. கருணாகரன் ஆகிய நூல் தொகுப்பாசிரியர் குழுவின ரும்; என்பாலும் தந்தை பெரியாரிடத்தும் நீங்காப் பற்றுக்கொண்ட எண்ணற்ற அறிஞர்களும், கவிஞர் களும், தோழர்களும், என் 84ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, "பெரியார் கண்ட பேரறிஞர் வே.ஆனைமுத்து" என்னும் சிறந்ததொரு நூலாக. என் வரலாற்று ஆவணமாகவே பெரிய கட்டுரைத் தொகுப்பை உருவாக்கி வெளியிட்டுள்ளனர். எனக்கும் என் துணைவியார், என் மக்கள் ஆகியோர்க்கும் இது தமிழ்ச் சமூகத்தின் சார்பில் காட்டப்பட்டுள்ள நன்றியுரையாகவும் அளிக்கப்பட்ட பாராட்டுரையாகவும் ஆகும்.

**'வாழும் பெரியார் ஆனைமுத்து' என்று - முதன்முதலாக, சென்னை மாநாட்டில், 1978 சூன் 24 அன்று என்னைப் பற்றிக் குறிப்பிட்டவர், மறைந்த சட்ட மேதை பெங்களூர் ஏ.எம். தரும லிங்கம் என்னும் பெருமகனார் ஆவார். ஆர்வ மேலீட்டால் அவர் அதைக் கூறினார். இது தந்தை பெரியாரைக் குறைத்துக் காட்டும் குறிச்சொல் ஆகும். அருள்கூர்ந்து 'வாழும் பெரியார்' என என்னை அழைக்காதீர்கள் என வணக்கத்துடன் எல்லோரையும் கேட்டுக் கொள்கிறேன்.**

**"பேரறிஞர் ஆனைமுத்து" என்பது பெரியார் எனக்குத் தந்த கொள்கைச் சொத்து. அது எனக்கே உரியது. அப்படியே நீங்கள் எல்லோரும் அழைக்கலாம். அதை எவரும் தட்டிப்பறிக்க முடியாது. ஆனால், அதை மூடி மறைக்கலாம். அந்த மூடாக்கைக் கிழித்துத் தூக்கி எறிந்துவிட்டுத் தமிழுலகுக்கும் வெளி உலகுக்கும் என்னை அடை யாளப்படுத்திவிட்ட அறிஞர்கள், தோழர்கள், தமிழ்ப் பெருமக்கள், அனைவர்க்கும்-குறிப்பாகத் தோழர் சங்கமித்ரா அவர்கட்கும் நூல் தொகுப் பாசிரியர் குழுவினர்க்கும் மற்றும் 16.8.2008 அன்றைய விழாவில் பங்கேற்க உள்ள அனை வர்க்கும் நெஞ்சார்ந்த நன்றியினை என் சார் பிலும் என் குடும்பத்தினர் சார்பிலும் வணக்கத் துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

## சுவாமி அக்னிவேஷ் மறைவு



சுவாமி அக்னிவேஷ் சமூக செயற்பாட்டாளர், அரசியல் வாதி. அகவை 80 இல் மறைந்தார். ஆரிய சபா என்ற அரசியல் கட்சியை நிறுவிய வர். அரியானா மாநிலத்தில் சில ஆண்டுகள் கல்வி அமைச்ச ராக இருந்தார். சுவாமி அக்னி வேஷ் கொத்தடிமைத் தொழிலா ளர்கள் விடுதலை முன்னணி என நிறுவி, அதன் தலைவராக இருந்து செயல்பட்டார். மத நல்லிணக் கத்துக்காகப் பாடுபட்டவர். பா.ஜ.க.வினரால் தாக்கப் பட்டார். மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி 1991 அக்டோபரில் புதுதில்லியில் நடத்திய பெரியார் 113ஆம் பிறந்த நாள் விழாவில் பங்கேற்று உரைநிகழ்த்தினார். சுவாமி அக்னிவேஷ் அவர் களின் மறைவுக்கு மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி சார்பில் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துக் கொள்கிறோம்.

# இன்றைய ஆட்சி ஏன் ஒழிய வேண்டும்?

**- பெரியார் ஈ.வெ.ரா.**

## (தற்போது பா.ச.கவின் ஒன்றிய ஆட்சியைப் பொருத்திப் பார்த்துக் கொள்ளலாம்)

இந்தியாவில் இன்றைய அரசாங்கமானது ஆட்சி முறையில் எவ்வளவு தூரம் பாமர மக்களுக்கு விரோதமாகவும், பணக்காரார்களுக்கு அனுகூலமாகவும் இருக்கின்றது என்கின்ற விஷயம் ஒருபுறமிருந்தாலும், நிர்வாக முறையானது ஏழைக்குடி மக்களுக்கு மிகவும் கொடுமை விளைவிக்கக்கூடியதாகவே இருந்து வருகின்றது.

அரசியல் நிர்வாகத்திற்கென்று குடிகளிடம் இருந்து வசூலிக்கப்படும் தொகைகள் 100க்கு 75 பாகம் அக்கிர மமான வழிகளிலேயே-பெரிதும் செல்வவான்களுக்குப் பயன்படும் மாதிரியிலேயே-சிலரை செல்வவான் களாக்குவதற்குமே நடைபெறுகின்றன. பாமர மக்கள்-ஏழை மக்கள் ஆகிய வர்களின் உழைப்பெல்லாம் வரியாகவே சர்க்காருக்குப் போய்ச் சேர்ந்து விடுகின்றது. அந்த வரிகள் பெரிதும் சம்பளமாகவே செலவாகி விடுகின்றன. இதன் பயனாய் ஒரு நல்ல ஆட்சியினால் குடிகளுக்கு என்ன விதமான பலன்கள் ஏற்படவேண்டு மோ அப்பலன்களில் 100க்கு 5 பாகம் கூட ஏற்படாமல் இருந்து வருகின்றன.

பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவுக்கு வந்து சுமார் 175 வருஷ காலமாகிய பிறகும் இன்றும் கல்வித் துறையில் 100க்கு 8 பேர்களேதான் நம்மவர்கள் படிக்கத் தெரிந்தவர்களாக இருக்கிறார்கள் என்றால் அதுவும், பெரிதும் பணக்காரார்களும், மேல் ஜாதிக்காரார்களுமே என்றால் இந்த நிர்வாகமானது ஏழைகளுக்குப் பயன்படும் முறையில் தனது வரிப் பணத்தைச் செலவு செய்து இருக் கின்றது என்று சொல்லமுடியுமா? என்று கேட்கின்றோம்.

ஆனால் அரசாங்கத்திற்கு வரி வருமானங்கள் மாத்திரம் நாளுக்கு நாள் விஷம் ஏறுவது போல் உயர்ந்து கொண்டே வந்திருக்கிறது.

நமக்குத் தெரியவே இந்தியவருமானம், வருஷம் ஒன்றுக்கு 75 கோடி ரூபாயாக இருந்தது இன்று வருஷம் 1-க்கு 175கோடி ரூபாயாக ஆகி யிருக் கின்றது.

இராணுவச் செலவுக்கு வருஷம் 20 கோடி ரூபாயாக இருந்தது 7 கோடியாகி, இன்று 60 கோடியாக இருந்து வருகின்றது. மற்ற அநேக துறைகளிலும் உத்தியோகச் செலவுகள் இதுபோலவே உயர்வாகி வருகின்றது.

உதாரணமாக கல்வித்துறையை எடுத்துக்கொண் டால் கல்விஇலாக்கா உத்தியோகச் செலவுகள் இது போலவே வளர்ந்திருக்கிறது. ஆனால் கல்விப் பெருக் கத்தில் மாத்திரம் சென்ற 10-வது வருஷத்திற்குமுன் 100-க்கு 7 பேராயிருந்த கல்விவான்கள் இன்று 100-க்கு 8 பேராகத்தான் ஆகி இருக்கிறார்கள் என்றால் இந்த நிர்வாகம் ஏழை மக்களுக்கும், பொது மக்களுக்கும் அனுகூலமானது என்று எப்படிச் சொல்லமுடியும்? ரூ. ஒன்றுக்கு பட்டணம் படியால் 6 படி 7 படி சில இடங்களில் 8 படி அரிசிவீதமும் கிடைக்கக்கூடிய இந்தக் காலத்தில்-B.A., M.A. படித்த மக்கள் மாதம் 15ரூ 20ரூ. சம்பளம் கூட வெளியில் கிடைக்காமல் திண்டாடுகின்ற இந்தக் காலத்தில் அரசாங்க நிர்வாக உத்தியோகங்களில் ஏராளமான ஆட்களை நியமித்துக்கொண்டு அவர் களுக்கு மாதம் 100, 200, 500, 1000, 5000 வீதம் சம்பளங் களை அள்ளிக் கொடுப்பதென்றால் இப்படிப்பட்ட அரசாங்க மும், அரசாங்க நிர்வாக உத்தி யோகங்களும் இந்திய பாமர ஏழை குடி மக்களைச் சுரண்டும் கூட்டுக் கொள்ளை ஸ்தாபனம் என்று சொல்லவேண்டியதா? அல்லவா? என்று கேட்கின்றோம்.

இன்றைய ஆட்சியானது அழிக்கப்படவேண்டியது என்பதற்கு இந்த ஒரு உதாரணம் போதாதா என்றும் கேட்கின்றோம். ஆட்சி நிர்வாகம் என்பது சுத்த விளை யாட்டுத்தனமாகவும், யோக்கியப் பொறுப்பற்றத்தனமாக வும் இருந்து வருகின்றது என்பதற்கு இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும். சென்னை மாகாணமானது சுமார் 20 வருஷங்களுக்கு முன்பு 2-மந்திரிகளாலேயே நிர்வாகம் செய்யப்பட்டு வந்தது யாவரும் அறிந்ததாகும். ஆனால் இப்பொழுது 7-மந்திரிகளால் நிர்வாகம் செய்யப் பட்டு வருகின்றது. இதன் பயனாய் மக்கள் அடைந்த பயன் என்ன என்பதை கவனித்தோமானால் மேலே கூறியபடி 2-மந்திரிகள் இருக்கும்போது 100-க்கு 7-பேர் படித்த வர்களாய் இருந்தது இப்போது கல்விக்காக என்று ஒரு தனி மந்திரி மாதம் 5000 ரூ. சம்பளத்தில் ஏற்படுத்தி அந்த இலாக்காவில் 20-வருஷங்களுக்கு முன் இருந்த தைவிட 100-க்கு 200-பங்கு பணம் அதிகம் செலவழித் தும் இன்றும் 100-க்கு 8-பேர் படித்தவர்களாய் இருக்கி றார்கள் என்கின்ற அளவில் தான் அபிவிருத்தி காட்டப் படுகின்றது. ஆனால் இந்த மந்திரிப் பதவிகள் இந்தப்படி 100-க்கு 350-பங்கு வளர்ந்ததற்குக் காரணம் என்ன என்று பார்ப்போமானால் ஆட்சிமுறையை ஒரு திருட்டுத் தனம்போலவும் மந்திரிப் பதவிக்காரர்கள் அந்த திருட்டில் தங்களுக்கு ஒரு பாகம் கூட்டு கொடுக்காவிட்டால் அத்திருட்டைக் காட்டிக் கொடுத்து விடுவோம் என்று மிரட்டி பங்கு பெற்றது போலவும்தான் ஆகி இருக்கின்றதே தவிர வேறு ஒன்றுமே இல்லை.

இப்படி 100-க்கு 8-வீதமான கல்வி என்பதும் செல்வவான் வீட்டுப் பிள்ளைகளுக்கு மாத்திரம் கிடைக்கும் படியாகவேதான் கல்வியின் தத்துவமும், கல்வி இலாக்காவும் அமைக்கப்பட்டிருக்கின்றது.

உதாரணமாக ஒரு பையன் S.S.L.C., படித்து வெளிவர வேண்டுமானால் மாதம் 1-க்கு 5-4-0 ரூ. சம்பளம் கொடுக்கவேண்டும். அவன் புத்தகம் முதலிய வைகளுக்கு மாதம் 2-ரூ வீதம் செல்லும். ஆக மாதம் 7-4-0 ரூ. வீதம் ஒரு மாணவனுடைய படிப்புக்கு வேண்டி இருக்கிறது. இந்த தொகை யான மாதம் 7-4-0 ரூ. கூட 4,5 பேர்களைக்கொண்ட ஒரு குடும்பத்திற்கு வரும்படி இல்லாத மக்கள் நம் நாட்டில் 100-க்கு 60,70 பேர்கள் இருப்பார்கள் என்றால் இவர்கள் வீட்டுப்பிள்ளைகள் எல்லாம் எப்படி படிக்கமுடியும் என்பதை யோசித்துப் பார்த்தால் கல்வித் தத்துவத்தின் புரட்டும், அயோக்கியத் தனமும், சுலபத்தில் விளங்காமல்போகாது. மேற்கண்ட கல்விச் செலவானது மாதம் 7-4-0 ரூ. என்பது பட்டணத்துப் பிள்ளைகளுக்குத்தானே ஒழிய, கிராமாந்திர பிள்ளைகளுக்குப் பட்டினங்களுக்குச் சென்றுபடிக்க மாதம் 17-4-0 ரூ. ஆகிவிடுமென்பதை நினைத்துப்பார்த்தால் 100-ல் 1 பிள்ளையாவது குறைந்த யோக்கியதா பக்ஷப்படிப்பு என்னும் S.S.L.C., படிப்பு படிக்க முடி யுமா என்று கேட்கின்றோம். மக்கள் நிலை இந்தப்படி இருக்கும்போது இந்தப்படிப்பு சொல்லிக்கொடுக்கும் உபாத்தியாயர்களுக்கு மாதம் 75 முதல் 350 ரூ. வரை சம்பளம் கொடுப்பது என்றால் இது எவ்வளவு கொடுங் கோன்மையான நிர்வாகம் என்பதற்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும். மாதம் ஒன்றுக்கு 30-ரூ. 35-ரூ. சம்பளத்தில் வேலைக்கு வருவதற்கு 100-க்கணக்கான பி.ஏ., எல்.டி., கள் இன்று காத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தப்படி பலர் அமர்ந்தும்இருக்கிறார்கள். அது மாத்திர மல்லாமல் பி.ஏ., எல்.டி., படிப்பையும் பரீட்சையையும், வஞ்சகமில்லாமல் இன்னம் சிறிது தாராளமாய் விட்டால் மாதம் ஒன்றுக்கு 20 ரூபாயிலும் 25 ரூபாயிலும் கிடைக் கும்படியாக ஆயிரக்கணக்கான பி.ஏ.,எல்.டி., உபாத்தியாயர்களைக் காணலாம். அப்படிக்கெல்லாம் இருக்க படிப்புக்காக மக்களிடம் இருந்துவசூலிக் கும் வரியையும் அபாரமாக்கி தனிப்பட்ட முறையில் படிப்புக்காக பெற்றோர்கள் செய்யவேண்டிய செலவையும் அபாரமாக்கி அவ்வளவையும், உபாத்தியாயர்களுக்கும் படிப்பு இலாகா நிர்வாக உத்தியோகதர்கள் என்ப வர்களும் வீணாய் கொட்டிக் கொடுத்து அந்தக் கூட்டத்தைச் செல்வவான் களாகவும் ராஜபோகக்காரராகவும் ஆக்குவதல்லாமல் அந்தப்படிப்பால் மக்களுக்குப் பலனும் இல்லாமல் செய்து மொத்த ஜனத்தொகையில் 100-க்கு 92-பேர்களை கையெழுத்துக்கூடப் போடத் தெரியாமல் தற்குறிகளாய் வைக்கப்பட்டிருக்கிறதென்றால் இந்த அக்கிரமங்களை மக்கள் எப்படித்தான் சகித்துக்கொண்டிருப்பது என்பது நமக்கு விளங்கவில்லை.

இப்படிப்பட்ட கொடுமைகளையும் அயோக்கியத்தனங் களையும் மக்கள் என்றென்றும் தெரிந்துகொள்ளாமலும், தெரிந்தாலும் சகித்துக் கொண்டும் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் பள்ளிக் கூடத்தில் பிள்ளைகளுக்குக் கடவுள்செயல் பிரசாரத்தையும் ராஜ பக்தி பிரசாரத்தையும் கொண்ட புத்தகமும் படிப்பும் கற்பிக்கப்படுகின்றது என்று தீர்மானிக்க வேண்டியதாய் இருக்கிறது.

ஆயிரம் சமாதானம் சொன்ன போதிலும் இன்றைய ஆக்ஷி முறை யும் நிர்வாக முறையும் முதலாளித் தன்மை கொண்டது என்பதிலும், இவை ஏழைமக்களுக்கு விஷம்போன்றது என்பதிலும், கண்டிப்பாக இவை அழிக்கப்பட்டே ஆகவேண்டும் என்பதிலும் நமக்குச் சிறிதும் சந்தேகமோ தயவோ தாக்ஷண்யமோ தோன்றவில்லை. ஆனால் இப்படிப்பட்ட சூழ்ச்சி ஆக்ஷித் தன்மைக்கு இந்தியாவில் இன்று தூண்கள் போல் இருந்து வரு பவை முதலாளித்தன்மையும் புரோகிதத்தன்மை யுமே பிரதானமாகும். அதற்கேற்ற முறையிலேயே காங்கிரசும்-காந்தீயமும் வேலை செய்து கொண்டு வந்திருக்கின்றது என்பதுடன் அதில் இருந்தால் தங் களுக்குப் பதவி கிடைக்காது எனக்கருதி வெளிவந்து அவற்றோடு போட்டி போட்டுக் கொண்டு இருக்கும் மற்ற அரசியல் தாபனங்களுமே நடுத்தூண்களாய் இருந்து வருகின்றன.

இந்தக் காரணத்தால்தான் நாம் காங்கிரசை அழித்தாகவேண்டும் என்றும் காந்தீயத்தை ஒழித்தாக வேண்டும் என்றும் அதே தத்துவம் கொண்ட, மற்ற அரசியல் கிளர்ச்சிகளையும் ஒழிக்கவேண்டும் என்றும் புரோகித சம்மந்தமான எந்த உணர்ச்சியையும் அடியோடு புதைத்தாக வேண்டும் என்றும் கூப்பாடு போடுகின்றோம்.

இக்கூப்பாட்டைக் கண்டு முதலாளிகளும் முதலாளி களின் கூலிகளும் உத்தியோக வர்க்கங்களும் உருமுவ தில் நமக்கு அதிசயமொன்றுமில்லை. ஆனால் ஏழை மக்கள் தொழிலாளிகள் சரீரத்தால் சதாகாலமும் பாடுபட்டு துன்பப்படும் கூலிமக்கள், முதலாளிகளுக்கும் முதலாளி கள் கூலிகளுக்கும் ஆதரவளிப்பதும் அவர்களை அண்டுவதும் நமக்கு அதிசயமாய் இருக்கின்றது.

ஆகையால் வரப்போகும் தேர்தல்களில் ஏழை மக்கள் தொழிலாளிகள் ஆகியவர்கள் இவற்றை உணர்ந்து ஏமாந்து போகாமல் நடந்து கொள் வார்களாக.

**குடி அரசு - தலையங்கம் - 29.10.1933**

# விண்ணை எட்டும் விலை ஏற்றம் டீசலுக்கு

## (இந்திய ஒன்றியத்தில் உள்ள 110 கோடி அளவில் உள்ள வெகுமக்களான ஒடுக்கப்பட்ட மக்களான ஏழை, எளிய உழைக்கும் மக்களின் பிழைப்பைச் (வாழ்வை) சீரழிக்கும் ஒன்றிய மாநில அரசுகள்)

**இரா. பச்சமலை**

''உபரி இலாபத்திலிருந்து அல்ல, மூலதனத்தி லிருந்தே, ஆடம்பரங்களிடம் இருந்து அல்ல, அத்தியாவசியங்களிடம் இருந்தே, நமது வருவாய் பெறப்படுகிறது. இது பாவத்தின் – கண்ணீரின் – விளைபொருளாகும்''.

(1873-இல் வெளியான தமது ''அடிமைத்தனம்'' நூலில் மகாத்மா சோதிராவ் புலே சொன்னார்)

இதே கருத்தைத்தான் பின்னாளில் அம்பேத்கர், ஆங்கிலன்(லேயர்) ஆட்சியின் வரி விதிப்புப் பற்றிய தமது நூலில் பதிவிட்டுள்ளார். இதே தன்மையில் பெரியாரும் ஆங்கிலன்(லேயர்) ஆட்சிக்காலம் தொட்டு நாடு விடுதலை பெற்ற பின்னரும் பின்பற்றப்படும் வரி விதிப்பு முறை பெரும்பாலும் வெகுமக்களின் வாழ் வைக் குலைப்பதாகத்தான் இருந்து வருகின்றது என்று 1930-களிலிருந்தே விரிவாகப் பேசியுள்ளார்.

'அடிமைத்தனம்' நூலில் புலே சுட்டும் ஏழை எளிய மக்களின் நாள் கூலி 4 அணா (உருபா ¼), பெண்களுக்கு அதில் சரிபாதி 2 அணா. ஆனால் ஆங்கிலன் அலுவலகத்தில் பணிபுரிவதற்கு திங்கள் ஊதியம் (அவனுக்கு அது கூலி என ஒலிக்காது) ரூ.600. எனில் நாள் ஊதியம் ரூ.20 (இது விடுமுறை நாள்களுக்கும் ஊதியம் உண்டு), ஆனால் நாள் கூலிக்காரர்களுக்கு வேலை பார்த்தால்தான் கூலி, இதன்படி கணக்கிட்டால் இவ்விரு பிரிவினருக்கும் உரிய சம்பள வேறுபாடு 80 மடங்குக்கும் அதிகம் (அதாவது உருபாவுக்கு நான்கு ¼ உருபா என்ற அளவில்). இது ஆங்கிலன் தன்குடி யேற்ற நாடான இந்திய ஒன்றியத்தைச் சுரண்டி கொள்ளை கொள்வதற்கு அவனுக்கென வகுத்துக் கொண்ட ஊதிய முறை. இதையே, அரசுப் பணிகளிலி ருந்த இந்தியர்களுள் 90 விழுக்காட்டிற்குமேல் இருந்த பார்ப்பனர்களும் மேல்சாதிக்காரர்களும் பெற்றுக் கொழுத்து வந்தனர். அதை ஒட்டியே பணிக்கு வந்த ஏனையோரும் இந்தச் சம்பள வேறுபாட்டின் அகல ஆழத்தை அறியாதவர்கள் போல் புலே, அம்பேத்கர், பெரியார் சொன்னது போன்று ஆங்கிலன் போல் ஏழை எளியோரைச் சுரண்டிக் கொள்ளை கொள்வது இன்னும் வன்மத்துடன் தொடர்கிறது. ஆங்கிலன் போன்றே பார்ப்பனியம் சொல்லும் வன்நெஞ்ச விளக்கம் வேளாண் சார், நெசவுத் தொழில்சார் மக்கள் உழைப்பளித்து, உடல் உழைப்பளித்து நாட்டின் செல்வங்களையும் வளங்களையும் உருவாக்குபவராக இருந்தும் படிப்பு அற்றவர்களாக உள்ளனர் என்பதாகும் (காலகால மாகத் திட்டமிட்டு அவ்வாறு வைக்கப்பட்டுள்ளனர்).

இன்னும் சற்று விரிவாகப் பேசப்பட வேண்டு மென்பதால் மேலும் சில வரிகள். பெரியார், அம்பேத்கர் ஆகியோரின் கருத்துகளை அடியொற்றி நிலவும் உண் மைகளை வெளிப்படையாகவும், கண்டிப்பாகவும் பதிவு செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுவிட் டோம். அமைப்புசார் (அரசு, பொது நிறுவனங்கள், வங்கிகள் போன்ற) பணிகளில் உள்ளோரின் சம்பள வேறுபாடு 30 மடங்களவில் உள்ளது என்பதுடன் சமூக அமைப்பு எப்படி படிநிலைகளுடன் குறுக்கும் நெடுக்குமாகப் பிளவுபடுத்தப்பட்டுக் கீழான - மேலான வன், தாழ்ந்தவன் - உயர்ந்தவன் என்ற பாகுபாடுடன் உள்ளது போன்று அரசுப் பணிகளும் இதனினும் கீழான தன்மையில் மெத்தப்படித்தவன், படித்தவன், குறைந்தளவு படித்தவன் படிக்காதவன் என்ற அள வீட்டின்படி 100 வகையான சம்பள விகிதத்துடன் (இதில் நாள் சம்பளம், தொகுப்பு ஊதியம், பகுதி நாள் ஊதியம் போன்றவையும் அடங்கும்) இன்றும் இருந்து வருகிறது. இவ் இழிநிலைக்கு நாடே வெட்கித் தலை குனிய வேண்டும். இதற்கும்இழிவாக அன்றாட உடல் உழைப்பாளிகளாக ஊர்ப்புறங்களில், நகர்ப் புறங்களிலும் கூட நாளுக்கு ரூ.100, ரூ.200, ரூ.300... என்ற அளவிலேயே கூலி பெற்று வருகின்றனர். ஆனால் முன்னே சொன்னதுபோல் உயர்படிப்பு, உயர் பணி களான அனைத்திந்தியப் பணியினர், உயர் உச்ச வழக்குமன்ற நடுவர் எனப் பெரும் திங்கள் சம்பளக் காரர்களாக, திங்களுக்கு மூன்று, மூன்றரை இலக்கம் உருபா என்று பெற்று வருகின்றனர். இவ்விரு பிரிவின ருக்கும் உள்ள சம்பள வேறுபாடு மடங்குக்கும் அதிக மாகவே உள்ளது. இந்த இழிநிலை குறித்து மக்கள் பற்றுடன் அவர்களின் தன்மானத்துடனான பிழைப் பையும் (வாழ்க்கை) வலியுறுத்தும் அரசமைப்புச் சட்டப் பிரிவு 21 - எந்த ஒரு மனிதனின் வாழ்வையும் (தன்மதிப்புடைய கல்வி, உடல்நலன், சம்பளம் உடையது) அவனின் விடுதலை உரிமையையும் சட்டப்படியினா லன்றி பறிக்கப்படக்கூடாது - என்பனயெல்லாம் எண் ணாது சட்டத்தைப் பாதுகாப்போம் என்போரும், சமூகப்

பொருளாதாரம், வேளாண் பொருளாதாரம், பொதுப் பொருளாதார வல்லுநர்கள், மனிதப் பற்றியலாளர்கள் உள்ளதாக இந்த இந்திய ஒன்றிய நாட்டை எப்படிச் சொல்ல முடியும்?

டீசல் விலையேற்றத்தை மேலே விவரிக்கப்பட்டுள்ள பின்னணியில் ஆய்வுக்குட்படுத்தினால்தான் அதனால் உண்மையில் எந்த அளவுக்குக் கடுமையாகவும் கொடுமையாகவும் வெகுமக்களான ஏழை எளிய உழைக்கும் மக்கள் வதைக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும், அவர்களின் பிழைப்பும் வாழ்வும் எவ்வளவு இரக்கமற்ற, மானுடப் பற்றே அற்ற வகையில் பறிக்கப்பட்டு வறியவர்களாக்கப்பட்டுள்ளனர் என்பதை உணர முடியும்.

எரிபொருள்கள் விலையேற்றம் பற்றிப் பேசுவோர், பொத்தாம் பொதுவாகப் பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு என எல்லாவற்றின் விலையேற்றம் பற்றிப் பேசி, இதைக் கண்டனம் செய்து வருகின்றனர். வியப்பென்னவெனில், பொதுவுடைமைக் கட்சிகள் உள்ளிட்ட இடதுசாரிகள், அந்தச் சாயலைக் கொண்ட அமைப்புகள், இயக்கங்கள் யாவும் இவ்வாறுதான் சொல்லி வருகின்றன என்பதுதான் உண்மையில் நாட்டிலுள்ள 100 கோடிக்கும் மேலான ஏழை எளிய உழைக்கும் மக்களின் வாழ்வை டீசல் விலையேற்றம் சூறையாடி வருவதைச் சற்றுப் பின்னால் விவாதிப்போம்.

இப்பொருள் குறித்துப் பேசும் போதும் டீசல் உள்ளிட்ட இவையெல்லாம் எந்தெந்த அளவுகளில், எவ்வளவு உற்பத்திச் செலவில் கச்சா எண்ணெயிலிருந்து எவ்வாறு பிரித்தெடுக்கப்படுகின்றன என்பது முதன்மையான செய்தி. எனினும் இவற்றை இக்கட்டுரையின் தொடர்ச்சியாக அடுத்த கட்டுரையில் விரிவான ஆய்வுக் குட்படுத்தலாமெனக் கருதுகிறேன். இப்போது பெட்ரோல், சமையல் எரிவாயு, விலையேற்றத்தின் விளைவுகளை முதலில் கணக்கிடுவோம். இவற்றைச் சம மனநிலையுடன் மனங்கொள்ள வேண்டுவேன்.

இருசக்கர உந்துகள், மகிழுந்துகள், தானிகள் போன்றவற்றிற்கு பெரும்பாலும் பெட்ரோல் பயன்படுத்தப் படுகிறது. ஒருவர் அல்லது இருவர் ஒரு பெட்ரோல் இருசக்கர உந்து பயன்படுத்துவதில் தனிப்பட்ட இவர்களின் தேவைக்காகவும், வசதிக்காகவும், நலனுக்காகவும் என்ற தன்மையில்தான் உள்ளது. இதனால் இவர்கள் குறுகிய காலப் பயண நேர இடைவெளியில் வேண்டிய இடங்களுக்குச் செல்ல முடிகிறது. ஆனால் இதற்கு மாற்றாகப் பல போக்குவரத்து முறைகள் உள்ளன. பொதுப் பேருந்துகள் (அரசு மற்றும் தனியார்), நகர்ப்புறங்களில் மின்தொடர் வண்டிகள் போன்றவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதனால் அவர்களின் பொருள் செலவை மட்டுக்குள் வைக்கவும் வாய்ப்புள்ளது. உண்மைநிலை இந்நிலைக்கு முற்றும் மாறாக, தற்பொழுது பொதுப் போக்குவரத்துக் கட்டணம் பெருமளவு உயர்த்தப்பட்டுவிட்டதால் இருசக்கர உந்தைத் தனியொருவர் பயன்படுத்தினால் எரிபொருள் செலவு குறைவாகவும் இருக்கக்கூடும். அதேநேரத்தில் இருசக்கர உந்தில் இருவர் பயணித்தால் பேருந்துப் பயணச் செலவைக் காட்டிலும் ஒப்பீட்டளவில் குறைவாகத்தான் இருக்கின்றது. இந்த வகையில் இதுபோன்ற இருசக்கர உந்துகளின் பயணிப்பவர்களின் தனிநலன், தேவை, நிறைவுறும் அதேவேளையில் பொதுச் சாலைகள், தெருக்கள் போன்றவற்றைத் தனிப்பட்ட முறையில் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

தானி, மகிழுந்தில் முழுக் கொள்ளளவில் அதாவது முறையே மூவர் மற்றும் நால்வர். ஐவர் (தத்தம் சொந்த வண்டிகள் அல்லது வாடகை வண்டிகள் எனினும்) பயணித்தால் பயணச் செலவு அளவு அவர்கள் பொதுப் போக்குவரத்து ஊர்திகளைப் பயன்படுத்தும் செலவினைக் காட்டிலும் பெரிதும் அதிகமாக ஆகிவிடாது. அல்லது அச்செலவு இன்றுள்ள பொதுப் போக்குவரத்துப் பயணக் கட்டண அளவுக்கு இணையாகக்கூட ஏன் சற்றுக் குறைவாகக்கூட இருக்க நேரிடலாம். மேலும் இதில் பயண நேரம் பெரிய அளவு குறைந்துவிடும் வாய்ப்பும் கிட்டுகின்றது. இவ்வகையிலும் பொதுப் போக்குவரத்துச் சாலைகள், தெருக்கள் தனிப்பட்ட தேவைகளுக்கும் நலன்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றன என்பதையும் கருத்தில் கொள்ளலாம். இவ்வாறு சொல்வதில் தனியொருவருக்கு உரிமையில்லையா என்ற வினா எழும். ஆனால் ஒப்பீட்டளவில் பொதுப் போக்குவரத்து உந்துகளைப் பயன்படுத்துவோர் பயணங்களில் நிகழும் பயணிகள் நெருக்கடி, இன்னல்கள் போன்றவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

உண்மையில் அனைத்து மக்களுக்குமான குறிப்பாக வெகுமக்களான எளிய மக்களின் சாலைப்போக்குவரத்து அரசு பொது உந்துகள் குறிப்பாக அரசு பொது, தனியார் (''பா.ச.க. சாதனை'') தொடர் வண்டிகள். பெரும் அளவுக்கும் அனைவருக்குமான வசதிகளுடன் இயக்கப்படாததாலும் ஆங்கிலன் காலத்துத் தொடர் வண்டிப் பாதைகள் 60000, 65000 கி.மீ. அளவிலேயே இருந்ததைக் காட்டிலும், நாடு விடுதலை பெற்று 73 ஆண்டுகள் கடந்தும் வெறும் 20000, 25000 கி.மீ. நீளத்திற்கு மட்டுமே புதிய தொடர் வண்டிப் பாதைகள் அமைத்துப் பெருகிவரும் மக்கள் தொகைக்குச் சற்றும் ஈடுகட்ட முடியாத அளவிலேயே வைத்துக் கொண்டிருப்பதாலும்தான் தனிப்பட்டோர் வண்டிகள் வைத்துக்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். எனவே, வண்டிகளுக்கான எரிபொருளான கச்சா எண்ணெய்த் தேவை அதிகரித்து அவற்றைப் பெருமளவுக்கு இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது.

எனவே இதற்கென பெருநிதி ஒதுக்கப்பட்டு வெகு மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கான, நலன்களுக் காக நிதி ஒதுக்கப்படுவதில்லை. ஆனால் உண்மை நிலை வேறாகியுள்ளதோ என எண்ணத் தோன்றுகின்றது. அதாவது ஒன்றிய அரசு கச்சா எண்ணெய் இறக்குமதி யைப் பெருக்கி அளப்பெரும் வணிகப் பொருளாக்கி வணிகம் செய்து பெருநிறுவன முதலாளிகள் போல் கொள்ளை இலாபம் ஈட்டப் பயன்படுத்துகின்றதோ என்று எண்ண வேண்டியுள்ளது. மேலும் இதன்மீது கொடும், கொள்ளை வரிவிதிப்பை ஏதுவாக்கி மக்கள் வாழ்வைச் சூறையாடிக் கொண்டு வருகிறது ஒன்றிய அரசு.

பெட்ரோல் இருசக்கர உந்து வண்டி, மகிழுந்து வைத்திருப்போர் மட்டும் அதன் விலையேற்றத்தால் பாதிக்கப்படுவர். உண்மைதான். இந்தப் பாதிப்பின் தாக்கம் தனிப்பட்டோரைப் பொருளாதார அளவில் பாதிக்கும். இருப்பினும் இவர்கள் தனிப்பட்ட வகையில் பலன் பெற்றவர்களாகின்றனர். ஆனால் இந்தப் பாதிப்பு 99 விழுக்காடு அளவுக்கு பிறர்மேல் ஏற்றப்படாது; இறங்காது. அதாவது விலையேற்றப் பாதிப்பு சங்கிலித் தொடர் போல் பிறர் எவர் மீதும் ஏற்றப்பட வாய்ப்பே இல்லை. தானி வாடகை மகிழுந்து உடைமையாளர் கள், ஓட்டுநர் உரிமையாளர்கள், ஓட்டுநர்கள் பொருளாதார அளவில் பாதிக்கப்படுவர். ஆனால் இந்தப் பாதிப்பின் தாக்கம் அவற்றில் பயணிப்போரை மட்டும் ஒரே ஒரு நிலையில் மட்டும் இருக்கும். இதனால் பெட்ரோல் விலையேற்றத்தின் சுமை அடுத்த ஒரு நிலைக்கு மாற்றப் பட்டு இவர்கள் அடையும் பொருளாதாரப் பாதிப்பு மிகச் சிறு அளவே இருக்கக்கூடும்; பெரும்பாலும் இருக்காது. ஆனால் அதேநேரம் பயணிகள் பலன் பெறுகின்றனர்.

இனி, டீசல் விலையேற்றத்தின் விளைவை விவாதிப்போம். இங்கு ஒரு விளக்கத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும். கச்சா எண்ணெய் இறக்குமதி விலை யையும் அதிலிருந்து பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு போன்ற பத்துக்கும் மேற்பட்ட பொருள்கள் உற்பத்தி செயப்படுவதற்கு (Refinery) ஆகும் செலவையும் சேர்த்துத்தான் மேற்சொன்ன ஒவ்வொரு பொருளின் விற்பனை விலையும் கணக்கிடப்பட வேண்டும். காட்டாக, 159 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு பீப்பாய் விலை 35 டாலர் அளவில் உள்ளது எனில், பெரும் அளவில் சுத்திகரிக்கப்படுவதற்கான செலவு நிகரளவில் மிகவும் குறைந்த அளவிலேயே ஓரிரண்டு டாலர் வரையிலும் கூட இருக்கலாம். ஆக, சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோல், டீசல் போன்ற எல்லாவற்றிற்கும் மொத்த அடக்க விலை 37 டாலர் மட்டுமே ஆகும். ஆனால் அப்பொருள்களின் மீது விதிக்கப்படும் வரி அளவு 100 விழுக்காடு, 200 விழுக்காடு, அதற்கும் மேல் என அதிகமாகி விற்பனை விலை, இந்திய ஒன்றிய அரசின் பொது நிறுவனங் களால் நிர்ணயிக்கப்பட்டுவிடுகின்றது. இந்த வரிவிதிப்பு மன்னராட்சிக் காலத்தில் மக்களைக் கொள்ளையடிப் பதுபோல் வரிவிதிக்கப்பட்டு, நாட்டுக்கு வருமானம் ஈட்டப்படுவதாகச் சொல்லி ஏழை, எளிய வெகுமக்கள் உள்ளிட்ட அனைத்து நிலை மக்களும் சூறையாடப் படுவது போன்றே இப்போதுள்ள ஒன்றிய அரசு ஒரு கொடுங்கோலன் ஆட்சி போல் இரண்டு, மூன்று இலக் கம் கோடிக்கும் மேலாக இந்த வகையில் மட்டும் வரி வருவாய் ஈட்டி வருகின்றது. தனிமனித முதலாளிகளைப் போன்று ஒன்றிய அரசு கொடுமையான வரியை விதித்து வெகுமக்கள் எல்லையற்ற சுரண்ட லுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்.

முதலில், டீசல் ஒரு நாட்டின் ஒட்டுமொத்த மக்களின் வாழ்க்கையில் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் எவ்வளவு இன்றியமையாப் பங்கு வகித்து, நாட்டின் மூலைமுடுக்கு என எல்லாப் பகுதிகளிலும் உள்ள சிறுபெருஞ்சாலைகள், தொடர்வண்டிப் பாதைகள் என ஒவ்வொரு அசைவிலும் மனித உடலில் உள்ள எல்லா நாளங்களிலும் குருதி ஓடிப் பாய்ந்து சென்று உடல்நலன் பாதுகாக்கப்படுவதில் பெரும் பங்கு வகிப்பது போன்று நாட்டின் நலத்தை. உயிரைப் பாதுகாத்து வருகின்றது என்பது பேருண்மை. எந்த வடிவத்தி லாவது டீசலின் பாதிப்பில்லாத எந்த இயக்கமும் இருக்க முடியாது என்றே சொல்லலாம். வேளாண் விளை பொருள்களான, உணவுப் பொருள்களான தானியங்கள், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள், காய்கறிகள், பால் பழம், கிழங்கு வகைகள், பல இக்கட்டான வறட்சிக் காலங்களில் தண்ணீர் போன்றவை-துணி மணித் தேவைகளுக்கான பருத்தி, பஞ்சு, அதிலிருந்து உற்பத்தியாகும் பல்வகையான துணி வகைகள், மருத்துவத்திற்கான துணி வகைகள், பெருமளவு தேவைக் குரிய மருந்து வகைகள், வேளாண் இடுபொருள்க ளான பல்வேறு வகையான உரங்கள், பயன்பாட்டுக் கான பல்வேறு கருவிகள், கட்டடப் பணிகளுக்கான அனைத்துவகைப் பொருள்கள், சிமெண்ட், மணல், செங்கல், இரும்பு எனவும் நாட்டின் இன்றியமையாதத் தேவையான மின்சார உற்பத்திக்குக் கோடி கோடி டன் நிலக்கரி, ஆயிரக்கணக்கான பல்வேறு குறு, சிறு, நடுத்தர, பெரு, மிகப்பெருந் தொழிற்சாலைகளுக்கான பல்வேறு வகையான மூலப்பொருள்கள், அவற்றி லிருந்து உற்பத்தியாகும் ஆயிரக்கணக்கான வகைப் பொருள்கள்-அனைத்து வகை நுகர்வு, துய்தல் பொருள் கள் மற்றும் இருசக்கர மிதிவண்டி, இருசக்கர உந்து வண்டி, தானி மகிழுந்துகள் போன்றவை, என பல இலக்கக் கணக்கானவற்றின் உற்பத்திகளிலும், அவற்றை யெல்லாம் நாடு முழுமைக்கும் மொத்தமாகப் பெருமள விலும், சிறு சிறு அளவிலும் எடுத்துச் செல்லுவதில்

டீசல்தான் மிக மிக இன்றியமையாத, முதன்மை யான இயக்கு ஆற்றலாக உள்ளது என்பதை உணர முடியும்.

**மேலே இவ்வளவு நீண்ட பட்டியலை இன்னும் அடுக்கிக்கொண்டே போகலாம். இதன் அடிப்படை நோக்கம், டீசல் மூலப்பொருளான கச்சா எண் ணெய் விலை, அடுத்தடுத்து விலையேற்றம், அதிலி ருந்து டீசல் உற்பத்திக்கான செலவு, இதன் அடிப் படையில் டீசல் விலை அமைகிறது, இந்த விலை யைக் கட்டுக்குள் வைத்தால்தான், மேற்சொன்ன ஆயிரக்கணக்கான பொருள்களின் விலையும் கட்டுக்குள் வைக்கப்பட முடியும். அப்பொழுது தான் பொருள்கள் ஏழை, எளிய வெகுமக்களுக்கு நியாயமான விலையில் கிடைக்கும். இல்லை யெனில் அவர்கள் விலையேற்றத்தில் சிக்குண்டு வாழ்வே கேள்விக்குள்ளாகிவிடும் என்பதை உணர்த் தத்தான் மேற்சொன்ன நெடிய பட்டியல் தரப் பட்டுள்ளது.**

டீசல் உற்பத்தி விலையேற்றம், அதன்மீது விதிக் கப்படும் அளவிலா வரிவிதிப்பு ஆகியவற்றால் அதன் விற்பனை விலை ஏற்றம் அதன் காரணமாக மேற் சொன்ன பொருள்களின் விலை ஏற்றம் பொருளாதார நிலையில் ஓரளவுக்குத் தன்னிறைவு பெற்றோர், நல்ல நிலையில், இன்னும் வளமான நிலையில் இருப்போரை, பொருளாதார அளவில் சொல்லித் தக்க வகையில் இன்றி ஓரளவுக்கு, ஏன் பாதிப்புக்கே உள்ளாக மலேயே பாதிப்பே இல்லாமற்கூடப் போகலாம். இன்னும் குறிப்பாக அவர்களின் செலவினம் துய்த்தல், நுகர்தல்சார் பொருள்களுக்காகத்தான் அதிகம் இருக்கக் கூடும் என்பதால் அவர்கள் அதைப் பாதிப்பாகவே உணராமலும், உணவுப் பொருள்களின் விலையேற்றம் அவர்களின் பெரும் வருமானத்தை ஒப்பிட்டால் அவர்கள் செலவளவில் எவ்விதப் பாதிப்பும் ஏற்படுத்தாமலும் போகலாம். ஆனால் 100 கோடிக்கும் மேலாக உள்ள ஏழை, எளிய வெகுமக்கள் பொருளாதார நிலையில் மிகவும் அடித்தளத்திலும், அடித்தளத்தில் உள்ளவர் களாக, மிகவும் குறைந்ததளவே நாள், வார, திங்கள் கூலி வாங்குபவர்களாக இருப்பதால் அவர்களுக்கு அடிப்படையான இன்றியமையாத் தேவையான உணவுப் பொருள்கள், காய்கறி, தண்ணீர், பால் போன்றவற்றின் விலைவாசி ஏற்கெனவே அதிகமாக உள்ள நிலையில் மேலும் கடும் வரியுடன் கூடிய டீசல் விற்பனை விலையேற்றத்தின் விளைவால் ஏற்படும் விலையேற்றம் அவர்களின் வாங்கும் திறன் மிகக் குறைந்த அளவே இருந்துவருவதால் அவர்கள் அவற்றை வாங்குவதில் மேலும் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தி விடுவதாக இருக்கும். எனவே அவர்களின் பிழைப்பை, வாழ்க்கையையே நகர்த்துவதற்கே கடும் இன்னலுக் கும், துன்பத்திற்கும் உள்ளாக்க நேரிட்டுவிடும். இது போன்ற குடும்பத்தில் உள்ள இளம் சிறார், வளர் இளம் பருவத்திலுள்ளோருக்கு வேண்டிய அடிப்படைச் சத்துணவுகூடக் கிடைக்காமற் போக நேரிடும். இவற்றின் ஒட்டுமொத்த திரண்ட விளைவாக உலகின் 98 விழுக் காடு மக்கள்தொகை கொண்ட 173 நாடுகளில் மக்கள் மூலதன அளவுகோலில் (Human Capital Index) இந்திய ஒன்றியம் தாழ்வான நிலையில் 116-ஆம் இடத்தில்தான் உள்ளது.

உண்மையில் இப்பெரும் திரளான மக்களின் உற்பத்திக்கு அளிக்கும் உழைப்பின் திறன் குறைய நேரிட்டு உற்பத்தி அளவும் சரியும் நிலை ஏற்படும். பல்வேறு காரணிகளினால், இந்த முதன்மையான காரணம் உள்ளிட்டு உற்பத்தி இல்லாமல் நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பு (GDP) எப்படி உயரும்? நாட்டின் வளர்ச்சியைக் குறிப்பதாகச் சொல்லப்படும் (GDP) உ.உ.ம. தலைகீழாகக் கவிழ்ந்து எதிர்மறை வீழ்ச்சியடைந்து 29 விழுக்காடு அளவுக்கு 2020-21 காலாண்டில் சரிந்து கிடக்கின்றது.

கொடுங்கோல் ஆட்சியைப் போன்று மக்களைக் கொள்ளையடித்துச் சூறையாடுவதுபோல் டீசல் விலை உலக அளவில் படுபாதாளத்தில் விழுந்துள்ள நிலையில் (159 லிட்டர் அளவு கொண்ட ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் விலை சில கிழமைகளுக்கு முன் எதிர் மறையாக இருந்தது. (பொருள், பணம் கொடுத்து கச்சா எண்ணெயை கொள்முதல் செய்ய வேண்டியதில்லை. பிற்காலத்தில் பணம் செலுத்திடலாம்)). இப்போது சற்று உணர்ந்து பீப்பாய் கச்சா எண்ணெய் விலை 30 டாலரைச் சுற்றியுள்ள நிலையிலும் டீசல் விற்பனை விலை, டீசல் விலை போன்று 100, 200, 300 விழுக் காடு அளவுக்கு வரிவிதித்து விண்ணை எட்டும் வகையில் உயர்த்தப்பட்டுள்ளது. சென்ற 9 ஆண்டுகளுக்குமுன் பீப்பாய் கச்சா எண்ணெய் விலை 100 டாலருக்கும் மேலாக இருந்த போது, டீசல் விற்பனை விலை ரூ.30, 40 என்ற அளவிலேயே இருந்து வந்தது உயர்ந்து ரூ.70 அளவிலேயே வைக்கப்பட்டு வந்தது. அதன் விளைவாக உணவுப்பொருள்களின் விலை மட்டுக் குள் வைக்கப்பட்டு எளிய வெகுமக்கள் வாங்கும் அளவிலேயே வைக்கப்பட்டு வந்தது. ஆனால் ஏழை, எளிய வெகுமக்களான உழைக்கும் மக்களின் வாழ் வைப் பற்றிக் கிஞ்சித்தும் எண்ணாமல், தற்போதைய இந்திய ஒன்றிய பா.ச.க. அரசு கண்மண் தெரியாமல்-மனம் போன போக்கில் டீசல் விற்பனை வரியை விதித்து உலகச் சந்தையில் கச்சா எண்ணெயின் விலை கடும் வீழ்ச்சியைக் கணக்கில்கொள்ளாமல், டீசல் விற் பனை விலையை லிட்டருக்கு ரூ.20-30க்குள் வைத்திட

வேண்டிய சூழலில் ரூ.85 அளவுக்கு எடுத்துச்சென்று நாங்கள் ரூ.நூறை எட்டுவோம் (Century) என்ற இலக்கு வைத்துக் கொண்டு செயல்படுவதாகத்தான் அறியமுடிகின்றது. இதற்கு அவர்கள் சொல்லும் காரணம், நிதிப் பற்றாக்குறையைக் கட்டுக்குள் வைத்திடுவதற் காகத்தான் என்பதுதான்.

நாட்டின் பொருளாதாரம் மந்தமாகி, வரிவருவாய் கிடுகிடு என குறைந்துள்ள நிலையில், நிதிப் பற்றாக் குறையை ஈடுகட்ட 100 கோடிக்கும் அதிகமான மக் களின்மீது கொடும் வரி விதித்து வாட்டி வதைத்து வருகின்றது, இந்த பா.ச.க. அரசு. ஆனால் இந்த இழி நிலையை உருவாக்கிய அரசு, நாட்டிலுள்ள 100 பெருநிறுவனங்களுக்கு ரிசர்வ் வங்கியின் வைப்புத் தொகையிலிருந்து நெறிமுறைகளையெல்லாம் புறக் கணித்து ரூ.1.76 இலக்கம் கோடி அளித்து அவர்கள் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காகக் கொடுத்தது எனச் சொல்கிறது. இதேபோன்று பெருநிறுவன வரி (Corporate Tax) அளவைக் குறைத்து அவர்களுக்கு ரூ.1.45 இலக்கம் கோடி அளவுக்கு வரிச் சலுகை அளித்துவிட்டது. இந்த இரு செயல்களின் வழியாகப் பெருநிறுவனங்கள் ஊக்கம் பெற்று உற்பத்தியைப் பெருக்குவதற்கு வழியே இல்லை என அறிந்துகொண்டே இலாப அளவு குறை யாமல் ஒன்றிய அரசு அவர்களைப் பாதுகாத்துக் கொண்டதுதான் உண்மை.

இவ்வாறெல்லாம் பல பெருநிறுவனங்களின் நலன் களைக் காத்திட ஊதாரித்தனமாகப் பல இலக்கம் கோடி ரூபாய்களை எந்த வரன்முறையுமின்றி அவற்றுக்குக் கொட்டிக் கொடுத்துக் கொண்டு வருவதில், இந்திய அரசுக்கு உள்நோக்கம் இல்லாமலிருப்பதற்கு வாய்ப்பே இல்லை. ஆனால் அதேநேரத்தில் 100 கோடிக்கும் மேற்பட்ட ஏழை, எளிய உழைக்கும் வெகுமக்களின் அடிப்படைத் தேவையான பொருள்களின் விலை அதிகமாகும் வகையில் மறைமுகமாகக் கடுமையான வரியை டீசல் விற்பனையில் விதித்து பல இலக்கம் கோடி ரூபாய்களை அவர்களிடமிருந்து கொள்ளையடிப் பது போல், பறித்து வருகின்ற இந்த ஒன்றிய பா.ச.க. அரசின் மக்கள் பற்றற்றப் போக்கு வெளிப்படையாகத் தெரிகின்றது.

டீசல் விலை ஏற்றம், டீசல் மீதான வரி விதிப்பு இவை இரண்டும் சேர்த்து டீசல் விற்பனை விலையைத் தீர்மானிக்கிறது. இந்த விற்பனை விலை தொடர் சங்கிலி போல் எல்லாப் பொருள்களின் விற்பனை விலையை அதிகரிப்பதாக அமைகின்றது. டீசல் விற்பனை விலை அதிகரிக்கும் போது, டீசலை நாடு முழுவதற்கும் சரக்கு உந்துகள் மூலமும், சரக்குத் தொடர்வண்டிகள் மூலமும் எடுத்துச் செல்வதற்கு டன்னுக்கு விதிக்கப் படும்கட்டணம் முதல் நிலையில் உயர்த்தப்படுகின்றது. இக்கட்டணம் உயர்த்தப்படும்போது, எடுத்துச் செல்லப் படும் டீசல் பொது விற்பனைக்கு வருவதற்கு முன்ன தாகவே முதல் விலை ஏற்றம் ஏற்படுகின்றது. அதை யும் சேர்த்துத்தான் டீசலின் பொது விற்பனை விலை அமைகின்றது. டீசல் பொது விற்பனை நிலையங் களிலிருந்து அதுவே பல்வேறு பயன்பாடுகளுக்கும், பிற பொருள்கள் உற்பத்திச் செய்வதற்கும் பயன்படுத்து வதில் அப்பொருள்களின் மூலப்பொருள்கள், உழைப்பு, மின்சாரம் போன்ற செலவினங்களுடன்-இந்த டீசல் மீதான விரி விதிப்பினால் ஏற்படும் செலவினமும் அப்பொருள்களின் அடக்க விலையும் அதன் மீதான இலாபமும் சேர்த்துத்தான் விற்பனை விலை அதிக மாகிவிடுகின்றது.

இதேபோன்று உணவுப் பொருள்கள் டீசலில் இயங்கும் சரக்கு உந்துகளும், சரக்குத் தொடர் வண்டி களிலும் எடுத்துச் செல்வதற்கு டீசல் விற்பனை விலை அதிகமானதை அடுத்து அப்பொருள்களின் டன்னுக் கான கட்டணமும் உயரும். அப்போது பொருள்களின் உற்பத்தி விலையுடன் உயர்த்தப்பட்ட கட்டணமும் சேர்த்து மொத்த விற்பனை செய்பவரின் இலாபமும் சேர்த்து விற்பனை விலை கணக்கிடப்பட்டு விற்கப்படும். பின் சில்லறை விற்பனைக்கு எடுத்துச் செல்வதற்கும் டீசலின் விலையேற்றம் அந்த நிலையிலும் கட்டண உயர்வுக்குக் காரணமாகிப் பொது மக்களுக்குக் கிடைக்கும் போது பொருள்களின் விற்பனை விலை இன்னும் அதிகமாகிவிடும். இவ்வாறு பன்னிலைகளில் பலவாறான விலையேற்றம் உணவுப் பொருள்களின் விற்பனை விலை அதிகரிக்கக் காரணமாகி, எளிய மக்கள் தலையில்தான் வந்துவிடியும். இது உணவுப் பொருளின்றி, வேறு பொருள்களைப் பொறுத்தவரை ஒரு தடவையுடன் முடிவடைவதாக அமையும், ஆனால் அரிசி, பருப்பு, காய்கறிகள், பால் போன்றவை அன்றாட அடிப்படைத் தேவைகளாதலால் அன்றாடம் கடும் வரிச்சுமையின் பாதிப்பு, தொடர்ந்து இருந்துகொண்டே இருக்கும். இது ஏழை, எளிய, உழைக்கும் மக்களான பல கோடி மக்களின் நாள் கூலியைக் கரையான் போன்று அவர்கள் உணராமலே அரித்துவிடுவதால் வறியவர்களாகி வறுமையின் பிடிக்குள் தள்ளப்படுவர்.

இவ்வாறெல்லாம் எளிய மக்கள் இன்னலுறுவர் என்பதை மனங்கொண்டு, டீசல் விலை கட்டுக்குள் வைக்கப்பட்டு வந்தது. 1980-களில் டீசல் விலை பெட் ரோல் விலையில் 5-இல் ஒரு பங்கு அளவில்தான் இருந்து வந்தது. சென்ற பத்தாண்டுகளுக்கு முன்னதாகக் கூட ஓரளவுக்குக் கட்டுக்குள் வைக்கப்பட்டு வந்தது. ஆனால் இந்தப் பா.ச.க. ஒன்றிய அரசு பெருநிறு வனங்கள், பெரும் முதலாளிகளின் நலமும் இலாபமும் குறையாது பாதுகாத்துக் கொண்டு அவர்களிடமிருந்து

நேரடி வரி வருவாயான வருமான வரியை விதிப்பதில் பல சலுகைகளைக் கொடுத்து, அந்த இழப்பையெல் லாம் ஈடுகட்ட வெகுமக்கள் மீது டீசல் மீதான வரி போன்று மறைமுக வரிகளை விதித்து அவர்களை முற்றிலுமாகச் சுரண்டி வருகின்றது.

இந்தப் பார்ப்பன சனாதன பா.ச.க. ஒன்றிய அரசு ஏழை, எளிய, வெகுமக்களான உழைப்பாளி, பாட்டாளி மக்களை பல்வேறு வழிகளில் சுரண்டிக் கொழுத்துக் கொண்டு வருவதைப் பொதுவுடைமைக் கட்சிகள், அமைப்புகள் உள்ளிட்ட இடதுசாரிகளாகிய நாம் எதிர் கொண்டு, வருகின்ற நிலையில் டீசல் மீது கடும் வரிவிதித்து அதன் விற்பனை விலையை விண்ணை எட்டும் அளவுக்கு பெட்ரோல் விலைக்கு ஒப்ப ரூ.80-க்கும் மேலாக உயர்த்தியுள்ளதை மேலும் உயர்த்த விடாமல் தடுத்து நிறுத்த வேண்டியதுடன், மிகப்பெரும் அளவில் எதிர்வினையாக கீழ்க்காணும் பொருள்களை முன்னிறுத்தி வலுவான போராட்டங்கள் நடத்திட வேண்டும்.


* டீசல் விற்பனை விலையேற்றத்தை எதிர்த்து மட்டும் தனியாகப் போராட வேண்டும்.
* டீசல் விற்பனை விலையை மேலும் உயர்த்திட முனையக் கூடாது என அரசுக்கு நெருக்கடி தர வேண்டும்.
* டீசல் மீது விற்பனை வரி விதிப்பதை உடனடியாக நிறுத்த வழி செய்ய வேண்டும்.
* பெட்ரோல் விற்பனை விலையேற்றத்தைப் படிப் படியாகக் குறைக்க வேண்டும், டீசல் விலை யேற்றத்துடன் இணைத்துக் கொள்வது, டீசல் விற் பனை விலையேற்றத்தின் கொடும் விளைவுகளை பின்னுக்குத் தள்ளுவதாக அமைத்துவிடுகின்றதோ என எண்ணத் தோன்றுகிறது.
* ஒரு காலவரையறைக்குள், டீசலை decontrolled priced commodity-யிலிருந்து controlled priced commodity என்று மாற்றப்பட வேண்டும்.
* டீசல் உற்பத்தி அடக்க விலையைக் கட்டுக்குள் வைத்திட வேண்டும்.
* டீசலுக்கு மானியம் அளித்து டீசலின் விற்பனை வரியை படிப்படியாகக் குறைத்திட வேண்டும்.
* உணவுப் பொருள்கள், பால், மருந்து போன்ற வற்றினை எடுத்துச் செல்லும் சரக்கு உந்துகளுக்கு, சரக்குத் தொடர் வண்டிகளுக்குத் தேவையான டீசல் விலையைப் பெருமளவுக்குக் குறைக்க வேண்டும்.

உண்மையில் நாட்டில் நிலவும் பணவீக்கத்திற்கு முதன்மையான காரணமாக டீசல் விற்பனை விலை யேற்றம் என்பதால், அந்தப் பின்னணியில் இந்தச் சிக்கல் தீர்க்கப்பட வேண்டும்.

## வையகம் சுட்டும் மாத்தலைவர்

புழுக்களோடு நெளிந்திருந்தாய்; பூணூல் காற்றுப்
புழுதியிலே மூச்சிழுத்தாய்; சடங்குக் குப்பை
வழுக்களிலே பிழைத்திருந்தாய்; மயக்கச் சேற்றில்
வழுக்குவதை வழக்கமாக்கிக் கொண்டாய்; சாதிக்
குழுக்களிலே கீழ்மையென மிதிக்கப் பட்டாய்.
குனிவதையே முதுகெலும்பின் தொழிலாய்க் கொண்டாய்
அழுக்கெடுத்து. உனை உனக்கே 'மனிதன்' என்று
அறிமுகமே செய்து வைக்கப் பெரியார் வந்தார்.

ஈராயிரம் ஆண்டாய் ஆரிய மாயை
இருட்டுக்குள் சிறைக்கிடந்த அடிமைக்கேட்டை
ஓராயிரம் பேர் கண்டும் காணாரே!
ஓர் அரிமாப் பார்வையிங்குப் பட்டதாலே
தேராயிரம் ஓடும் திருக்கோவில்கள்,
திருவிழாக்கள், தலைப்பிறந்த பிராமணர்கள்
சீராயிரம் வழங்கும் என்ற வேள்வி
திறனாய்வுத் தாக்குண்டு மருளும் கண்டீர்.



கொண்டாடும் தீபாவளி நாளைப் பற்றிக்
கூத்தாடும் கதைக்கருவே வெட்கக்கேடு
திண்டாடும் வெடி வெடித்துத் தமிழ்ப் பண்பாடு
சிதறியோடக் களித்தாடும் தமிழீர்! பூமிப்
பெண்டாட்டி, திருமாலைப் புணர்ந்து பெற்ற
பிள்ளைக்காய் குடும்பமாகத் தலைகுளிப்பீர்
தொண்டாடும் உயிர்த்தொழிலாம் உழவுப்பொங்கல்
திருநாளைக் கொண்டாடப் பெரியார் ஆர்த்தார்.

ஈரோட்டார்; பகுத்தறிவுப் பண்ணை வீட்டார்.
ஏற்கமாட்டாப் பார்ப்பனிய எதிரி வீட்டார்.
நேர்(மை) ஓட்டார்; தன்மானம் சாய்க்க மாட்டார்.
தீயிடாமல் புராணங்கள் விடவே மாட்டார்.
ஏர்க் காட்டார்; இழிவுகளை ஏற்க மாட்டார்.
இடிய மாட்டார்; எவருக்கும் அஞ்ச மாட்டார்.
கார்க்(முகில்)காட்டார் வானத்தை வணங்க மாட்டார்.
கரையேற்றப் பெரியார்போல் வரவே மாட்டார்.

தலைமுறைகள் கோடியிலும் பெரியார் போன்று
தரணியெங்கும் கண்டிலேன் நான் என்றார் 'அண்ணா'
இலைமறைவுக் காய்மறைவுக் குழப்பம் இல்லார்
இறைவனில்லை, இல்லவே இல்லை அதை இன்னும்
கலை முறையாய் நம்புகிறான் முட்டாள்; கண்டு
கழறியவன் முட்டாள் என்று இவர்போல்
மலை இடியாய் முழக்கியவர் யாருமில்லர்
மாத்தலைவர் இவரென்றே வையகம் சுட்டும்.

- பேராசிரியர் **இரா. சோதிவாணன்**

# சனநாயகத்தையும் கூட்டாட்சியையும் காப்பாற்ற மாநிலங்களுக்குத் தன்னுரிமை வழங்குக!

**குட்டுவன்**

இன்றைக்கு உலகமே முடங்கிக் கிடக்கிறது. என்றும் இல்லாத அளவிற்கு அமெரிக்கப் பொருளாதாரம் நாளும் சரிந்து வருகிறது. இருப்பினும் அமெரிக்க மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் படுபாதாளத்தில் விழாமல் இருப்பதற்கு அங்குள்ள மாநிலங்களே முதன்மையான காரணங்களாக உள்ளன. அமெரிக்காவில் உள்ள ஒவ்வொரு மாநிலமும் இந்தக் கொடிய நோய்த் தாக்குதலிலிருந்து காப்பாற்றும் திட்டங்களைப் பெருமளவில் நிறைவேற்றி வருகின்றன. இதற்கு முதன்மையான காரணம் மாநிலங்கள் வரி விதிப்பதிலும் வரி திரட்டுவதிலும் தன்னாட்சி உரிமையைப் பெற்றுள்ளன. அமெரிக்காவின் மாநிலங்கள் மாநில வருமான வரியை (State Income Tax) விதிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளன.

மாநிலங்கள் மிகக் கடுமையான சோதனைக் காலத்திலும் பெருமளவு நிதிச்சரிவைச் சந்திக்காமல் இருப்பதற்கு காரணம் அங்குள்ள முழுமையான நிதிக்கூட்டாட்சி இயலே (Fiscal Federalism) ஆகும். புரட்சியாளர் மாவோ அவர்களின் நீண்ட நாள் அமெரிக்க நண்பரும் எழுத்தாளருமான எட்கர் ஸ்னோ அவர்களைத் தனது இறுதிக் காலத்தில் சந்தித்து உரையாடினார். அப்போது அமெரிக்காவின் மாநிலங்களின் தன்னுரிமையைப் பற்றி எட்கார் ஸ்னோவிடம் கேட்டறிந்தார். ஸ்னோ அவர்கள் அமெரிக்காவில் 50 மாநிலங்கள் மக்களோடு தொடர்புடைய எல்லாப் பணிகளையும் திட்டங்களையும் தனித்தே செயல்படுத்த முடியும். காரணம் அங்குள்ள கூட்டாட்சி அரசு (Federal Government) மாநிலங்களின் உரிமைகளில் தலையிடவே முடியாது என்று கூறினார். மாசேதுங் அவர்கள் இந்தச் செய்தியைக் கேட்டு வியந்து போனார்.

அமெரிக்கா 50 மாநிலங்களுக்கிடையே தனது செல்வத்தையும் பொறுப்புகளையும் விரிவாக்கி அதிகாரப் பரவலை மேற்கொண்டு பகிர்ந்து வளர்ந்த முறையை சீனா கற்றுக்கொள்ள வேண்டும். ஒரு மத்திய அரசு எல்லாவற்றையும் செய்துவிட முடியாது. மாநில உள்ளாட்சி அமைப்புகளை நம்பித்தான் செயல்பட வேண்டும் என்று மாசேதுங் குறிப்பிட்டதாக எட்கர் ஸனோ தனது நூலில் குறித்துள்ளார்.

அதிகாரங்கள் மத்திய அரசின் கீழ்க் குவிந்திருப்பது நாட்டின் வளர்ச்சியைப் பெருமளவில் பாதித்துவிடும். ஒரு மத்திய அரசே எல்லாத் திட்டங்களையும் செயல்படுத்திவிட முடியாது. மேலும் திறமையின்மையும் ஊழலும் அதிகாரக் குவிப்பால் பெருமளவு பெருகிவிடும். மக்கள் தான் பெரும் பாதிப்புக்குள்ளாவார்கள் என மாவோவுக்குப் பின் வந்த சீனாவின் அரசியலில் செல்வாக்கோடு இருந்த தலைவர் டெங் அவர்களும் இதே கருத்தை வலியுறுத்தினார்.

இதன் காரணமாகத்தான், இன்றைய சீனாவின் பொருளாதாரம் பன்மடங்காக வளர்ச்சி பெற்று உலகின் வலிமையான நாடாக அமெரிக்கா அச்சுறும் வகையில் தனது செல்வாக்கை, உயர்த்தி வருகிறது. உலகில் தொழிற்புரட்சி தொடங்கியது இங்கிலாந்து நாட்டில்தான். அந்தத் தொழிற்புரட்சி முதன்முதலில் பரவியது இன்றைய ஐரோப்பிய நாடுகளில்தான். ஆனால் சீனா மின்சாதனப் பொருள்கள் மருத்துவத் துணைக் கருவிகள் மற்றும் பல மூலதனப் பொருள்களை பிரான்சு இங்கிலாந்து, ஜெர்மனி, இத்தாலி, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற அளவிற்குத் தனது பொருளாதாரக் கட்டமைப்பைச் சீனா வளர்த்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மருத்துவச் சாதனங்களையும் மருந்து மூலப்பொருள்களையும் 40 விழுக்காட்டிற்கு மேல் இந்தியா சீனாவிடமிருந்தே இறக்குமதி செய்கிறது. இதுபோன்ற பொருளாதார அரசியல் படிப்பினைகளை இந்தியா முற்றிலும் புறந்தள்ளி, மாநிலங்களைத் தனது அடிமைகளாக மாற்றும் முயற்சியிலேயே கடந்த 70 ஆண்டுகளாக இந்தியாவின் மத்திய அரசும், அதனை ஆட்சி செய்தவர்களும் செயல்பட்டுள்ளனர். இதன் காரணமாகத்தான் இன்று இந்தியாவின் ஒட்டு மொத்தப் பொருளாதாரமே சரிவு நிலைக்குச் சென்றுவிட்டது. **ஆனால் சீனப் பொருளாதாரம் வளர்ந்ததற்கு மாநிலங்களுக்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தன்னாட்சி வழங்கியதே முதன்மையான காரணமாக அமைகின்றன.**

கொரனா நோய்த் தொற்று முதலில் தொடங்கிய ஊகான் நகர் அமைந்துள்ள ஊபே மாநிலத்திற்கு, இக்கட்டுரையாசிரியர் இரண்டு முறை பயணம் செய்தபோது, சீனாவின் அரசியல் ஒரு கட்சியின் கீழ் இயங்கி வந்தாலும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டுள்ள நிலையை நேரில் பார்க்கும் வாய்ப்புக் கிட்டியது. இக்கருத்தைத்தான் இன்றைய மேற்கத்திய ஊடகங்கள் வெளிப்படுத்தி வருகின்றன.

விரைவில் சீனாவின் 14வது ஐந்தாண்டுத் திட்டம் (2021-25) நடைமுறைக்கு வரவிருக்கிறது. முதலில் வெளியிடப்பட்டுள்ள அணுகுமுறை திட்ட அறிக்கையில் சுற்றுச்சூழலையும் இயற்கை வளங்களையும் பாதுகாக்கும் நோக்கோடு திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன எனப் பல வெளிநாட்டு ஊடகங்கள் கருத்துகளை வெளியிட்டு வருகின்றன. கூட்டாட்சி இயல் என்ற முறையைச் சீன அரசு அறிவிக்கவில்லை என்றாலும் அங்கு மாநிலங்களுக்கு அதிகாரங்கள் அளிக்கப்பட்டதன் காரணமாக

ஊபே மாநிலம் விரைந்து இந்த கொரானா நோயைக் கட்டுப்படுத்தியுள்ளது. சீனாவினுடைய மத்திய அரசு இந்த நோய்த் தடுப்பு முறைகளில் சில குறைகளைச் சுட்டிக்காட்டியது. ஆனால் அங்குள்ள மருத்துவ வல்லுநர் கள் பின்பற்றிய அணுகுமுறையே சிறந்த அணுகுமுறை என உலக சுகாதார நிறுவனமும் மற்ற நாட்டின் வல்லுநர்களும் பாராட்டினர். இதற்குப் பிறகு சீனாவின் அதிபர் ஜின்பிங் நோய்க் கட்டுப்பாட்டிற்கு வந்தவுடன் ஊகான் நகருக்குச் சென்று நோய்த் தடுப்பு நடவடிக்கை யைப் பார்வையிட்டார். ஊபே மாநில அரசு கையாண்ட அணுகுமுறையைத் தாங்கள் தவறாகப் புரிந்து கொண்டதாகவும், அதற்காக வருத்தம் தெரிவிப்பதாகவும் அதிபர் தெரிவித்தார்.

கூட்டாட்சி இயலில் பல கருத்துரைகள் வழங்கப்பட் டாலும், எல்லாக் கூட்டாட்சி அறிஞர்களும் ஒரு கருத்தை ஒருமித்த அளவில் சுட்டுகின்றனர். ஒவ்வொரு நாட்டிலும் சமூக பொருளாதாரக் கட்டமைப்புகள் வெவ்வேறு வடிவில் அமைந்துள்ளன. இனம் மதம் மொழி பண்பாட்டு முறைகளில் வேறுபாடுகள் இருப்பினும் அக்கூறுகளை ஆக்கப்பூர்வமாக அரவணைத்துச் செல்வதே கூட்டாட்சி இயலை வலிமைப்படுத்தும் எனக் கூறி வருகின்றனர்.

இந்தியாவைப் பொறுத்தவரை, இது பல நாடுகளின் பல தரப்பட்ட வேற்றுமை கூறுகளைக் கொண்டுள்ளது. ஒற்றையாட்சி முறையைப் பின்பற்றிய பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சியில் கூட ஒரு மத்திய அரசால் இந்திய நிர்வாகத்தைச் சிறப்பாக நடைமுறைப்படுத்த முடியாது என உணர்ந்தனர். இதன் காரணமாகத்தான் 1919ஆம் ஆண்டிலும், 1935ஆம் ஆண்டிலும் இரு அரசமைப்புச் சட்டங்களை இயற்றி மாநிலங்களுக்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அதிகாரப் பகிர்வுகளை அளித்தது.

தமிழ் மாகாணத்தில் 1919ஆம் ஆண்டு சட்டத்தின் படி 1921இல் ஆட்சிக்கு வந்த நீதிக்கட்சி, கல்வி உட்பட இட ஒதுக்கீடு கொள்கையைப் பின்பற்ற பள்ளிக் கல்வி தொடங்கி, உயர்கல்வி வரை பல சீர்திருத்தங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முடிந்தது. சமூக நீதிக் கொள்கை நீதிக்கட்சியின் வழியாகத்தான் தமிழ்நாட்டில் நடைமுறைக்கு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் கூட்டுறவு கூட்டாட்சி இயலைப் பின்பற்றுகிறோம் எனக் கூறிக்கொண்டு பிரதமர் மோடி "நீட்" தேர்வு புதிய கல்விக் கொள்கை இந்தி, சமற்கிருதத் திணிப்பு புதிய சுற்றுச்சூழல் சட்டவரைவு போன்ற மக்கள் விரோத சட்டங்களை நிறைவேற்றி மாநிலங்களின் உரிமைகளை முற்றிலுமாகப் பறித்து வருகிறது. 2014 முதல் மோடி ஆட்சியின் கீழ்க் கொண்டு வரப்பட்ட ஒவ்வொரு சட்டமும் பிரித்தானிய ஒற்றை ஆட்சி முறையில் கூட நடைமுறைப் படுத்தப்படாத சட்டங்களாகும்.

கூட்டாட்சி இயல் மக்களிடத்தில் பரவலாக ஏற்றுக் கொள்ளப்படும் நிலை உருவாகி வருகிறது. மேற்கு வங்கம், ஒரிசா, கேரளா, ஆந்திரா, தெலங்கானா, பஞ்சாப் ஆகிய மாநிலங்கள் தற்போது சரக்கு சேவை வரியின் பாதிப்பு களைக் குறிப்பிட்டு, மோடி அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராகச் செயல்பட முடிவெடுத்துள்ளன. அதே போன்று பொது நிதியியல் அறிஞர்கள் பலர் சரக்கு சேவை வரி முற்றிலுமாகப் பொருளாதாரத்திற்குப் பாதிப்புகளை ஏற்படுத்தி வரிச் சுமையை மக்கள் மீது சுமத்தி இவ்வரி அமைப்பு முறை முழுமையான தோல்வியைச் சந்தித்துள்ளதாகக் கூறி வருகின்றனர்.

அண்மையில் காஷ்மீர் மாநிலத்தின் முன்னாள் முதல்வர் பருக் அப்துல்லா காஷ்மீர் மாநில மக்களின் சனநாயக உரிமைகள் முற்றிலுமாக முடங்கிவிட்டது என்றும், மக்கள் மோடி அரசின் மீது முழுமையாக நம்பிக்கை இழந்துவிட்டனர் என்றும் காஷ்மீர், ஜம்மு, லடாக் எனப் பகுதிகளாகப் பிரித்து காஷ்மீர் மாநிலத்தின் கட்டமைப்பை முற்றிலுமாகச் சிதைத்துவிட்டது என்றும் இது இந்திய ஒற்றுமைக்கு விடப்பட்ட அறைகூவலாகத்தான் எல்லோரும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும். இந்திய அரசமைப்புச் சட்டம் 370வது பிரிவில் திருத்தங்கள் மேற்கொண்டால் காஷ்மீர் சட்ட மன்றம் அந்தத் திருத்தத்தை ஏற்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்தச் சட்டப் பிரிவை மோடி அரசு அவமதிப்புச் செய்துவிட்டது. இதில் ஒரு வியப்பிற்குரிய நிகழ்வும் நடந்தேறியுள்ளது. இந்த அரசமைப்புச் சட்ட அவமதிப்பை உச்ச நீதிமன்றம் உடனடியாகக் கண்டிக்காமல், அதற் குரிய தீர்வைத் தீர்ப்பாக வழங்காமல் இது தொடர்பான வழக்கினைத் தள்ளி வைத்துள்ளது. காஷ்மீரில் கொண்டு வந்த சர்வாதிகாரமான அரசமைப்புச் சட்டத் திருத்தங்கள் எதிர்பார்த்த பலன்களில் ஒரு விழுக்காடு கூடக் கிட்ட வில்லை. சான்றாக இந்தத் திருத்தங்கள் வழியாக காஷ்மீர் சுற்றுலா வளர்ச்சிக்காக உள்நாட்டு பன்னாட்டு முதலீடுகள் பெருகி காஷ்மீர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும். காஷ்மீரில் ஒரு சொர்கத்தைக் காணலாம் என மோடி, அமித்ஷா தொடங்கி எல்லா சங்கிகளும் துள்ளிக் குதித்தனர். ஆனால் ஒரு நூறு ரூபாய் அளவிற்குக்கூட முதலீடுகள் காஷ்மீரில் வரவில்லை என்பதுதான் உண்மை.

சனநாயகத்தை மதிக்கின்ற உலக நாடுகளில் இது போன்ற நிகழ்வுகள் எதுவுமே நிகழ்ந்தது இல்லை. பல கூட்டாட்சி இயல் வல்லுநர்கள் பன்முகத்தன்மை கொண்ட ஒரு நாடு ஒற்றுமையாக வலிமையாக முன்னேற்றப் பாதையில் நடக்கவேண்டுமென்றால் பன்முகத்தன்மை கொண்ட மக்களின் உணர்வுகளை மதித்துப் போற்ற வேண்டும் எனக் குறிப்பிடுகின்றனர். மக்களாட்சி இயலும் அதிகாரப் பரவலாக்கல் முறையும் ஒன்றிணையும் போது அதிக வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்ச்சி, நேர்மை, சிக்கனம், திறமை, நடுநிலைமை ஆகிய வாய்ப்புகள் பொது மக்களுக்குக் கிடைக்கும் எனக் கூட்டாட்சி வல்லு நர்கள் வாதாடுகின்றனர். ஆனால் பாசக அரசு அமைந்த 2014 முதல் இந்தியாவில் இது முற்றிலுமாகச் சிதைக்கப் பட்டு வருகிறது.

இந்தியா 1935ஆம் ஆண்டில் அடிமை நாடாக இருந்த நிலையில் எழுதப்படாத அரசமைப்புச் சட்டமாகிய (Unwritten – Unitary Constitution) பிரித்தானிய அமைப்புச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு நமது அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கி உள்ளோம். இது விடுதலை பெற்ற இந்தியாவிற்கான அரசமைப்புச் சட்டத்திற்குரிய அடித்தளமாக இருக்க முடியாது என்று, மும்பையைச் சேர்ந்த இந்திய அரசமைப்புச் சட்டம் உருவாக்கும் அவையில் இடம் பெற்ற உறுப்பினர் எச்.வி. பட்டாஸ்கர் குறிப்பிட்டார். இன்று பட்டாஸ்கரின் கணிப்பு தான் நடைமுறைக்கு வந்துள்ளது. இந்திய அரசமைப்புச் சட்ட அவையின் விவாதத்தின் போது, பலர் குறிப்பிட்ட கருத்துகள் இன்று மெய்ப்பிக்கப்பட்டு வருகின்றன. மேலும் இந்திய உச்ச நீதிமன்றம் கடந்த 70 ஆண்டுகளாக அரசமைப்புச் சட்டம் சார்ந்த பல்வேறு தீர்ப்புகளை வழங்கியுள்ளது. ஆனால் இந்தத் தீர்ப்புகள் எல்லாம் ஒரு வகையில் மக்களுடைய-மாநிலங்களுடைய உரிமை களைக் கட்டுப்படுத்தியே வந்துள்ளன.

செப்டம்பர் திங்களில் கேரள சாமியார் கேசவானந்த பாரதி இறந்ததைப் பற்றியும், அதை ஒட்டிப் பல கருத்து களும் வெளி வந்தன. அதில் இந்தச் சாமியார் போட்ட வழக்கால்தான் அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்பு காப்பாற்றப்பட்டது என்ற ஒரு செய்தியைக் குறிப்பிட்டனர். ஆனால் கடந்த 70 ஆண்டுகளாக நாட்டில் குறிப்பாக உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளில் காணப்படும் கூறுகளையும் அவைகள் சாதாரண பாமர ஏழை மக்கள் மீது ஏற்படுத்திய விளைவுகளையும் ஆய்ந்தால், இந்தக் கூற்று முற்றிலும் தவறு என்பதை உணரலாம். ஒரு நாட்டின் ஆட்சி இயலோடு தொடர்பு டைய எந்த ஒரு அமைப்பையும் ஆய்வுக்கு உட்படுத் தாமல் முற்றிலுமாக ஏற்பது என்பது அறிவு சார்ந்த அணுகுமுறையைப் புறந்தள்ளிவிடும். 1950, 1960களில் இந்திய அரசமைப்புச் சட்டம் புனிதமானது எனப் பல அரசியல் தலைவர்களும் சில ஆய்வாளர்களும் குறிப் பிட்டனர். ஆனால் கடந்த 70 ஆண்டுகளில் நீதி, நிர்வாகம், சட்டம் இயற்றும் அமைப்புகளில் யார் அதிகமாக இடம் பெற்றுத் தங்களின் செல்வாக்கினை நிலைநிறுத்தி வருகின்றனர் என்பதை ஆய்வு செய்யும் போது பல உண்மைகள் வெளிப்படுகின்றன. வைத்தால் முடி சிரைத்தால் மொட்டை என்பதுதான் இந்த மூன்று முதன்மையான அமைப்புகளில் இடம் பெற்றுள்ள உயர் சாதி வர்க்கத்தினரின் கருத்தாக உள்ளது. இவர்கள் வழங்குவதுதான் சட்டம்-இவர்கள் வழங்குவதுதான் நீதி. இவர்கள் வழங்குவதுதான் ஒழுக்கம் என்று சனாதன முறையைப் புதிய வடிவில் இந்திய ஆட்சியியலில் புகுத்திப் பெரும்பான்மையான மக்களின் கோரிக்கைகளை ஏற்க மறுத்துப் புறக்கணித்து வருகின்றனர்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் அடிப்படைக் கட்டமைப்பு என எங்குமே இடம் பெறவில்லை. இடம் பெறாத ஒரு சொல்லை வைத்துக் கொண்டு இதுதான் தீர்ப்பு, இதுதான் நீதி, என்று சொல்வது என்பது மக்களாட்சி முறைக்கு எவ்வாறு பொருந்தி வரும். இது ஒரு வகையில் இருட்டறையில் இல்லாத கறுப்பு பூனையைத் தேடும் முயற்சியாகும். சனநாயகத்தின் நான்காம் தூண் என்கிற முதலாளித்துவ ஊடகங்கள் உயர்சாதி எழுத்தாளர்களைத் தங்களின் கைப்பிடிக்குள் வைத்துக் கொண்டு, இந்த மூன்று அமைப்புகள் ஒன்று சேர்ந்தோ தனித்தனியாகவோ எடுக்கும் முடிவுகள்தான் சரியானவை அரசமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டவை என்று கட்டுரைகளைத் தீட்டி வருகின்றன. இந்த சனா தனவாதிகள் தங்களின் செல்வாக்கிற்குப் பாதிப்பு ஏற்படுமானால், பேனாவைக் கத்தி போன்று எடுத்துச் சுழற்றுவார்கள். இந்திய அரசமைப்புச் சட்டம் உண் மையில் கூட்டாட்சி அமைப்பைச் சார்ந்த சட்டமாக இயங்கி இருந்தால், இன்றைக்கு நீதி, நிர்வாகம், வரி அமைப்பு பொருளாதாரம் எல்லாம் முழுமையாக வீழ்ந்திருக்காது அல்லவா?

உண்மையில் மாநிலங்கள்தான் இந்திய அரசின் நிருவாகத்தில் அடிப்படைக் கட்டமைப்புகளாக இன்று இயங்கி வருகின்றன. இந்தக் கொடிய கொரானா நோய்க் காலத்திலும் மாநில அரசுகள்தான் மக்களிடம் நேரடியாகச் சென்று துயர் துடைப்புப் பணிகளை மருத்துவப் பணி களை ஆற்ற முடிகிறது. ஆனால் ஒன்றிய அரசு நிறை வேற்றி நடைமுறைப்படுத்திய ஒற்றையாட்சிக் கூறுகளை உள்ளடக்கிய சட்டங்களை நீதிமன்றம் தனது தீர்ப்பு களால் ஆதரவு அளித்ததன் காரணமாக இன்று இந்தியா ஒற்றையாட்சிப் பாதையை மீறி சர்வாதிகாரப் பாதையில் பயணம் செய்கிறது. சனநாயகத்தில் போற்றப்பட வேண்டிய எதிர்ப்புக் குரல்கள் அடக்கப்படுகின்றன. மக்களுக்கான போராட்டங்கள் ஒடுக்கப்படுகின்றன. நீதியை நேர்மை யை எடுத்துக்காட்டிய அறிஞர்கள் எழுத்தாளர்கள் ஊடகவியலாளர்கள் கொடுமையான பாதுகாப்புச் சட்டத்தின் கீழச் சிறைப்படுத்தப்படுகின்றனர். சான்றாக பாசகவின் ஆதரவோடு காமீரின் முதல்வராக இருந்த மெகபுபா முக்தி இன்றும் சிறையில் இருக்கிறார்.

**ஒன்றிய அரசின் எதேச்சதிகார முடிவுகள்தான் சனநாயகம் என்றால், இந்தியா எங்குச் செல்கிறது என்ற வினா எழுகிறது? இதை எப்படித் தடுக்க முடியும்? ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே மதம், என்கிற பாசிச முழக்கம் இந்தியா நாட்டின் ஒற்றுமையை வேரோடு சாய்த்துவிடும்.**

**இதைத் தடுப்பதற்கான ஒரே வழி அமெரிக்கா, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் அரசமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள தன்மைகளைப் போற் றும் வண்ணம் இந்திய அரசியல் சமூக அமைப்பில் காணப்படுகின்ற வேறுபாடுகளை உறுதி செய்யும் வண்ணம் மாநிலங்களுக்குத் தன்னாட்சி உரிமை களை வழங்கி அதற்குரிய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்குவதுதான் ஒரே வழி.**

# வகுப்புரிமைக் கோரிக்கைக்கு வித்திட்ட பார்ப்பனரின் வன்முறையும் எச்சரிக்கையும் நீதிமன்ற அவமதிப்பும்

கலசம்

*"The Non-Brahmin movement took place only after the 1910s, but long before that non – Brahmins were protesting against the virtual monopoly of Brahmins in the educational and employment opportunities offered by the British, which as the traditional literati, the Brahmins found easier to avail themselves of. In 1840, 32 panchalars from Salem protested against offering Brahmins all the responsible public offices and prayed for employing all classes of men without distinction" (See : Bower 1851 : 91-95)*

*- **P.RADHAKRISHNAN***

*(Source Book : Caste, Its Twentieth Century Avatar, Edited and Introduced by M.N.Srinivas, Penguin Publication, 1997, Page 111).*

மும்பையிலுள்ள Penguin Publications என்னும் புகழ்பெற்ற புத்தகப் பதிப்பு நிறுவனம், 1997ஆம் ஆண்டில் "Caste, Its Twentieth Century Avatar, Edited and Introduced by M.N.Srinivas" என்கிற ஆங்கில நூலை வெளியிட்டுள்ளது. இந்த எம்.என். சீனிவாசன் என்பவர் சமூகஇயல் அறிஞர்; மண்டல் குழுவினருக்கு ஆலோசகராகவும் செயல்பட்டார். இந்த நூலில் இந்தியாவின் பல மாநிலங்களின் இடஒதுக்கீட்டுப் போராட்ட வரலாறு தொகுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் இடஒதுக்கீட்டுப் போராட்ட வரலாற்றைப் பற்றி சமூகஇயல் ஆய்வாளர் பி.இராதாகிருட்டிணன் என்பவர் எழுதிய கட்டுரையும் இந்த நூலில் இடம்பெற்றுள்ளது. அந்தக் கட்டுரையில் அவர், 1840 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த 32 பாஞ்சாலர்கள், பொறுப்புமிக்க அரசாங்க வேலைகளைப் பார்ப்பனர்களுக்கு மட்டுமே கொடுக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். பாகுபாடு காட்டாமல் அவ்வேலைகள் எல்லா வகுப்புகளுக்கும் கொடுக்கப்பட வேண்டும், என்று ஆங்கில அரசிடம் கோரிக்கை வைத்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

### அந்தக் கோரிக்கையின் பின்னணி என்ன?

பாஞ்சாலர்கள் என்னும் சொல் இரும்பு, மரம், பொன், பஞ்ச உலோகம், கல் ஆகிய பொருள்களைக் கொண்டு ஐந்தொழில் செய்யும் கம்மாளர்களைக் குறிக்கும். இந்திய அளவில் விஸ்வகர்மா என்று அழைக்கப்படுகின்றனர்.

இன்றைய திருவண்ணாமலை மாவட்டம் (அன்றைய சித்தூர் மாவட்டம்) போளூர் வட்டம் சதுப்பேரி கிராமத்தில் 1814 ஆம் ஆண்டு கம்மாளர் வீட்டில் திருமணத்துக்குப் பந்தல்கால் நடும் நிகழ்வு. வழக்கம்போல் அவ்வகுப்பைச் சேர்ந்த அவ்வூரைச் சேர்ந்த பண்டித மார்க்கசகாய ஆச்சாரி அந்நிகழ்வை நடத்துகிறார். அவ்வூரிலுள்ள பார்ப்பனர் பஞ்சாங்கம் குண்டையன் அதைத் தடுக்கிறார். இந்தத் தகராறு ஊர்ப் பஞ்சாயத்துக்குச் செல்கிறது.

### கம்மாளரின் திருமணத்தை நடத்திவைக்கும் உரிமை யாருக்கு?

''கம்மாளர்களுக்குப் புரோகிதம் செய்யும் உரிமை இல்லை. அவர்கள் வீட்டுத் திருமணங்களில் வேதப்படியான மந்திரங்களை ஓதக்கூடாது. அதற்கு அவர்களுக்கு உரிமை இல்லை; புராணப்படியான மந்திரங்களைத் தான் ஓத வேண்டும்'' என்று பஞ்சாங்கம் குண்டையரும், ''வேதப்படியான மந்திரங்களை நாங்களே ஓதி எங்கள் வீட்டுத் திருமணம் உள்ளிட்ட இன்ப, துன்ப நிகழ்ச்சிகளை நாங்களே இதுகாறும் நடத்திக் கொண்டு வருகிறோம். அப்படியே நடத்திக் கொள்வதற்கு எங்களுக்கு உரிமை உண்டு'' என்று பண்டித மார்க்கசகாய ஆச்சாரியும் ஊர்ப் பஞ்சாயத்தாரின் முன்னிலையில் சொற்போர் நிகழ்த்தினர்.

மார்க்கசகாய ஆச்சாரி புராணங்களின் பொய்யுரைகளை அம்பலப்படுத்தி, இதிகாசங்களின் கட்டுக் கதைகளைச் சுட்டிக்காட்டி பஞ்சாங்கம் குண்டையரின் வாதங்களை மறுத்தார்; தங்களுக்குரிய உரிமையை வேதங்களிலும் சாஸ்திரங்களிலும் கூறப்பட்டுள்ளவற்றின் அடிப்படையில் எண்பித்தார். மார்க்கசகாய ஆச்சாரியின் வாதங்களை பஞ்சாங்கம் குண்டையரால் மறுக்க முடியவில்லை.

### பஞ்சாயத்தார் தீர்ப்பு

பஞ்சாயத்தார் கம்மாளர்கள் தங்கள் வீட்டுத் திருமணம் மற்றும் பிற நிகழ்வுகளைத் தாங்களே நடத்திக் கொள்ளலாம் என்று தீர்ப்புக் கூறினார்கள்.

தீர்ப்புரையின்போது பஞ்சாயத்தார் தங்களுக்கு நேர்ந்த நிகழ்வு ஒன்றையும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். ''அதாவது சில ஆண்டுகளுக்கு முன் நாங்கள் இவ்வூர்ப் பார்ப்பனர்களை அணுகி வேதம் சொல்லிக் கொடுக்குமாறு கேட்டோம். அதற்கு அவர்கள் வேதத்தைச் சொல்லிக் கொடுக்க மறுத்துவிட்டார்கள். சொல்லிக் கொடுத்தால்,

சொல்லிக் கொடுப்பவனும் நரகத்துக்குப் போவான்; கற்றுக் கொள்பவனும் நரகத்துக்குப் போவான் என்று கூறி மறுத்து விட்டார்கள். பிறகு நாங்கள் கம்மாளர்களை அணுகிச் சொல்லித் தருமாறு கேட்டோம். அவர்கள் வேதத்தை யாரும் படிக்கலாம்; யாருக்கும் சொல்லிக் கொடுக்கலாம். சொல்லிக் கொடுக்க மறுப்பவன்தான் நரகத்துக்குப் போவான்'' என்று கூறி எங்களுக்கு வேதம் சொல்லிக் கொடுத்தார்கள் என்பதைத் தெரிவித்தார்கள்.

பஞ்சாயத்தாரின் தீர்ப்பைப் பஞ்சாங்கங் குண்டையன் ஏற்க மறுத்து அடியாட்களுடன் சென்று கலவரம் செய்து அந்நிகழ்வைத் தடுத்துவிட்டார்.

## நீதிமன்றத் தீர்ப்பு

பண்டித மார்க்கசகாய ஆச்சாரி சித்தூர் சென்று மாவட்ட அதாலத் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். நீதிபதி வழக்கின் விவரத்தை நீதிமன்றத்தின் இந்து மதப் பண்டிதருக்குத் தெரிவித்து வேதங்களும், சாஸ்திரங்களும் இதைப் பற்றி என்ன சொல்கின்றன என்று கருத்துக் கேட்டார். மார்க்க சகாய ஆச்சாரியின் வாதம் சரியானதுதான் என்று நீதிமன்றப் பண்டிதர் தெரிவித்த கருத்தின் அடிப்படையில், வெள்ளைக்கார நீதிபதி ஜே.எச்.டெக்கார் (J.H.DECKOR) 15.12.1818இல், ''மனுதாரர்கள் (அதாவது கம்மாளர்கள்) தங்கள் சமுதாயத்துக்குரிய மத சம்பந்தமான சடங்குகளை வேதத்தை அனுசரித்து இதற்கு முன் செய்து வந்ததைப் போலவே, இனிமேலும் செய்வதற்கு உரிமை உடையவர் ஆவர். பார்ப்பனர் அதில் தலையிடக் கூடாது'' என்று தீர்ப்புக் கூறினார்.

## வன்முறையும் எச்சரிக்கையும்

அத்தீர்ப்பை மதிக்காத பார்ப்பனர்கள் **'கம்மாளர் சாதி தவிர மற்ற சாதிகளெல்லாம் எந்தத் தேசத்திலும் எந்த நாட்டிலும் தங்களுக்கு உபபலமாய் இருக்க, கவர்மெண்டு துரைத்தனத்தில் எந்தக் கோர்ட்டிலும் எந்த நாட்டிலும் தங்களுடைய வம்சத்தாராகிய பார்ப்பனர்களே சகலத் துக்கும் அதிகாரிகளாயிருக் கிறார்களாகையால் அவர்களைக் கொண்டு இந்தக் கம்மாளரை வெகு லேசாய் ஜெயிக்கலாம்'** என்று வஞ்சினம் கூறி, சித்தூர், சேலம், திரிசிபுரம், பெங்களூர், மைசூர், பெல்லாரி, பந்தர், விஜயநகரம், திருநெல்வேலி, மதுரை, கும்பகோணம், சீர்காழி, சிதம்பரம் முதலான ஊர்களிலும் மாவட்டங்கள் தோறும் கம்மாளர் குலத்தினரைத் தாக்கித் தொந்தரவு கொடுத்தனர்; கலகம் விளைவித்தார்கள்.

பார்ப்பனர்கள் தாக்கியதும் இப்படிப் பேசியதும் எச்சரிக்கையா? மிரட்டலா? மிரட்டல் அல்ல; எச்சரிக்கையே என்பதை 1836இல் திமிரி என்கிற ஊரில் அவர்கள் மெய்ப்பித்துக் காட்டிவிட்டார்கள்.

வேலூர் மாவட்டம், ஆர்க்காடு வட்டம் திமிரியில் 1836ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் நாள் கம்மாளர் தாண்டவாச்சாரி வீட்டில் சிரார்த்தம் நடத்திக் கொடுக்கக்கம்மாள வாத்தியார் வெங்கடசுப்பாச்சாரியார் சென்றார். இதை அறிந்த அவ்வூர்ப் பார்ப்பனர் பஞ்சாங்கம் கிருஷ்ணமாச்சாரி, 'பார்ப்பனர்களில் ஒரு பிரிவினர் பெயருக்குப் பின்னால் ஆச்சாரி என்று போட்டுக் கொள்வார்கள்', அங்கு சென்று வெங்கடசுப்பாச்சாரியை வாதத்திற்கு அழைத்தார். இருவருக்கும் சொற்போர் நிகழ்ந்தது. வெங்கடசுப்பாச்சாரி சாஸ்திரங்களின் வேதத்தின் அடிப்படையில் கம்மாளருக்கு உள்ள உரிமையை எடுத்துக் கூறி வாதிட்டார். அதை ஏற்காமல் பஞ்சாங்கம் கிருஷ்ண மாச்சாரி சிரார்த்தம் நடப்பதைத் தடுத்துவிட்டார். வெங்கடசுப்பாச்சாரி ஊர் மணியக்காரரிடம் முறையிட்டார். மணியக்காரர் பார்ப்பனர். அவர் தாசில்தாரிடம் உத்தரவு பெற்று வருமாறு கூறிவிட்டார்.

## நீதிமன்ற அவமதிப்பு

தாண்டவாச்சாரி அவ்வாறே தாசில்தாரின் உத்தரவு பெற்று வந்தபின் வெங்கடசுப்பாச்சாரி சிரார்த்தம் நடத்தினார். அவ்வேளை பார்ப்பன மணியக்காரரும் அப்புவையங்கார், சீனிவாசய்யங்கார், பஞ்சாங்கம் கிருஷ்ணமாச்சாரி முதலானோர் அங்கு சென்று அதைத் தடுத்து விட்டார்கள். வெங்கடசுப்பாச்சாரி தாசில்தாரிட மிருந்து பெற்று வந்த உத்தரவையும், சித்தூர் மாவட்ட அதாலத் நீதிமன்றம் 1818 திசம்பர் மாதம் 15ஆம் தேதி 'கம்மாளர்கள் தங்கள் குடும்ப நிகழ்ச்சிகளை இதுகாறும் தங்களுடைய வகுப்பாரைக் கொண்டே நடத்தி வந்ததைப் போலவே இனியும் தொடர்ந்து தங்கள் வகுப்பாரைக் கொண்டே நடத்திக் கொள்ளலாம். அதில் பார்ப்பனர்கள் தலையிடக் கூடாது' என்று கூறிய தீர்ப்பின் நகலையும் காண்பித்தார். பார்ப்பனரான ஊர் மணியக்காரரும் மற்ற பார்ப்பனர்களும் தாசில்தாரின் உத்தரவையும் சித்தூர் அதாலத் நீதிமன்றத் தீர்ப்பையும் மதிக்காமல் சிரார்த் தத்தைத் தடுத்து விட்டார்கள்.

வெங்கடசுப்பாச்சாரி வேலூர் குற்றவியல் நீதிமன்றத்தில் பஞ்சாங்கம் கிருஷ்ணமாச்சாரி மீது வழக்குத் தொடுத்தார். வழக்கை விசாரித்த வெள்ளைக்கார நீதிபதி J.A.BOURDHLLONG 1838 ஆம் ஆண்டு சூன் மாதம் 5ஆம் நாள் கூறிய தீர்ப்பில் பஞ்சாங்கம் கிருஷ்ணமாச் சாரிக்கு ரூ.20/- (ரூபாய் இருபது) தண்டத் தொகை விதித்துக், கட்டுமாறு உத்தரவிட்டார்.

## எல்லா வகுப்புகளுக்கும் பங்கு கொடு

1814இல் சதுப்பேரி கிராமத்தில் நடந்த நிகழ்வு, 1818 திசம்பர் 15இல் அளிக்கப்பட்ட சித்தூர் மாவட்ட அதாலத் நீதிமன்றத் தீர்ப்பு, அதைத் தொடர்ந்து தோல்வியைத் தாங்கிக் கொள்ள முடியாத பார்ப்பனர்கள், கம்மாளர்கள்,

மீது சித்தூரில் தொடங்கி தமிழகம், ஆந்திரம், கர்நாடகம் முதலான பகுதிகளில் பல ஊர்களில் நடத்திய தாக்குதல், அப்போது விடுத்த எச்சரிக்கை, 1836இல் திமிரியில் நடந்த நிகழ்வு, சித்தூர் நீதிமன்றத் தீர்ப்பையும் அதன் அடிப்படையில் தாசில்தார் கொடுத்த உத்தரவையும் மதிக்காமல் திமிரியின் மணியக்காரரான பார்ப்பனன் நடந்து கொண்டது ஆகிய இவற்றைப் பற்றித் தமிழகம், ஆந்திரம், கர்நாடகம் ஆகிய பகுதிகளில் வாழ்ந்த கம்மாளர்கள் சிந்தித்துப் பார்த்தார்கள். அதன் விளைவு தான் "**1840இல் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த 32 கம்மாளர்கள் வெள்ளைக்கார அரசிடம் அரசாங்க வேலைகளை எல்லாச் சாதிகளுக்கும் பங்கு போட்டுக் கொடுங்கள்**" என்று கோரிக்கை மனு கொடுத்தார்கள்.

### அயோத்திதாசர், பாவாணர், நா.வானமாமலை ஆகியோரின் பதிவுகள்

சதுப்பேரி நிகழ்வு, பண்டித மார்க்கசகாய ஆச்சாரிக்கும் பஞ்சாங்கங் குண்டையருக்கும் நடைபெற்ற 63 வினா-விடை அடங்கிய சொற்போர், பஞ்சாயத்தார் தீர்ப்பு, சித்தூர் மாவட்ட அதாலத் நீதிமன்றத் தீர்ப்பு ஆகியவை சித்தூர் ஜில்லா அதாலத் கோர்ட் தீர்ப்பு என்ற பெயரில் சிறு நூலாக வெளியிடப்பட்டுள்ளது. திமிரி நிகழ்வும் அந்நிகழ்வில் நடைபெற்ற சொற்போரும் வேலூர் குற்றவியல் நீதிபதி அளித்த தீர்ப்பும், வேலூர்த் தீர்ப்பு என்ற பெயரில் சிறு நூலாக வெளியிடப்பட்டுள்ளது. இவை கடைகளில் கிடைக்காது. கம்மாளர் சமூகப் பெரியவர்களிடம் கிடைக்கும். இத்தீர்ப்பைப் பற்றி பண்டித அயோத்திதாசரும் தேவநேயப் பாவாணரும் மிகச் சுருக்கமாகவே தங்கள் நூலில் பதிவு செய்திருக்கிறார்கள். ஆய்வாளர் நா.வானமாமலையும் சிந்தனையாளன் வே.ஆனைமுத்து ஆகிய இருவரும்தான் அண்மைக் காலத்தில் இத்தீர்ப்பின் சிறப்பைப் பற்றி விரிவாகவே பதிவு செய்துள்ளார்கள். மார்க்சிய ஆய்வாளர் நா.வானமாமலை அவர்கள் கம்மாளர்களின் வீடுகளில் முடங்கிக் கிடந்த இந்த ஆவணங்களைத் தேடிப்பிடித்து, படித்து "தமிழ்நாட்டில் சாதி சமத்துவப் போராட்டங்கள்" என்னும் தலைப்பில் நூலாக்கினார். முனைவர் மே.து.இராஜ்குமாரின் மக்கள் பதிப்பகம் இதைப் பதிப்பித்து வெளியிட்டது. இப்போது இந்நூலை அலைகள் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

### வே.ஆனைமுத்துவின் அறிமுகம்

வே.ஆனைமுத்து, சிந்தனையாளன் 1997ஆம் ஆண்டின் பொங்கல் மலருக்கு இந்த வழக்கும் தீர்ப்பும் பற்றி என்னைக் கட்டுரை எழுதுமாறு செய்து அதை அம்மலரில் வெளியிட்டார். மேலும் அவர் தம்முடைய பெரியாரியல் நூலின் முதல் தொகுதியில், இந்தியச் சமுதாயச் சீர்திருத்த முன்னோடிகள் என்னும் தலைப்பில் சதுப்பேரி பண்டித மார்க்கசகாய ஆச்சாரி பற்றி ஒரு பக்கக் குறிப்புரை எழுதிப் பதிப்பித்துள்ளார்.

மேலும் இந்தத் தகராறு நிகழ்ந்த 200ஆம் ஆண்டின் நிறைவு விழா 15.12.2014இல் சதுப்பேரியில் நடைபெற்றபோது, அதில் சீனந்தல் அடிகளாருடன் கலந்து கொண்டு வே.ஆனைமுத்து தன்மான உணர்வூட்டும் "ஓர் எழுச்சிமிக்க உரையாற்றி" பண்டித மார்க்கசகாய ஆச்சாரி சுயமரியாதைக்காரர், தன்மான மறவர், "போராளி" என இன்றைய தலைமுறையினருக்கு அவரை அறிமுகப்படுத்தினார். அவருடைய அந்த உரையின் இறுதிப் பகுதியுடன் இக்கட்டுரையை முடிக்கிறேன்.

### வே.ஆனைமுத்து பேசியது வருமாறு:

"இந்தச் சதுப்பேரி கிராமத்தில் பண்டித மார்க்கசகாய ஆச்சாரி என்னும் பெரிய அறிவாளி பிறந்தார்; மனித உரிமைப் போராளி பிறந்தார்; ஒரு சமுதாயத்தினுடைய விசுவகர்மச் சமுதாயத்தினுடைய தன்மானத்தைக் காப்பாற்றிக் கொடுத்த ஒரு மேதை பிறந்தார். அந்த மேதை பிறந்த சதுப்பேரிக்கு இன்று நாங்கள் வந்திருக்கிறோம். என் வரலாற்றில் இது எனக்குப் பெருமை. நான் மார்க்கசகாய ஆச்சாரி பிறந்த சதுப்பேரிக்குப் போனேன் என்று பெருமையாக என் வரலாற்றில் எழுதுவேன். இனி ஆண்டுதோறும் மார்க்கசகாய ஆச்சாரியின் சாதனையைப் போற்றி, இந்த ஊரில் நீங்கள் விழா எடுக்க வேண்டும். விழாவுக்கு யாரை வேண்டுமானாலும் கூப்பிடுங்கள்; எங்களையும் கூப்பிடுங்கள்; மகிழ்ச்சியாக வருகிறோம்.

"மார்க்கசகாய ஆச்சாரியைப் போல் ஒவ்வொரு சாதிக்காரரும் தன்சாதியின் சுயமரியாதையைக் காப்பாற்றப் பாடுபட வேண்டும். எந்தச் சாதியும் இன்னொரு சாதிக்கு உயர்வானதும் இல்லை; தாழ்வானதும் இல்லை. அந்தந்தச் சாதிக்கும் அவரவர்களே குரு; பார்ப்பான் குரு அல்ல. அந்த நிலையைச் சமுதாயத்தில் உண்டாக்க நாம் பாடுபடுவோம்.

"பெரியாருக்கு முன்னமே இன்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன்பே ஒரு தன்மான வீரர்" தன்மான மறவர், சுயமரியாதைக்காரர் பிறந்த ஊர் இந்தச் சதுப்பேரி. இந்த ஊர் மக்கள் தங்கள் ஊரில் பிறந்த அந்த மேதையை அறிவாளியைத் தெரிந்துகொள்ள வேண்டும்; புரிந்துகொள்ள வேண்டும்; படித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மறுபடியும் சொல்கிறேன். சதுப்பேரி மார்க்கசகாய ஆச்சாரி புகழ் ஓங்குக! சதுப்பேரி மார்க்கசகாய ஆச்சாரி புகழ் ஓங்குக!" (அவையினரும் உடன் ஓங்கி முழங்கினார்கள்)

# அறிஞர்கள் பார்வையில் சதுப்பேரி மார்க்கசகாய ஆச்சாரியின் தன்மான உணர்வும் உரிமை வேட்கையும்




**அயோத்திதாசர் சொல்கிறார்:**

“1814ஆவது வருடத்தில் விஸ்வபிரம வம்மிஷத்தாரெனும் கம்மாளருக்கும் பிராமணரென வழங்கும் விப்பிராளுக்கும் விவாக சம்மந்த விஷயமாய் வியாஜியங்கள் நேரிட்டு மாஜிஸ்ட்ரேட்டு கோர்ட்டிலும், சித்தூர் ஜில்லா அதவுலத் கோர்ட்டிலும், கம்மாளர்களே ஜெயமடைந்து விட்ட படியால்...”

(அயோத்திதாசர் சிந்தனைகள் தொகுதி 1, பக்.137).

**பாவாணர் சொல்கிறார்:**




“இடைக்காலத்தில் தமிழ் மரபிற்கொவ்வாத பல ஆரிய முறைகளும் சடங்குகளும் தமிழ் மணங்களிற் கலந்து விட்டதனாலும், அவற்றால் தமிழுக்கு பல தீமைகள் விளைந்ததினாலும், அவற்றைக் களைந்து தமிழ் மணத்தைத் திருத்துதற்குப் பல சீர்திருத்தத் தலைவர்கள் தோன்றினர். அவருள் நாயகமானவர் நால்வர். அவராவர் : இங்ஙனம், மார்க்கசகாயர் பிராமணியத்தையும், மறைமலையடிகளும் கலியாண சுந்தரனாரும், அத்துடன் ஆரிய மொழியையும், ஈ.வெ.இரா. அவற்றோடு வீண் சடங்குகளையும் விலக்கித் திருமணக் கரணத்தைத் திருத்தியவராவார்.”

(தமிழர் திருமணம் என்னும் நூலிலிருந்து)

**பேராசிரியர் நா. வானமாமலை சொல்கிறார்:**

“தொழில் செய்யாமல் புத்தியால் வாழ்பவர்கள், தொழிலைத் தாழ்ந்தது என்று கூறும் காரணத்தை மறுத்துத் தொழிலே உயர்வானது; அதுவே, உலகைப் பாதுகாப்பது; கடவுள் செயலுக்குச் சமமானது என்ற தொழில் மேன்மைக் கருத்தை (Dignity of Labour) இவர்கள் (கம்மாளர்கள்) வலியுறுத்துகிறார்கள். வேறு எந்தச் சாதி வரலாற்றுக் கதைகளிலும் காணப்படாத கருத்து இது.”

சாதி சமத்துவப் போராட்டக் கருத்துகள் என்னும் தம் நூலில்
(அலைகள் வெளியீட்டகம், சூலை 2008 பதிப்பு, (பக்.33))




“புராணங்களே வருண உயர்வு தாழ்வுகளை ஆதரித்து வாதாடுவதால் மார்க்கசகாய ஆச்சாரி புராணங்களின் பல மாறுபாடுகளை எடுத்துக் காட்டி எல்லாப் புராணங்களுமே பொய்யென்று கூறுகிறார்.” (மேற்படி நூல், (பக்.32)

“இவ்வாறு கதைகள் மூலமாக உயர்வு தாழ்வு கற்பிப்பதை எதிர்ப்பதற்குப் புராண முரண்பாடுகளை எடுத்துக் காட்டி வன்மையாக அனைத்தும் பொய்யென்று நிரூபிக்கிறார்.” (மேற்படி நூல், (பக்.33)

“நிலக்கிழார்களுக்கு ஆதரவாகவும், பிராமணர்கள் புனைந்து எழுதிய கருத்துகளை மனதிற் கொண்டுதான் வலங்கை, இடங்கைப் பிரிவினையைப் பிராமணர்கள் ஏற்படுத்தினார்கள் என்று மார்க்கசகாய ஆச்சாரி சொல்லுகிறார்.”

(மேற்படி நூல், (பக்.4)



**வே. ஆனைமுத்து சொல்கிறார்...**

“சதுப்பேரி மார்க்கச்சாய ஆச்சாரியைப் போல் ஒவ்வொரு வகுப்பாரும் தம்தம் வகுப்பின் சுயதன்மானத்தைக் காப்பாற்றப் பாடுபட வேண்டும்! எந்த வகுப்பும் இன்னொரு வகுப்புக்கு உயர்வானதும் இல்லை; தாழ்வானதும் இல்லை! அந்தந்த வகுப்புக்கும் அவர்வர்களே குரு! இந்த நிலையைச் சமுதாயத்தில் உண்டாக்க நாம் பாடுபடுவோம்!”

(மக்கள் நெஞ்சம், 14-11-2014)

**விசுவகருமச் சமுதாய மேம்பாட்டு ஆர்வலர்கள்**
**தொடர்புக்கு : 7826907804**

# பாய்ந்து வருகுது பெரியார் ‘வேல்’

- பேராசிரியர் **இரா. சோதிவாணன்**

14-2-2020 வெள்ளிக்கிழமை வெளிவந்த தினமணியில் கோதை சோதிலட்சுமி ‘மனுதருமமும் சில மாயைகளும்’ என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதி இருந்தார். இறை மறுப்பாளர்கள் (மறைமுக மாகப் பெரியார் அவர்கள்) மனுதருமத்தின் மாண்பை உணராமல், வர்ணக் கட்டமைப்பை உருவாக்கிச் சமூகத்தில் ஏற்றத்தாழ்வை உண்டாக்குவது என்றும் பெண்களை இழிவுபடுத்துவது என்றும் அந்நூல் பற்றிச் சில மாயைகளைத் தோற்றுவித்துவிட்டார்கள் என்று தம் கருத்தை வெளியிட்டிருந்தார். அதற்கு நான் மாயையா? மெய்ம்மையா? என்ற தலைப்பில் மனு நூல், சாதிப் பாகுபாட்டை வகுத்துக் குமுகத்தில் எத்துணையோ ஏற்றத்தாழ்வை உண்டாக்கிவிட்ட வெங்கொடுமையையும் பெண்களை எவ்வாறெல்லாம் இழிவுபடுத்தியுள்ளது என்ற கீழ்மையையும் அந்நூலில் உள்ள கூற்றுகளைக் கொண்டே சுட்டிக்காட்டி மறுப்புக் கட்டுரை எழுதினேன். அது தமிழ்ப் பணி, சிந்தனை யாளன் ஆகிய இதழ்களில் வெளிவந்தது.

தற்போது 14-8-2020 வெள்ளிக்கிழமை வெளிவந்த தினமணியில் அதே கோதை சோதிலட்சுமி ‘துள்ளி வருகுது வேல்’ என்ற தலைப்பில் இறைமறுப்பாளர் கள் மேல், தம் வெறுப்பை அள்ளித்தெளித்திருக்கிறார். ஊடகவியலாளரான அவருக்கு வெள்ளிக்கிழமைகளில், ‘விருப்பு வெறுப்பான சனி’ பிடித்துக் கொள்ளுமோ என்ற வினாவுக்கு என்னிடம் உரிய விடையில்லை, அவருக்கு இறைமறுப்பாளர் பற்றிய அச்சவுணர்வு அவ்வளவு இருக்கக்கூடாது என்பதே என் அறிவுரை யாகும்.

அவர்தம் கட்டுரையில் எழுதியுள்ள வழுக்களுக்கு நான் அமைதியாக மறுப்புத் தெரிவிக்க விருப்புற்றிருக் கிறேன்.

திருவாசகத்தில் ‘அச்சப்பத்து’ பதிகத்தில் மாணிக்க வாசகர் “யானைக்கும் கொடிய புலிக்கும் கூட அஞ்ச மாட்டேன். இறைவனை ஏற்காதவர்களைக் கண்டு அஞ்சுவேன்” என்கிறார். இறைமறுப்பாளர்கள் இன் றைக்கு நேற்றல்ல என்றைக்கும் இருந்தே வருகிறார் கள். இறை நம்பிக்கையை இந்த மண்ணிலிருந்து அகற்றிவிட முடியவில்லை; அகற்றவும் முடியாது என்று அக்கட்டுரையாளர் அச்சப்பட்டுக்கொண்டே அச்சப்படாதது போலக் காட்டிக்கொள்கிறார்.

மானிடனின்-பெரியாரின் பகுத்தறிவு வளர்ச்சி மலர்ந்து கொண்டே இருக்கும் வரை, இறைவன் இருக் கின்றானா என்னும் வினா தொடர்ந்து கொண்டே இருக்கும். இறை நம்பிக்கையை எவ்வாறு அகற்றிவிட முடியாதோ அவ்வாறே பகுத்தறிவாளர் இருக்கும் வரை இறைவனின் இருப்பைப் பற்றிய வினாவை விலக்கி விடவே முடியாது.

மணிவாசகர் ‘அறிவுறுத்தல்’ என்ற பதிகத்தில் “நாடகத்தால் உன் அடியார் போல் நடித்து நான் நடுவே வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின் றேன்” என்று பாடுகிறார். இங்கே மணிவாசகருக்கே தாம் உண்மையான அடியார் இல்லையோ என்ற நம்பிக்கை இன்மையைத் தம் நெஞ்சுக்கு அறிவுறுத்திக் கொள்கிறார்.

மேலும் அதே பதிகத்தில்,

“வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான்
மனம் நின்பால்
தாழ்த்துவதும் தாம்உயர்ந்து தம்மையெல்லாம்
தொழவேண்டி”

என்று மணிவாசகர் பாடியுள்ளார். வானவர்கள் (கடவுளர்) தாம் வாழ வேண்டி மானிடரை-அடியாரை வாழ்த்து கிறார்கள். அவர்கள் மனம் கடவுளரைப் பணிவது, வானவர்கள் தாம் உயர்ந்து, தம்மையெல்லாம் தொழ வேண்டும் என்பதற்காக என்று மணிவாசகர் கூறுகிறார். கடவுளர்க்கே ‘தன்னலம்’ இருப்பதாகக் கூறுவது பொருத் தமா என அறிவிடம் கேள்வி தொடுத்துப் பாருங்கள்.

எத்தனையோ காலங்களாக இங்கே சநாதன தர்மம் கேள்விக்கு உட்பட்டிருக்கிறது என்று கட்டுரை யாளர் கூறுகிறார். ஆமாம். எத்தனையோ காலங்க ளாக இங்கே சநாதன தருமம் தமிழர் நெறியில் - தமிழர் மரபில் அடாதன புகுத்தி அடிமைச் சிறையில் அடைத்து இறுமாந்து இனமானத்தைத் தின்றழித்தது என ஆழ்ந்து எண்ணிப் பாருங்கள்.

தமிழர் நாகரிகம் என்பது இறைமறுப்புக் கொள்கை யல்ல. ஐவகை நிலங்கள் பகுக்கப்படும் போதே அவற் றுக்கான தெய்வங்களும் முதற்பொருளாகச் சொல்லப் பட்டுவிட்டன என்று ஆசிரியர் கூறுகிறார்.

தமிழர் நாகரிகம் என்பது இறைப்பற்றாளர் கொள்கை மட்டுமே என உம்மால் துணிந்து கூறமுடியுமா? தமிழர்க்கு அது வாழ்க்கைக் கடலில் ஒரு துளிக்கூறு. அவ்வளவுதான்.

**ஐவகை நிலங்கள் பகுக்கப்படும்போது அவற் றுக்கான தெய்வங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவை முதற்பொருளாகக் கூறப்படவில்லை. நிலமும் பொழுதும்தான் முதறபொருளாகக் கூறப் பட்டிருக்கின்றன. கருப்பொருளில், தெய்வம் ஒன் றாகப் பல பொருளோடு சொல்லப்பட்டிருக்கிறது.**

**தொல்காப்பியத்தில் அகத்திணை இயலைப் படியுங்கள். அது நன்கு புலனாகும்.**

மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சியாகும். அக்குறிஞ்சித் தெய்வம் சேயோன்-செவ்வேள்-முருகன். 'சேயோன் மேய மைவரை உலகம்' எனத் தொல்காப்பியம் கூறுகிறது. பரிபாடலில் பதினேழாம் பாடல் செவ்வேள் சிறப்புகளைப் பண்ணோடு இசைக்கிறது. அப்பாடலில் திருப்பரங்குன்றத்தின் பெருவளம், பெருநலம் பேசப்படுகின்றன. அக்குன்றத்தின் அடியிலே மாலைதோறும் மகிழ்வோடு உறைவோர் வானுலகத்தையும் விரும்பமாட்டார் என்றும் அப்பாடல் குறிப்பிடுகிறது.

"மாலை மாலை அடியுறை இயைநர்
மேலோர் உறையுளும் வேண்டுநர் யாவர்"

(பரிபாடல் 17-அடிகள் 8, 9)

அதே பாடலில் மக்கள் "இறைவனே யாமும் எம் சுற்றமும் எப்பொழுதும் உன்னுடைய அழகிய நெடிய குன்றத்தைப் பாடி உன்புகழை ஏத்தித்தொழுது வேண்டுவோம். யாம் இன்பம் நிறைந்த நாளைப் பெறுக என்று உன்னை வணங்குவோம்" என்று போற்றுகின்றனர். இங்கே குன்றம் (நிலம்தான்) முதற்பொருளாக நிற்கிறது. அதன் முதன்மைச் சிறப்பு குறிக்கப்படுகிறது என்பதை அறிக.

மேலும் 5ஆம் பரிபாடல் செவ்வேள் முருகன் பற்றியது. அப்பாடலில் அடியார்கள் வேண்டுவதைக் காண்க.

"யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல
அருளும் நின்பால் அன்பும் அறனும் மூன்றும்..."

(பரிபாடல் அடிகள் 78, 79, 80)

என்னும் தமிழ் நெஞ்சத்துப் பெருமிதப் பண்பாட்டை அறிக.

**இது தமிழ்க் கடவுள் முருகனிடம் தமிழ் நெஞ்சம் வேண்டும் பண்பாட்டுத் தனித்தன்மையாம். கட்டுரை ஆசிரியர் சநாதன சரவணனைக் கொண்டு வந்து தமிழ் முருகனோடு சேர்க்க வேண்டாம்.**

முருகன் கையிலேந்தியிருக்கும் வேல், அறிவின் குறியீடு என்று கூறுகிறார் கட்டுரையாளர். இப்போதாவது அவர் பெரியாரை அணுகி வந்துள்ளார் என்று கூறலாமோ? பெரியாரும் இந்த அறிவைத்தானே - வேலைத்தானே தமிழர் (மாந்தர்) எல்லாரும் ஏந்த வேண்டும் எனத் தம் வாழ்நாளெல்லாம் முழங்கி வந்தார். கானமுயலெய்த அம்பினில் யானை பிழைத்த வேல் ஏந்தல் இனிது என்று திருவள்ளவரும் பெருமுயற்சிக்கும் பெரு வெற்றிக்கும் - வேலைக் குறியீடு செய்துள்ளார்.

இறை நம்பிக்கை கொண்டுதானே கண்ணுக்குத் தெரியாத தீ நச்சு நுண்மியின் கொடுமையைக் கடந்து வருகிறோம் என்கிறார் கோதை சோதிலட்சுமி. அப்படியென்றால் கண்ணுக்குத் தெரியாத கடவுளுக்கு வடிவம் சமைத்துக் கோயில்களில் காணவிட்டுத் தொழவைத்த மக்களுக்கு அங்கே வரவிடாமல் கதவடைத்தது ஏனோ? அத்தீ நுண்மியின் தொற்றுப் பரவி மக்களின் உயிர்க் கேடு மிகும் என்பதால் தானே? இஃது அறிவியலின் பார்வைதானே? பெரியார் பகுத்தறிவின் வெற்றிதானே?

சாதி, மதம், கடவுள், பெரியோர், சிறியோர், தலைவர், தொண்டர், மருத்துவர், செவிலியர், ஏழை, பணக்காரன், உள்நாட்டான், வெளிநாட்டான் என்று வேற்றுமை பாராமல் அந்நுண்மித் தொற்று பல நூறாயிரம் உயிர்ப் பற்றை அறுத்திருக்கிறதே. அதற்கு ஆறுதல் அளிப்பதற்கு எத்தனையோ ஆய்வுகள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. அறிவு அற்றம் காக்கும் கருவி அன்றோ?

இறைப் பற்றாளர்கள் பெரும்பாலோர் கொடிய நோய் வந்தே இறுதி எய்தி இருக்கிறார்கள். செத்தவரை எழுப்பும் வல்லமை அருள் பெற்றவர்களும் செத்தே போயிருக்கிறார்கள். இதனைக் கருத்தில் கொண்டுதான். உவமைக்கவிஞர் சுரதா, "செத்தவரைத் திருவருளால் எழுப்பலாமென்றால், செத்தவரை எழுப்பியவர் ஏன் செத்துப்போனார்" என்று துணிச்சலாகப் பகுத்தறிவுக் கேள்வி எழுப்பினார்.

வெறும் பிதற்றல்களுக்குப் பதில் சொல்லி நேரத்தை வீணடிக்காமல் 'சரணம் சரணம் ஷண்முகா சரணம்' என்று இறைவனை நினைந்து அமைதியாய் முன்னேறுவதே சாலச் சிறந்தது என்று கட்டுரையை அவர் முடித்திருக்கிறார். தமிழ்த்தெய்வம், சங்கத் தமிழ்த் தலைமைப் புலவன். மிகத் தொன்மைக் காலத்திலிருந்தே முருக வழிபாடு என்றெல்லாம் பரக்கப் பேசிவிட்டு, இறுதியில் வடமொழியில் மந்திரத்தை ஓதி முடித்திருப்பது, வெட்கக் கேடாக உள்ளது.

"ஆரிய வேத மந்திரங்கள் இயற்றப்படு முன்னரே தமிழில் மந்திர நூல்கள் இருந்தன. தொல்காப்பியம் கூறும் எழுவகைச் செய்யுள் நிலைக்களங்களுள் மந்திரமும் ஒன்று."

'வாய்மொழி' என்னும் ஒருநிலைக்களமே மந்திரம் ஆகும்.

"நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப"

(தொல்.1434)

என்கிறார் தொல்காப்பியர். மறை என்பது மந்திரம் எனவும் வாய்மொழி எனவும் படும். மன்னும் திரம் (திறம்) மந்திரம். 'சிவபோற்றி' என்பதே தமிழர் கொண்டதும் உண்மையானதும் ஆன திருவைந்தெழுத்தாம். அவ்வாறே 'முருக போற்றி' என்பதே தமிழர்க்குரிய ஆறெழுத்து மந்திரம் ஆகும். (தேவநேயப் பாவாணர்).

இதை, முனைவர் மு.பெரி.மு. இராமசாமி - 'நக்கீரர் ஓர் ஆய்வு' என்னும் நூலில் குறிப்பிடுகிறார்.

எனவே கட்டுரையாளர் இனியேனும் போகிற போக்கில் பொத்தாம் பொதுவாகப் பிதற்றாமல் 'உண்மை

அறிவே பேரின்பம்' (சச்சிதானந்தம்) என்னும் அறிவு நலத்தோடு கட்டுரை எழுதுக.

இவர் மட்டும் இல்லை. கலாரசிகன் (தினமணி ஆசிரியர் திரு. கே. வைத்தியநாதன்) 15.3.2020 ஞாயிற்றுக்கிழமை வெளிவந்த 'தமிழ்மணி' பக்கத்தில், தொல்லியல் துறையில் பணியாற்றி ஓய்வுபெற்ற திரு. கி. சிறிதரன் எழுதிய 'வழிகாட்டும் கல்வெட்டுகள்' என்ற நூலுக்கு அணிந்துரை எழுதி இருக்கிறார். அதற்கு ஆறு பத்திகளில் ஆறாம் பத்தியில் மட்டும் நூல் பற்றிப் பொத்தாம் பொதுவாகச் சில வரிகள் எழுதி விட்டு, முதல் ஐந்து பத்திகளில் இறை மறுப்பாளர், சமய மறுப்பாளர் (பெரியார்) பற்றியே சாடியிருக்கிறார். அவருக்கும் நான் மறுப்புக் கட்டுரை எழுதினேன். அக்கட்டுரை, தமிழ்ப்பணி இதழில் (நிறுவநர் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் - ஆசிரியர் திருவள்ளுவர்) மேத் திங்களில் வெளிவந்துள்ளது. சிந்தனையாளன் இதழிலும் ஆகத்துத் திங்களில் வெளிவந்திருக்கிறது.

அவர் போலவே கம்பவாரிதி இலங்கை செயராசுவும் தினமணியில் 'பிழையும் பிழைதிருத்தமும்' என்ற தலைப்பில் 4 தொடர் கட்டுரை எழுதித் திடீரென்று முடித்துக் கொண்டார். அவரும் பகுத்தறிவாளரைச் சாடி வம்ப வாரிதியாக மாறிவிட்டார். அவர், சிந்தனையாளன் இதழ் ஆசிரியர் வே. ஆனைமுத்து அவர்கள் தொகுத்திருக்கும் பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் 20 தொகுதிகளைப் படித்துப் பார்க்க வேண்டும். பேரறிஞர் அண்ணாவின் 'தீ பரவட்டும்' என்ற நூலைப் படித்தறிய வேண்டும். 'ஆரிய மாயை' என்ற நூலையும் படித்து உண்மையான அறிவுத் தெளிவு பெற வேண்டும்.

இறை மறுப்பாளர்களுக்கு-பகுத்தறிவாளர்களுக்கு அரணாக அமைந்திருப்பது ராகுல சாங்கிருத்தியாயனின் 'வால்காவிலிருந்து கங்கை வரை' என்னும் நூலாகும். அதன் ஒரு பகுதியில் வரும் கூற்றே என் கட்டுரைக்கு முடிவுரையாகும்.

இடம் : பாஞ்சாலம் (ஐக்கிய மாகாணம்)

காலம் : கி.மு.700

பிரவாகன்-சத்திரியன் : வசிட்டரும், விசுவாமித்திரரும் தோற்றுவித்த தேவதைகளும் வேள்வியும் மந்த புத்தியுள்ளவர்களைத்தான் திருப்திப்படுத்த முடியும்; அறிவாளிகளையும் புத்திக்கூர்மையுள்ள சந்தேகவாதிகளையும் அவற்றால் ஒன்றும் செய்ய முடியாது. இந்தப் பிரவாகன் தயார் செய்யும் படகு மிகவும் உறுதியாக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு அப்பாலும் அரசர்களையும் சேனாதிபதிகளையும் சுகபோகிகளையும் காப்பாற்றிக் கொண்டிருக்கும். பிராமணர்களுக்கு இந்தச் சத்திரியனின் புதிய உறுதியான கண்டுபிடிப்பு பேருதவியாக இருக்கும். இந்த அகண்டவெளி-பிர்மம்-பிர்மஞானம்-இறந்தவர்கள் மறுபடியும் புலன்களுக்கு அப்பாற்பட்ட ஒரு நுண்ணிய புலன் மூலம்தான் முடியும் என்பதே என் புதிய கண்டு பிடிப்பாகும்.

## வர்மன்ஸ் மூலிகைத் தைல எண்ணெய் அறிமுகம்





சென்ற மாதம் வர்மன்ஸ் மூலிகைத் தைல எண்ணெய் அறிமுக விழா நடைபெற்றது. காட்டுமன்னார்குடி தோழர் தி.துரை சித்தார்த்தன் - மரு. செம்மலர் வர்மன்ஸ் மூலிகைத் தைல எண்ணெயை அறிமுகம் செய்து வைத்தார்கள். முதல் விற்பனையைக் கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், திருநெல்வாயில் அறத்துறை பொன். இளங்கோவன் அவர்கள் துவக்கி வைத்தார். சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக ரூ.1000 அளித்தார்.




**வர்மன்ஸ் மூலிகைத் தைல எண்ணெய்**
வேண்டுவோர் தொடர்பு கொள்ள :
**கு. தொல்காப்பியன் : 9597526990**

## ஆசிரியருக்கு மடல்

வணக்கம். 'சிந்தனையாளன்' ஆகஸ்ட் 2020 இதழில் வெளியான நாம் இந்து மதத்தை விட்டு வெளியேற முடியுமா? தங்கள் தலையங்கம் சிந்திக்க வைத்தது. இந்துவாகப் பிறந்த நாம் இந்துவாக மடியக் கூடாது. தோழர் ராம் அவதேஷ் சிங் மறைந்தார் என்னும் அஞ்சலிக் கட்டுரை நெஞ்சத்தை வெகுவாக உருக்கியது. அவர் மறைவு ஒடுக்கப்பட்ட சமுதாயத் திற்குப் பேரிழப்பு என்பதில் சிறிதும் ஐயமில்லை. இடஒதுக்கீட்டுக்குள் வராத (மேல்) சாதியினருள் நலிந்த வர்க்கு இந்திய ஒன்றிய அளவில் 10 விழுக்காடு தனி ஒதுக்கீடு - தமிழக நிலை என்னும் தோழர் இரா. பச்சமலையின் கட்டுரை மிகவும் அருமை. ஒடுக்கப்பட்ட மக்களுக்குக் கல்வியை மறுப்பது தேசியக் கல்வி கொள்கை 2020 என்னும் இரா. பச்சமலையின் எழுத்தோவிய மும் அற்புதம். மரு. சோமாஸ்கந்தனின் **'உலகின் தலைசிறந்த சிந்தனையாளர், தொழிலாளர் விடிவெள்ளி காரல் மார்க்ஸ்' என்னும் கட்டுரை மிகவும் பயனுள்ளது. 'நான்' ஊரடங்கும், இந்திய அரசும் தமிழக அரசும், சிந்தனையாளன் இதழும் - என்ற தங்கள் கட்டுரை வெகுசிறப்பு. தொடரட்டும் தங்கள் தொண்டுகள்.**

**- தங்க. சங்கரபாண்டியன்,** பொழிச்சலூர்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

வணக்கம். கொரோனா முடக்கத்தால் நான்கு மாதங்கள் வராமல் இருந்து இப்பொழுது மீண்டும் வெளிவந்திருக்கும் சிந்தனையாளன் ஆகஸ்டு மாத இதழ் இன்று கிடைக்கப் பெற்றேன். நன்றி. மகிழ்ச்சி.

திரு. வே. ஆனைமுத்து அவர்களுக்குப் பிறகு சிந்தனையாளன் இதழ் தொடர்ந்து வெளிவருமா? அல்லது முடங்கிவிடுமா என்று வெகு நாட்களாகவே அச்சம் (அ) கவலை கொண்டிருந்தேன். அந்தக் கவலை இப்பொழுது முற்றிலும் நீங்கிவிட்டதென்பதை தங்க ளுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரியாரின் கொள்கை வழியில், தமிழக மக்களின் பொருளாதார, சமூக விஷயங்களில் அக்கறை கொண் டுள்ள ஒரு சிறந்த அறிஞர்களைக் கொண்டுள்ள ஆசிரியர் குழு ஒன்றினை திரு. ஆனைமுத்து அவர்கள் உரு வாக்கித் தமிழக மக்களுக்குத் தந்துள்ளார்கள்.

பல தலைவர்கள் மறைந்தவுடன் அவர்கள் உரு வாக்கியவையும் மறைந்துவிடுவதை நாம் பாத்திருக் கிறோம். ஆனால் சிந்தனையாளன் அம்மாதிரி மறையா தென்பதை நான் உணர்கிறேன். ஒரு நல்லதொரு ஆசிரியர் குழுவை அழைத்துத் தந்து ஒரு அமைப் பையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ள திரு. வே. ஆனைமுத்து அவர்களை நான் பாராட்டுகிறேன். நிற்க.

'இந்தியாவில் பிறக்கிற எல்லோரும் கிறிஸ்துவன், முஸ்லிம் தவிர இந்துக்களே என்பது சட்டம் என்று ஆசிரியவுரையில் கூறியுள்ளது உண்மையே. இதை எதிர்த்து இந்தச் சட்டத்தை மாற்ற நாம் முயலவேண் டும். இந்து மதம் என்ற ஒன்று கிடையவே கிடையாது. இல்லாத ஒன்றைச் சட்டம் செய்து இருப்பதாக ஆக்கி யுள்ளார்கள். இதை நாம் ஏற்கக்கூடாது. நாம் இந்துக் கள் அல்ல என்றால் நம்மை அழைக்கும் பொழுது என்ன பெயரிட்டு அழைப்பது என்பதை (தமிழர் மதமா அல்லது இயற்கை மதத்தவரா) ஆசிரியர் அவர்கள் தன்னுடைய கருத்தை கூறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சிந்தனையாளனை நான் தொடர்ந்து படித்து வருகிறேன். நல்ல கட்டுரைகள் வருகின்றன. தொடர்ந்து இதேபோல் செயல்பட ஆசிரியர் குழுவினரை வாழ்த்து கிறேன்.

**- க. நாகராசன்,** உள்ளகரம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

வணக்கம். தாங்கள் நலமுடன் வாழ வாழ்த்துகள்.

**'சிந்தனையாளன்' ஆகஸ்ட் 20 இதழ் கிடைக்கப் பெற்றேன். கட்டுரைகள் அனைத்தும் சிறப்பாக இருந்தன. குறிப்பாக, திரு. மரு. சோமாஸ்கந்தன் அவர்கள் எழுதியிருந்த 'உலகின் தலைசிறந்த சிந்தனையாளர்-தொழிலாளர் விடிவெள்ளி காரல் மார்க்ஸ்' என்ற கட்டுரை அந்த மாமேதையின் வாழ்க்கை சரித்திரத்தை சுருக்கமாக அதேசமயம் அவர் வாழ்வின் முக்கிய சம்பவங்களை அறிந்து கொள்ளும் வகையிலும் அமைந்திருந்தது. திரு. மரு.சோமாஸ்கந்தன் அவர்களுக்குப் பாராட்டுதல்கள்.**

தொடர்ந்து உலகின் சிறந்த புரட்சியாளர்களான லெனின், பிடல் காஸ்ட்ரோ, சேகுவார தமிழகத்தின் தாத்தா இரட்டைமலை சீனிவாசன், அயோத்திதாசப் பண்டிதர், பாரத ரத்னா அண்ணல் அம்பேத்கர், மகாத்மா ஜோதி ராவ் பூலே போன்றோர் வாழ்க்கைச் சரித்திரத்தையும் வெளியிட்டால் இக்கால இளைய தலைமுறையினருக்குப் பயனாக அமையும்.

**- இரா. சாந்தகுமார்,** கூடுவாஞ்சேரி

### தி.க. திண்டுக்கல் மாவட்ட செயலாளர் நல்லத்தம்பி மறைந்தார்

திண்டுக்கல் தி.க. மாவட்டச் செயலாளர் நல்லத்தம்பி அவர்கள், 5.9.2020 அன்று காலை 6.00 மணியள வில் மறைந்தார்.

**- அ. காஜாமைதீன்,**
நெய்க்காரபட்டி, பழனி

## வாழ்க்கை ஒப்பந்த விழா



### வேலூர் தேன்மொழி-தா.இரவி இணையரின் மகள் மணவிழா



வேலூர் மாபெ.பொ.க. தோழர் தா.இரவி-தேன்மொழி இணையரின் மகள் இர.குருப்ஸ்கயா (எ) சமரிசை கீதா-தாமோதரன் இணையரின் மகன் தா.பன்னீர்செல்வம் இவர்களின் மணவிழா 31.8.2020 அன்று வேலூரில் சிறப்பாக நிகழ்ந்தது.

30.8.2020முன்னிரவு வேலூர் உதவும் உள்ளங்கள் தலைவர் இரா.சந்திரசேகரன் ''செல வில்லாத் தொண்டு'' என்ற தலைப்பிலும் சென்னை, மணிமேகலை பிரசுரத்தின் தலைவர், எழுத்துச் செல்வர் முனைவர் லேனா தமிழ்வாணன் ''வாழ்வு எனும் பூங்காவனம்'' என்ற தலைப்பிலும் வாழ்வியல் வழிகாட்டும் உரை நிகழ்த்தினர். விழாவில் பங்கேற்ற முனைவர் லேனா தமிழ்வாணன் அவர்களுக்கு ''பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள்'' நூல்-20 தொகுதிகள் நினைவுப் பரிசாக அளிக்கப்பட்டது.

மணவிழாவில் மணிமேகலை பிரசுரம் இரவி தமிழ்வாணனும் வேலூர் மா.பெ.பொ.க. தோழர்களும் பங்கேற்று வாழ்விணையரை வாழ்த்தினர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

### மரு. த. திவாகரன் - மரு. ம. மஞ்சு வாழ்த்துப் பெற்றனர்

அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டம், சந்நாசி நல்லூர் நினைவில் நிற்கும் ரெங்கசாமி-நலமுடன் திருமதி. ரெங்கநாயகி, புலவர் வே. ஆறுமுகம் - தமிழரசி இவர்களின் பேரனும், B. தமிழரசன் - தேன்மொழி இவர்களின் புதல்வனுமான மரு. த. திவாகரன், M.B.B.S. DCH., (M.D.) அவர்களுக்கும்;

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், வல்லம் படுகை திரு.கிருஷ்ண படையாட்சி-பாப்பாத்தி அம்மாள், திரு. வே. குஞ்சிதபாதம், கோட்டையாண்டார் - சுசீலா இவர்களின் பேத்தியும் நினைவில் நிற்கும் K. மனோகரன், B.E. - நலமுடன் திருமதி. சுகுணா இவர்களின் புதல்வி செல்வி மரு. ம. மஞ்சு, M.B.B.S. அவர்களுக்கும் 14.09.2020, திங்கள்கிழமை காலை 7.30 மணிக்கு மணமகள் இல்லத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

23.09.2020 அன்று மாலை அம்பத்தூர் பெரியார் - நாகம்மை அறக்கட்டளையில் மணமக்கள் தோழர் வே. ஆனைமுத்துவை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். மணமகனின் தாயார் தேன்மொழி உடன் இருந்தார். மணமக்கள் சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக ரூ.1000/-ம், சிந்தனையாளன் கட்டணமாக தொகை மூன்று ஆண்டுக்கு ரூ.500/-ம் வழங்கினர்.

**வாழ்க மணமக்கள்!**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

### ஐம்பத்தி ஐந்தாவது ஆண்டு மணநாள் மகிழ்வாக

இரூர் ச.இராதாகிருஷ்ணன்-மணியம்மை இணையரின் மணவிழா சமயபுரம் நாராயணசாமி நாயுடு சத்திரத்தில் 1965, செப்டம்பர் மாதம் 5ம் தேதி, திராவிடர் கழக மத்திய நிர்வாகக் குழுத் தலைவர் தி.பொ.வேதாசலனார் அவர்கள் தலைமையில், திருச்சி வே.ஆனைமுத்து மற்றும் இரூர் சு.மந்தராசலம் ஆகியோருடைய வாழ்த்துக்களுடன் இனிது நடைபெற்று 55ஆம் ஆண்டு துவங்கும் நிலையில், வாழ்த்திய இருவரும் நலமுடன் வாழ, நாங்களும் மக்களுடன் பெயரப் பிள்ளைகளுடன் இனிது வாழும் மகிழ்வின் அறிகுறியாக ரூ.1000/- சிந்தனையாளன் வளர்ச்சி நிதிக்கு அன்பளிப்புச் செய்து மகிழ்கிறோம்.

அன்புடன்

**இரூர் ச.இராதாகிருஷ்ணன் மணியம்மை**

**இரூர் ம.மணியம்மை இராதாகிருஷ்ணன்**

### தாம்பரம் முல்லை 25ஆம் பிறந்தநாள்

தாம்பரம் மா.பெ.பொ.க. தோழர் மா.சுப்பிரமணியம்-கஸ்தூரி இணையரின் மகள் முல்லை 17.09.2020 வியாழன் அன்று 25 ஆம் ஆண்டு பிறந்தநாள்.

முல்லை, 17 அன்று மாலை, அம்பத்தூரில் பெரியார்-நாகம்மை அறக்கட்டளையில் வே.ஆனைமுத்து அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அவருடன் பெற்றோரும், உற்றாரும் வந்திருந்தனர்.

தம் 25ஆம் பிறந்தநாளை ஒட்டி, சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக உருபா 1000 அளித்தார்.

முல்லை மொரிஷியாவில் மருத்துவம் பட்டப் படிப்பு படிக்கிறார்.

# தமிழ்நாடு நம்நாடு ! தாயக நாளைக் கொண்டாடு !






## கொண்டாடுவோம்
## தமிழ்நாடு விழா !

**மாணவர்களுக்கான தலைப்பு**

**தமிழ்நாடு உருவான நாளை ஏன் கொண்டாட வேண்டும்?**

**பொதுவானவர்களுக்கான தலைப்பு**

**தமிழ்நாடு உருவான நாளும் எதிர்காலப் பணிகளும் ...**

**இரண்டு போட்டிகளுக்கும் தனித்தனியே**

**பரிசுகள் ...**

| முதல் பரிசு | 2ஆம் பரிசு | 3ஆம் பரிசு | ஆறுதல் பரிசு |
|---|---|---|---|
| உருவா 5000 | உருவா 3000 | உருவா 2000 | மாவட்டந்தோறும் உருவா 500 |

- மாணவர்களுக்கான போட்டியில் பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொள்ளலாம். பள்ளி, கல்லூரி அடையாளச் சான்றினை இணைத்து அனுப்ப வேண்டும்.
- பொதுவானவர்களுக்கான போட்டிக்கு எல்லோரும் கட்டுரை அனுப்பலாம்.
- கட்டுரைகள் 2020 அக்தோபர் 20ஆம் நாளுக்குள் வந்துவிடவேண்டும்.
- கட்டுரைகள் A4 தாளில் 5 பக்கங்களுக்கு மிகாமல் இருக்கவேண்டும்.
- மின்னஞ்சல் வழியாகவோ அஞ்சல் வழியாகவோ அனுப்பலாம்.

மின்னஞ்சலில் அனுப்பிட ...

**thamizhnaduvizha@gmail.com**

அஞ்சல் முகவரி :
**தமிழ்நாடு விழா கட்டுரைப்போட்டிக் குழு**
பாவலரேறு தமிழ்க்களம்
மேடவாக்கம், சென்னை-600 100.

***தாயக நாளைக் கொண்டாட அழைக்கிறது ...***

# பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு

**86080 68002 / 98941 82482 / 98840 72010**

# தந்தை பெரியார் 142வது பிறந்தநாள் விழா

பெரியார் பிறந்தநாள் விழா கீழ்பென்னாத்தூர் பேருந்து நிலையம் அருகில் உங்கள் சிந்தனைக்கு தகவல் இடத்தில் சிறப்பாக நடைபெற்றது. அதில் மா.பெ.பொ.க.மாவட்டச் செயலர் பொன்.சுப்பிரமணியன் தலைமை தாங்கினார் மற்றும் ஆசிரியர் கோ.கோதண்டராமன், க.ஆதிமூலம், கி.இராமநாதன், பெ.பாலகிருஷ்ணன், சோ.அண்ணாமலை, பெ.அண்ணாமலை, மு.பழனி, மூ.நீலமேகம், வெ.சந்திரசேகர் மற்றும் சிறுவர்கள் அருண் அறிவு, அ.இசையமுது, அ.அமிழமுது, அ.செங்கொடி, நி.சோமிசா, நி.இன்பரசி ஆகியோர் கலந்து கொண்டனர். மற்றும் பி.எ.செம்மொழி பெரியாரின் பெண்ணுரிமையைப் பற்றி சிறப்பாக உரையாற்றினார். மற்றும் தோழர்கள் சோ.அண்ணாமலை, பொன்.சுப்பிரமணியன் பெரியார் கருத்துக்களை எடுத்துரைத்தனர். பெரியார் கருத்துக்களை முழுக்கமாக பதிவு செய்தனர். அப்போது மா.பெ. பொ.க. சார்பில் 1929ல் தந்தை பெரியார் தலைமையில் ‘‘செங்கல்பட்டு சுயமரியாதை மாநாட்டில்’’ தந்தை பெரியார் 142வது பிறந்தநாள் விழா 17.9.2020ல் கீழ்பென்னாத்தூர் சந்தைமேடு ‘அகல் மய்யம்’ நிறுவனத்தில் ‘‘பெரியாரின் சிந்தனைகள் அடித்தட்டு மக்களுக்கு அவசியம் ஏன்? என்ற தலைப்பில் கருத்தரங்கத்தில் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி, தலித் விடுதலை இயக்கம், விடுதலை சிறுத்தைகள் கட்சி போய் நிறுவன பொறுப்பாளர்கள் தலித் மக்கள் மன்ற பொறுப்பாளர்கள் ஆதித் தமிழர் கட்சி, ஆதித் தமிழர் பேரவை, தீண்டாமை ஒழிப்பு முன்னணி, தம்மம் சிந்தனைப் பேரவை, ஷேடோ நிறுவனம், பாஸ் சிறுவனம், அருந்ததியர் மக்கள் நலச் சங்கம் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர்.

மா.பெ.பொ.க. மாவட்டச் செயலாளர், பொ.சுப்பிரமணியன் மேற்கண்ட தலைப்பில் கருத்துரை வழங்கினார். கருத்தரங்கில் கூட்டாக ஒடுக்கப்பட்ட தலித் மக்களின் சமூக, பொருளாதார அரசியல் பிரச்சனைகளில் செயல்படத் தீர்மானிக்கப்பட்டது. இறுதியாக சிறுமி நா.செம்மொழி பெரியாரின் பெண்ணுரிமைப் பற்றி சிறப்பாகப் பேசினார்.

தமிழ் உரிமைக் கூட்டமைப்பு சார்பாக 26.9.2020 அன்று கீழ்பென்னாத்தூர் ‘உங்கள் சிந்தனைக்கு’ தகவல் பலகை இடத்தில் விவசாயிகளுக்கு எதிரான மத்திய அரசின் வேளாண் திருத்தச் சட்டத்தை எதிர்த்து கட்டண ஆர்ப்பாட்டம் அதில் மா.பெ.பொ.க. மாவட்டச் செயலளர் பொ.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. பெ.பாலகிருஷ்ணன், வீ.உதயகுமார், கோ.கோதண்டராமன், மு.பழனி, பெ.அண்ணாமலை மற்றும் சிறுவர்கள் நி.கோபிகா, நி.இன்பரசி, அருண் அறிவு, அ.இசையமுது, அ.தமிழமுது, அ.செங்கொடி ஆகியோர் கலந்து கொண்டனர். மத்திய அரசின் வேளாண் திருத்தச் சட்டத்தை எதிர்த்து அனைவரும் எதிர்ப்புக் குரல் கொடுத்தனர். முழக்கமிட்டனர். ஆர்ப்பாட்டம் நிறைவுற்றது.

பெரியாரால் செங்கற்பட்டில் 1925இல் நடந்த சுயமரியாதை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட புரட்சிகரமான 34 தீர்மானங்களை துண்டறிக்கையாக அச்சிட்டு பொது மக்களிடம் வழங்கப்பட்டது.

பி.ஜே.பி.யின். ‘யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன்’ இ.ஆ.ப., இ.கா.ப., பணிக்கான மெயின் தேர்வில் EWS வகுப்பினர் எடுத்த மதிப்பெண் எல்லா வகுப்பினரையும்விடக் குறைவு என்பதைக் கண்டித்தும் முழக்கமிட்டனர். கூட்டம் இனிதே முடிந்தது.

## பெரியார் பற்றாளர் தோழர் வி.தேவராசன் மறைவு



திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் வட்டம், திருவண்ணாமலை சாலையில் வாழ்ந்து வந்த பெரியார் பற்றாளரும், கருப்புச் சட்டை ஆசிரியரும் கீழ்பென்னாத்தூர் பகுத்தறிவாளர் கழகச் செயலாளராகவும் பணியாற்றியவரும் இராமு ரெட்டியார் நடுநிலைப்பள்ளியில் ஆசிரியப் பணி நிறைவு செய்தவரும் சிந்தனையாளன் அலுவலகத் தில் சில காலம் மேலாளராகப் பணி ஆற்றியவருமான வீட்டி லேயே நூல் நிலையம் அமைத்தவருமான தோழர் வி.தேவராசன் 23.6.2020 அன்று மறைந்தார்.

அவருக்குக் கீழ்பென்னாத்தூர் மா.பெ.பொ.க. சார்பிலும் நுகர்வோர் பாதுகாப்புச் சங்கத்தின் சார்பிலும் இறுதி அஞ்சலி செலுத்தி இரங்கல் தெரிவித்தனர். அன்னார், தம் நூல்களைக் ‘‘கீழ்பென்னாத்தூர் நுகர்வோர் பாதுகாப்புச் சங்க நூலகத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்’’ என்று உயிருடன் இருக்கும்போது வேண்டுகோள் விடுத்தார். மற்றும் தன் துணைவியாரிடம் இதனை பொ.சுப்பிரமணியன், சி.இராமநாதன், கோ.கோதண்டராமன் ஆசிரியர் பெ.அண்ணாமலை முன்னிலையில் கூறினார். அன்னாரைப் பிரிந்து வாழும் அவரின் குடும்பத்தார்க்கு நம் கட்சியின் சார்பில் ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

**- மா.பெ.பொ.க.**

## சமூகத் திருவிழா

கீழ்பொன்னாத்தூரில் அருந்ததியர் மக்கள் சங்கம், சோபா தொழிலாளர்கள் நலச் சங்கம், ஸ்டார் இளைஞர்கள் இயக்கம், வீரமங்கை இளம் பெண்கள் இயக்கம் இணைந்து நடத்திய சமூகத் திருவிழா 27.09.2020, ஞாயிறு மாலை 4.00 மணியளில் அந்தோணியார் தெருவில் அமைந்துள்ள சமுதாயக் கூடத்தில் நடைபெற்றது.

ம.தினகரன், தலைவர் சோ.தொ.ந.ச., அவர்கள் வரவேற்புரை மற்றும் நிகழ்ச்சித் தொகுப்புரையாற்றி னார். ச.க.அன்பு, தி.மு.க. நகர செயலாளர், பொ.சுப்பிர மணியன், மா.பெ.பொ.க. மாவட்டச் செயலாளர் சட்ட ஆலோசகர் பெயர் பலகை திறந்து வைத்தனர். தோழர் இரா.செல்வி, தோழர் ச.காயத்ரி, வழக்கறிஞர் தோழர் ஜோஸ் அவர்கள் அம்பேத்கர் உருவைப் பொறித்த கொடியை ஏற்றி உரை நிகழ்த்தினார்.

தோழர் ரொசாரியா, தோழர் பெ.பாலகிருஷ்ணன், பா.ம.க., தோழர் மு.தனசேகரன், ஓ.அ.செ.வா.சி.க., தோழர் பொ.சுப்பிரமணியன், மா.செ.மா.பெ.பொ.க ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்.

சே.சங்கர், செயலாளர், சோபா தொழிலாளர்கள் நலச் சங்கம் நன்றியுரையாற்றினார்.

## தோழர் இரா. பத்மநாபன் மறைந்தார்



கூட்டுறவுத் துறையில் துணைப் பதிவாளராகப் பணி யாற்றி ஓய்வு பெற்று சென்னை மாதவரத்தில் வசித்து வந்த தோழர் இரா.பத்மநாபன் 19.09.2020 அன்று மறைந் தார். நல்ல பெரியாரியச் சிந்தனையாளர். புது தில்லியில் 1991 அக்டோபரில் ம.பெ.பொ.க. நடத்திய மூன்று நாள் மாநாடுகளிலும் அதையொட்டி 15 நாள் வட இந்தியாவில் பெரியார் கொள்கைப் பரப்புரைப் பயணத்திலும் பங்கேற்றவர். ஈழ விடுதலைப் போராட் டங்களில் தீவிரமாகப் பங்கெடுத்தவர். அய்யா பழ.நெடுமாறன் தொடங்கிய உலகத் தமிழர் பேரமைப் பின் செயலாளராக இருந்து திறம்பட செயலாற்றியவர். பெரியார்-நாகம்மை அறக்கட்டளையின் வளர்ச்சியி லும் சிந்தனையாளன் இதழ் வளர்ச்சியிலும் துணை நின்றவர். பாலாறு பாதுகாப்பில் மிகவும் ஈடுபாட்டுடன் பங்களிப்புச் செய்தவர். இனிய நற்பண்பாளர். அவர் மறைவு தமிழ்ச் சமூகத்திற்கு இழப்பாகும்.

**அன்னார் மறைவுக்கு மா.பெ.பொ.க.வின் ஆழ்ந்த இரங்கல்.**

## தேன்மொழி தழல் மறைவு



பாவலரேறு பெருஞ்சித்திர னாரின் மகளும் சொல்லாய் வறிஞர் ப.அருளி அவர்களின் துணைவியுமான தேன்மொழி (63) அவர்கள் புதுவையில் 14.9.2020அன்று இயற்கை யானார். சாதி ஒழிப்பு, பெண்ணு ரிமை, தமிழ்மொழிக் காப்பு ஆகிய செயல்பாடுகளில் அக்க றையோடு இயக்கியவர். 'தழல்' என்ற பெயரில் மாத இதழ் ஒன்றினை நடத்தி வந்தார். அவரது இழப்பால் வருந்தும் அருளியார்க்கும் அவரது மகன்களுக்கும் மற்றும் அனைவருக்கும் சிந்தனை யாளன் சார்பில் ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறோம்.

## புதுவை பராங்குசம் மறைவு



தமிழ் எழுத்தாளரும் தமிழ்ப் போராளியுமான புதுவை பராங்குசம் கொரொனா தொற் றின் காரணமாக மறைந்தார் என்பது மிகவும் வருத்தத்திற் குரியது. அவரது குடும்பத்தினர் மற்றும் புதுவை தமிழ் உறவு களுக்கு மா.பெ.பொ.க. சார்பில் ஆழ்ந்த இரங்கல்.

## முருக்கன்குடி இரா.சிவசாமி மறைந்தார்





பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், முருக்கன்குடி, பெ.இராம சாமி-தெய்வானை மகனும் அஞ்சலம் கணவரும் ஆகிய இரா.சிவசாமி அவர்கள் 8.9.2020 செவ்வாய்க்கிழமை மாலை தம் இல்லத்தில் மறைந்தார் என் பதை வருத்தத்துடன் அறிவிக்கி றோம்.

அவருக்கு நீரிழிவு நோய் முற்றி, சர்க்கரை 500 அளவுக்கு உயர்ந்து, அதனால் மறைந்தார்.

அவரை இழந்து வருத்தத்துக்கு ஆளாகி இருக்கும் அவருடைய துணைவியார் அஞ்சலம், அன்பு மகன் கள் சி.சௌந்தரராசன், சி.இளவரசன், சி.செல்வம், மகள் சி.அஞ்சலை ஆகியோர்க்கும் மற்றும் அவருடன் பிறந்த இரா.லோகநாதன், இரா.மார்க்கண்டன் ஆகி யோருக்கும் என் வருத்தத்தையும், என் குடும்பத் தாரின் வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**- வே.ஆனைமுத்து**



# வாழ்க்கைத் துணை ஏற்பு விழா

**மோ. புரட்சித் தமிழன்**
வேளாண் பொறியியல் பட்டயம்

**ப. ஹேமலதா**
முதுகலை ஆங்கிலம்

**2020**
**அக்டோபர்**
**26**
**திங்கள் காலை 9.00 மணி**
**மணமகன் இல்லம்**
வடக்கு மாங்குடி

**தலைமை**

பெரியாரியல் அறிஞர் **வே. ஆனைமுத்து**
பொதுச் செயலாளர், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி
தலைவர், பெரியார் ஈ.வெ.ரா - நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளை, சென்னை

**முன்னிலை**

திரு. **M.R.K. பன்னீர்செல்வம்**
மேனாள் அமைச்சர், கடலூர் மா.செ., ச.ம. உறுப்பினர், தி.மு.க

முனைவர் **தி. சபாபதிமோகன்**
மேனாள் துணைவேந்தர், ம. சு. பல்கலைக்கழகம்

திரு. **துரை. சந்திரசேகரன்**
பொதுச் செயலாளர், திராவிடர் கழகம்

திரு. **வி.வி. சாமிநாதன்**
மேனாள் அமைச்சர், அ.இ.அ.தி.மு.க.

**வாழ்த்துரை**

கோவை **கு. இராமகிருட்டிணன்**
பொதுச் செயலாளர், தந்தை பெரியார் திராவிடர் கழகம்

தோழர் **கே. பாலகிருஷ்ணன்**
மாநிலச் செயலாளர், இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மா)

திரு. **தி. வேல்முருகன்**
நிறுவுநர் – தலைவர், தமிழக வாழ்வுரிமைக் கட்சி

திரு. **V.M.S. சந்திரபாண்டியன்**
துணைத்தலைவர், பாட்டாளி மக்கள் கட்சி

பேராசிரியர் **த. செயராமன்**
ஒருங்கிணைப்பாளர், மீத்தேன் எதிர்ப்புக் கூட்டமைப்பு

திரு. **துரை.கி. சரவணன்**
பொறியாளரணிச் செயலாளர், ச. ம. உறுப்பினர், தி.மு.க

திரு. **ஜெகவீரபாண்டியன்**
தி.மு.க மேனாள் ச. ம. உறுப்பினர், மயிலாடுதுறை

கவிஞர் **அறிவுமதி**
சென்னை

தோழர் **ஆ. வந்தியத்தேவன்**
அமைப்புச் செயலாளர், ம.தி.மு.க.

தோழர் **க. முகிலன்**
தலைமைக் குழு உறுப்பினர், மா.பெ.பொ.க.

**மற்றும் பல சான்றோர் பெருமக்கள்**

*அழைப்பின் மகிழ்வில் ...*

**பா. மோகன்** மா.பெ.பொ.க கடலூர் மாவட்டச் செயலாளர்
வடக்குமாங்குடி - 608 401, கடலூர் மாவட்டம்
கைப்பேசி : **94431 69546 / 63830 09689**

## இந்திய ஒன்றிய அரசின்
## வேளாண் திருத்தச் சட்டங்களைத் திரும்பப் பெறக்கோரி
# ஆர்ப்பாட்டம்






உழவையும் உழவர்களையும் அழித்தொழித்து, பன்னாட்டுக் கொள்ளையர்க்கு வழிவிடும், இந்திய ஒன்றிய அரசு கொண்டுவந்துள்ள, மூன்று வேளாண் திருத்தச் சட்டங்களையும் திரும்பப் பெறக்கோரி பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பின் சார்பில் 26.09.2020 சனிக் கிழமை காலை 11.00 மணிக்கு தமிழ்நாடு முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

வாணியம்பாடியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் நா. மதனகவி, தோழர் செவ்வேள் த.ஒ.வி.இ., மா.பெ.பொ.க நகரச் செயலாளர் சீனி. பழனி, பு.க.க.இ.ம வாணியம்பாடி செயலாளர் புலவர் அ. சகாதேவன், வேலூர் நகரச் செயலாளர் தில்லிபாபு, திருப்பத்தூர் நகரச் செயலாளர் இரா. பகுத்தறிவாளன், தோழர் மு. சிவலிங்கம் மற்றும் பல தோழர்கள் கண்டன உரை நிகழ்த்தித் தளைப்படுத்தப்பட்டனர்.

திருவண்ணாமலை மாவட்டம் கீழ்ப்பென்னாத்தூரில் மா.பெ.பொ.க விவசாய அணிச் செயலாளர் கோ. கோதண்ட ராமன் தலைமையில் நடைபெற்ற ஆர்பாட்டத்தில் மாவட்டச் செயலாளர் பொ. சுப்பிரமணியன் உள்ளிட்ட பல்வேறு தோழர்கள் பங்கேற்றனர்.

மாநில உரிமைகளைப் பறித்து, வேளாண் மக்களை ஒட்டாண்டியாக்கும் பாசிச பா.ச.க தலைமையிலா இந்திய ஒன்றிய அரசை எதிர்த்துப் போராடுவோம்.

**உழவையும், உழவரையும் பாதுகாப்போம்.**
**மாநில உரிமைகளை வென்றெடுப்போம்.**

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி - அக்டோபர்-2020

| | | |
|---|---|---|
| **இரா.பச்சமலை** | சென்னை | 1250/- |
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **பாவேந்தன்** | அரக்கோணம் | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **மதனகவி** | வாணியம்பாடி | 500/- |
| **சோ.அண்ணாதுரை** | பெங்களூரு | 500/- |
| **இரா.பகுத்தறிவாளன்** | திருப்பத்தூர் | 250/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி | வாலாசாபேட்டை | 200/- |
| **வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| **திருமதி. சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - அக்டோபர்-2020

| | | | |
|---|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... | 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... | 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... | 100/- |


**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050.
அச்சிட்டோர் : **ஸ்ரீ மூகாம்பிகை ஹை-டெக் பிரிண்ட்ஸ்,** எண்.24, ஆயில் மாங்கர் தெரு (வாணியர் தெரு)
(ஜாம் பஜார் மார்கெட் எதிரில்) திருவல்லிக்கேணி, சென்னை - 600 005. பேசி : 044-28484457

Printed by **SREE MUGAMBIKAI HI-TECH PRINTS** No.24, Oil Monger Street (Vaniyar Street), Opp. Zam Bazaar Market, Triplicane, Chennai - 600 005. Ph : 044-28484457 and Published by V. Anaimuthu on behalf of Marxist Periyarist Communist Party, No.277/2, Chennai-Tiruvallur High Road, Ambattur, Chennai-50. Editor : **V. ANAIMUTHU**